Registered at the G. P. O. as a Newspaper

விலை சதம் 20

# ஈழநாடு

ஈழநாடு
ஆண்டுச் சந்தா
ரூபாய் 10-00
தனிப்பிரதி
சதம் 20

தேசிய வார இதழ்

மலர் 1. யாழ்ப்பாணம், விகாரி, ஐப்பசி 14- ஆம் நாள். ரபியுலானி பிறை 28 (31-10-59) சனிக்கிழமை இதழ் 39.

# பண்டாரநாயக்கா படுகொலையைப்பற்றி புதிய இரகசியங்கள் அம்பலமாயின

## "விமலாவைப்போல் ஸ்டான்லிக்கும் கல்தா கொடுக்க வேண்டும்"; கொள்ளைக்காரரின் நண்பர் அவர்

### தகநாயக்கா தலை தப்பியது: ஆனால் தார்மிக வெற்றி எதிர்க்கட்சிகளுக்கே

— நமது அரசியல் நிருபர் —

கொழும்பு ஒக். 31

**ஆறு நியமன அங்கத்தினரின் தயவினால் தகநாயக்கா மந்திரி சபையின் உயிர் தப்பியது. எதிர்க்கட்சியினர் கொண்டுவந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு சாதகமாக 43 பேர்களும் பாதகமாக 48 பேரும் வாக்களித்தனர். தீர்மானம் தோற்றாலும், இம் முடிவு தங்களுக்குக் கிடைத்த தார்மிக வெற்றி என்றே எதிர்க்கட்சிகள் சபையிலே சந்தோஷ ஆரவாரம் செய்தனர்.**

**இத் தீர்மானத்தின் முடிவைவிட, சபையில் நடந்த விவாதத்தின் பயனாக, பண்டாரநாயக்காவின் படுகொலையைப்பற்றி பல ரகசியங்கள் அம்பலமாயின. எதிர்க்கட்சி பீரங்கிகள், மணிக்கணக்காக, பிரதமர், நிதிமந்திரி இவர்கள் மீது தாக்குதல் நடத்தினர். குனிந்த தலை நிமிராமல் இதை எல்லாம் மௌனமாக, மிகப் பொறுமையாகக் கேட்டுக்கொண்டிருந்தனர், பிரதமர் தகநாயக்காவும், நிதி மந்திரியும்.**

**நிதிமந்திரி ஸ்டான்லியை வேலையிலிருந்து உடன் நீக்கிவிடவேண்டுமென்று பலர் வற்புறுத்தினர். அரசாங்கக் கட்சியிலே திறமையான பேச்சாளர் ஒருவர்கூட இல்லை.**

நேற்று வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு பார்லிமெண்ட் சபைக் கூட்டம் ஆரம்பமாயிற்று. வெளியே பலத்த பொலிஸ்படை சபையை முற்றுகையிட்டிருந்தது. பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் உட்பட பல பெரிய அதிகாரிகளும், ரகசிய பொலிசாரும் காவல் புரிந்தனர். ஒரு பொலிஸ் அதிகாரியைக் கேட்டேன். மாலையில் ஏதாவது அசம்பாவிதம் நடக்குமென்று எதிர்பார்ப்பதாயும், அதனால் தான் அதிக ஜரூராக உள்ளதாயும் தெரிவித்தார். நிதிமந்திரியின் சகோதரரும் பொலிஸ் அதிகாரியுமான ஸிட்னிசொய்ஸா விசேஷ கலரியிலிருந்தார்.

முதலில் இரு நியமன மெம்பர்களே சபைக்கு வந்திருந்தார்கள். என்றுமேயில்லாதபடி இப்போது 6 நியமனமெம்பர்களுக்கும் புதிய மதிப்பும் முக்கியமும் ஏற்பட்டுள்ளது. அவர்கள் கையில்தான் அரசாங்கத்தின் உயிருமுள்ளது.

பிரதமர் திரு. தகநாயக்கா காலில் செருப்பும், கழுத்தில் தங்கச் சங்கிலியும், வெள்ளை ஷர்ட்டும், வேட்டியும் அணிந்து, வெல்வெட் ஆசனம் போட்ட தமது நாற்காலியில் அமர்ந்தார். அவர் முகத்திலோ வேறு மந்திரிகள் முகத்திலோ அருளே இல்லை. எதிர்க்கட்சி பீரங்கிகள் காலை 10 மணி முதல் இரவு 9 மணி வரை பலமாக முழங்கின. இதுவரை, எந்த மந்திரி சபைக்கும் பதவிக்கு வந்த ஒரு மாதத்தில் நம்பிக்கையில்லாப் பிரேரணையை எதிர்நோக்க வேண்டிய சங்கடம் ஏற்படவில்லை.

எதிர்க்கட்சித் தலைவர் டக்டர் என். எம். பெரேரா இரு கைகளிலும் பெரிய பெரிய "பயில்" கட்டுகளை எடுத்துக் கொண்டு சபைக்கு வந்தார்.

மேலே சுற்றியுள்ள பொது ஜன "கலரி" எல்லாம் பொலிஸ் மயம். முதல் வரிசையில் மட்டும் பத்திரிகைக்காரர்கள். ஐரோப்பிய, அமெரிக்க நிருபர்கள் டில்லியிலிருந்து வந்திருந்தனர். 'பாவம்' பொது மக்கள் தான் யாருமில்லை.

சபை முதல்வர் ஸில்வாவும் முதலில் வரவில்லை. ஆஸ்திரேலியாவிலிருந்து ஆர். ஈ. ஜயதிலகாவும் வரக்காணோம். அவருக்கு மேலும் 3 மாத லீவு கொடுக்கவேண்டுமென்று சபை முதல்வரின் சார்பாக பிரதமர் பிரேரித்தார். அவசரமாகத் திரும்பிவர அவருக்கு விமானம் கிடைக்கவில்லையாம். இதனால் அரசாங்கக் கட்சிக்கு மற்றொரு வாக்கு குறைந்தது.


### முதல் வெடி

முதலில் சில நிமிஷம் கேள்வி நேரத்தின்போதே, கெனமன் முதல்வெடி சுட்டார். காலஞ்சென்ற பண்டார நாயக்காவின் மரணத்தை ஒட்டி, ரேடியோவில் புத்தரக்கிதாவை யார் பேசவிட்டது? ஏன்? என்று பாணங்கள்தொடுத்தார். தபால் மந்திரி அங்கு இல்லை. அவருக்குப் பதில் பிரதமரே, 13பிக்குகளில் அவரும் பேச அனுமதிக்கப்பட்டதாகச் சொன்னார். உப கேள்விகளுக்கு பதில் சொல்ல முடியாமல் பிரதமர் வாய்மூடி மௌனியாக இருந்தார்.

### "பீரங்கிப் பிரயோகம்"

பலத்த எதிர்க் கட்சியின் கரகோஷங்களுக்கிடையே காலை 10—12மணிக்கு என். எம். பெரேரா அரசாங்கத்தின் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைப் பிரேரணை செய்து சுமார் 2மணி நேரம் "பீரங்கிப் பிரயோகம்" செய்தார். முதலில் 45நிமிஷமே பேச இருந்தாராம். ஆனால் ஆவேசம் வந்தவர் போல் நேரம் போனதை உண

(8 ஆம் பக்கம் பார்க்க)



Wolseley Pumps

"வூல்ஸிலி" பம்புகள்

தோட்டக்காரர்களினால் பாராட்டப்படுகின்றன.

நீங்கள் நீர் இறைக்கும் இயந்திரம் வாங்க எண்ணினால் வூல்ஸிலியை நம்பி வாங்குங்கள்.

எல்லா உப-பாகங்களும் எப்பொழுதும் கிடைக்கும்.

ஏகவிநியோகஸ்தர்கள்:

ஓட்டோஸ் லிமிட்டெட்

ஆஸ்பத்திரி வீதி, : : யாழ்ப்பாணம்.
போன்: 496 தந்தி: "ஓட்டோஸ்" யாழ்ப்பாணம்

### வாழ்த்துக்கள்

'ஈழநாடு' வாசகர்களுக்கும் அன்பர்களுக்கும் விளம்பர கர்த்தாக்களுக்கும் விற்பனையாளருக்கும் எமது தீபாவளி வாழ்த்துக்கள்.

புதிய செனட்டர்கள் தெரிவு

## திரு. நடேசனுக்கு மீண்டும் பதவி

செனேட் சபைக்கு புதிதாக ஐந்துபேர்களை நேற்று ஜனப்பிரதிநிதிசபை தெரிவு செய்தது.

1. திரு. ஜயசேன (ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி)
2. டி. பி. டி. சொய்ஸா (ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி)
3. சந்திரா குணசேகரா (சம சமாஜக் கட்சி)
4. ரெஜ்ஜிபெரேரா (புரட்சிவாத சமசமாஜ கட்சி)
5. எஸ். நடேசன்(சுயேச்சை)

இவர்களில் ஒரே தமிழரும் 12 வருஷகாலம் செனேட்டில் சேவை செய்தவருமான திரு. எஸ். நடேசனை தமிழரசுக் கட்சியோ, தமிழ் காங்கிரஸோ ஆதரிக்கவில்லை என்று தெரிகிறது. திரு. நடேசனின் பெயர் திரு. இரியகொலவால்பிரேரிக்கப்பட்டு, திரு. பி. கந்தையாவால் அனுவதிக்கப்பட்டது. தமிழரசுக் கட்சி, முதலாவது வாக்குகளை, சமசமாஜக் கட்சிக்கும், இரண்டாவது வாக்குக்களை யு. என். பி.க்கும் அளித்ததாயும் தமிழ் காங்கிரஸ் கட்சி யு. என். பி. அபேட்சகரை ஆதரித்ததாயும் தெரியவருகிறது.

### நியமன அங்கத்தினர்

திரு. குர்பான் ஆதமலி, தோமஸ் அமரசூரியா, லாவன்டைன் ஜயவிக்கிரமா, எம். பி. டி சொல்ஸா (மூத்தவர்) ஏ. எம். ஏ. அஸீஸ் ஆகியோரை அரசாங்கம் புதிய செனேட்டர்களாக நியமிக்கலாமென்று கூறப்படுகிறது.

செனேட்சபைக்கு நடைபெற்ற தேர்தலின் போது மாஜி மந்திரி விமலா, சபைக்கு வந்து எதிர்க்கட்சியில் அமர்ந்து வாக்களித்துவிட்டுச் சென்றார். ஆனால் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின்போது அவர் சபைக்கு வரவில்லை.

## நிதிமந்திரி ஸ்டான்லி சொய்சாவுக்கு கல்தா?

— நமது அரசியல் நிருபர் —

நம்பிக்கையில்லாத் தீர்மானம் தோற்றாலும், நிதிமந்திரி ஸ்டான்லி சொய்ஸா மந்திரி சபையிலிருந்து எந்தச் சமயமும் விலக்கப்படலாமென்று இங்கு அரசியல் வட்டாரங்களில் பேச்சுக்கள் அதிகம் அடிபடுகின்றன.

விவாதத்தின்போது பலரும் நிதி மந்திரியையே அதிகம் தாக்கினர். அவர் விலகியிருப்பின், ஏற்கெனவே பண்டார நாயக்காவின் மந்திரி சபையிலிருந்து விலகிய எம். ஈ. பி. அங்கத்தவர்கள் வின்சென்ட் சுபசிங்க, நிமால் கருணதிலக, தேமிஸ், எல்.ஏ. ராஜபக்ஸ, ஹெட்டி ஆராய்ச்சி முதலிய 5பேர் மீண்டும் அரசாங்கக் கட்சியில் சேர்ந்திருப்பார்கள். திரு.சுபசிங்க புதிய நிதிமந்திரியாக நியமிக்கப்பட்டிருப்பார்.

ஸ்ரீமதி பண்டார நாயக்கா அத்தனகலை தொகுதிக்கு, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் சார்பாக அபேட்சகரா போட்டியிட ஒப்புக்கொண்டு விட்டதாகத் தெரிகிறது.

நிதிமந்திரி ஸ்டான்லி சொய்ஸா பழைய ஏற்பாட்டின்படி ஆஸ்திரேலியா செல்லுகையில், ஜனாப் முஸ்தபா தற்காலிக நிதிமந்திரியாகக் கடமைபார்ப்பார்.

## வரி விளம்பரம்

### அறிவித்தல்

புற்று நோயைத் தமிழ் மருந்தால் தடையின்றி மாற்றலாம். உலகினிலே கொடிய ரோகம் புற்று நோய் என்பது எல்லோரும் ஒப்புக்கொள்ளும் உண்மை. இந்நோய் சத்திரசிகிச்சை, ஒளி சிகிச்சை மூலமே குணப்படலாமே தவிர தமிழ் மருந்தினலல்ல என்ற அபிப்பிராயம் இனி நிலவ இடமில்லை. மீட்க முடியாதெனக் கைவிடப்பட்ட அநேகர் **யோகீஸ்வரரசம்** என்ற பெயருடைய தமிழ்மருந்தினல் குணமடைந்துள்ளனர். இம்மருந்திற்கு அநேக நற்சாட்சிப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. புற்று நோயைப் பற்றி என்னுடன் ஆலோசியுங்கள்.

**பொ- செல்லையா**
ஆயுள்வேத வைத்தியர்
கந்தர்மடம், யாழ்ப்பாணம்

சிறந்த
★ சினிமா சிலைட்
★ விளம்பரச் சித்திரங்கள்
★ புளொக்குகள்
முதலியவற்றிற்கு:-
**கலாநிலையப் பதிப்பகம்**
**சிவன் கோவில் மேலை வீதி,**
**யாழ்ப்பாணம்.**


# ஆசிரியருக்குக் கடிதங்கள்

## யாழ்ப்பாணம் பொது நூல் நிலையம்

**யா**ழ்ப்பாணத்தில் அண்மையில் திறந்து வைக்கப்பட்ட பொது நூல் நிலையத்தின் கர்த்தாக்களில் ஒருவர்தான் காலஞ்சென்ற திரு. கே. எம். செல்லப்பா. திறப்பு விழாவில் அவரைப் பற்றிப் பல பேச்சாளர்கள் புகழ்ந்து பேசினர். அவருடைய சேவைகளில் ஒன்றை நான் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். அவர் யாழ்ப்பாணத்துக்கென ஒரு பொது நூல் நிலையம் நிறுவும் முயற்சியுடன் நின்றுவிடாது, கிராமங்களிலும் பொது நூல் நிலையங்கள் நிறுவுவதற்கான பணிகளில் ஈடுபட்டிருந்தார். யாழ்ப்பாணம் பொது நூல் நிலையத்துக்காக வசூலிக்கப்பட்ட பணத்தொகையில் மிகுதியாக விருந்த சிறு தொகையை அவர் கிராமங்களுக்கு விநியோகம் செய்தார். இந்த நோக்கத்துக்காக, அவர் ஒரு பொது நூல் நிலைய சங்கத்தையும் உருவாக்கினர். இச்சங்கத்துக்கு திரு. ஸி. குமாரசுவாமி (ஸி. ஸி. எஸ்) தலைவராகவும், டக்டர் மக்கின்ரயர் உப-தலைவராகவும் இருந்தனர். திரு. கே.எம். செல்லப்பா அதன் காரியதரிசியாகக் கடமை யாற்றினர். இச்சங்கத்தின் மூலமாகப் பொது நூல் நிலையத்துக்குத் தேவையான பணம் சேகரிக்கப்பட்டது. பொது நூல் நிலையம் நிறுவுவதற்கு, திரு. கே. எம். செல்லப்பா முன்னணியில் நின்றபோதும், இச்சங்கத்தின் உதவி அவருக்கு இல்லாவிடில், அவருடைய பணி மிக்க கஷ்டமாகவிருந்திருக்கும்.

**எஸ். ஏ. வைத்தியலிங்கம்.**
23, சுவாமியார் தெரு,
யாழ்ப்பாணம்.

## இருட்டும் திருட்டும்

மழை உழவர்களுக்கு மட்டும் உதவவில்லை. இன்று அது கொள்ளைக் கூட்டத்துக்கும் உதவுகின்றது.

யாழ்ப்பாணத்தில் பணம் கொள்ளையடிக்கப் படுகின்றது, சைக்கிள்கள் திருட்டுப் போகின்றன. இதற்கு மழையிருள் தக்க சூழ்நிலையை திருடர்களுக்கு அமைத்துக் கொடுக்கிறது.

இருள் சூழ்ந்ததும் தம் வீட்டை விட்டுப் பிறர் வீட்டுக்குள் புகுந்து இரும்புப் பெட்டிகளில் கை வைக்கத் தொடங்குகின்றார்கள். பிறர் பாடுபட்டுத் தேடிய பணத்தைத் தாம் பாடுபடாமலே கொள்ளையடிக்கலாம் என எண்ணும் இவர்கள் மீது பாதுகாப்பதிகாரிகள் ஒரு கண் வைத்திருக்க வேண்டியது அவசியமாகின்றது. இல்லாவிட்டால் குளிரால் நடுங்கும் மக்கள் இவர்களைக் கண்டும் நடுங்க வேண்டிய நிலைமை நாட்டில் அதிகரிக்கும்.

பொலிஸ் அதிகாரிகள் இந்தக் கும்பலைப் பூண்டோடு ஒழிக்கத்தக்க நடவடிக்கை எடுப்பது அவசியம்.

சி. நா.
46, கொட்டடி,
யாழ்ப்பாணம்.

## தமிழ் எழுத்தாளர்களின் பொது மாநாடு
### கொழும்பில் நடைபெறும்

இலங்கையிலுள்ள தமிழ் பேசும் எழுத்தாளர்களின் பொது மாநாடொன்றை இவ்வருடம் டிசம்பர் இறுதியில் கொழும்பில் நடாத்துவதென்று சமீபத்தில் கூடிய இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் தலைமைக்குழு தீர்மானித்துள்ளது.

இலங்கைத் தமிழ் எழுத்தாளர்களை ஒரு பொது இடத்தில் சந்திக்கச்செய்வதும், எழுத்தாளர்களுக்கிடையில் பரஸ்பரம் கருத்துக்களைப் பரிமாறிக்கொள்வதும், சகலஎழுத்தாளர்கள் மத்தியிலும் நேரடியான பரிச்சயத்தை ஏற்படுத்தி அவர்களுக்கிடையில் நல்லெண்ணத்தையும் மிக நெருங்கிய நட்புறவையும் வளர்ப்பதும் இம் மாநாட்டின் முக்கிய நோக்கங்களாகும்.

இம் மாநாடு விவாதிக்க வேண்டிய பிரச்சினைகள், நிறைவேற்றவேண்டிய தீர்மானங்கள் பற்றிச் சகல எழுத்தாளர்களும் தங்கள் கருத்துகளைத் தெரிவிக்கலாம்!

இந்த மாநாட்டில் ஆரம்ப எழுத்தாளர்களும் கலந்துகொள்ளலாம். மாநாடு இரண்டு தினங்கள் (சனி, ஞாயிறு) நடைபெறும்.

இந்த மாநாட்டில் பிரபல சிங்கள எழுத்தாளர்கள் சிலர் கலந்துகொள்வார்கள். அத்துடன் ஆசிய—ஆபிரிக்க எழுத்தாளர்களின் சர்வ தேசிய தலைமைக் காரியாலயத்தைக் கொழும்பில் அமைப்பதற்காக இலங்கை வரவிருக்கும் ஆசிய-ஆபிரிக்க நாடுகளின் பிரசித்தமிக்க எழுத்தாளர்களும் பங்குபற்றுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## சுகாதார வைத்தியர் இட மாற்றம்


டக்டர் எஸ். இராஜசூரியர்

வலிகாமம் வடக்குப் பகுதியின் சுகாதார வைத்தியரும் காங்கேசன்துறை விமானநிலையச் சுகாதார அதிகாரியுமான டக்டர் எஸ். இராஜசூரியர் அடுத்தமாதம் 16 ஆம் திகதியிலிருந்து மட்டக்களப்புக்கு மாற்றப்பட்டுள்ளார்.

1958 ஆம் ஆண்டில், இவருடைய முயற்சியால் நடாத்தப்பட்ட சுகாதாரவாரக் கொண்டாட்டங்கள் இலங்கை முழுவதிலும் மிகச் சிறந்தவையெனக் கணிக்கப்பட்டு மைக்கல் குணரத்தினவின் போட்டிக்கேடயம் வலிகாமம் வடக்கிற்கு அளிக்கப்பட்டிருக்கிறது. இவ்வாண்டுச் சுகாதாரவாரக் கொண்டாட்டமும் வலிகாமம் வடக்கிற் சிறந்த முறையில் கொண்டாடப்பட்டது.

## இறைவனை மறந்ததே இழிநிலைக்குக் காரணம்
### பாராட்டு விழாவிற் பண்டிதமணியின் கூற்று

**சை**வாசிரியகலாசாலை முன்னள் தலைமைத் தமிழ் விரிவுரையாளர் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களுக்கு மட்டுவில் தெற்கு வேதக்கேணிக் கந்தசாமி கோயிலில் சென்ற சனிக்கிழமை பிற்பகல் சாவகச்சேரிப் பிரதிநிதி திரு. வி. என். நவரத்தினம் அவர்கள் தலைமையில் பாராட்டுவிழா நடைபெற்றது.

திரு. நவரத்தினம் எம். பி. பண்டிதமணிக்குப் பொன்னுடை போர்த்தினர். அவர் தமிழுக்கும், சைவசமயத்துக்கும் செய்துள்ள அரும்பணிகளை எடுத்துரைத்தார்.

பண்டிதமணியவர்கள் தமக்கு அளிக்கப்பட்ட உபசாரத்துக்கு நன்றி தெரிவித்துவிட்டுப்பேசியதாவது:

இன்று மக்கள் இறைவனை மறந்து விட்டார்கள். அதனலேதான் தமிழர்கள் இந்த இழிநிலையை இன்று எய்தியிருக்கிறார்கள். இறைவனை ஒரு காலத்திலே நிந்தனை செய்த காரணத்தாலேயே பென்னம் பெரிய தேவர்கள் சின்னஞ் சிறிய அசுரர்களுக்கு மீன் சுமந்தார்கள். நாமும் அதே நிலையிலேதான் இருக்கின்றோம்.

இப்படியான கஷ்ட நிலைகளிலே நாம் செய்யத்தக்கது என்னவென்று யோசிப்பது அவசியமாகும். இவற்றிலிருந்து நாம் விடுபடக் கையாள வேண்டிய ஒரேயொரு வழி கந்தபுராணத்தை யோதுதலே. ஸ்ரீ ல ஸ்ரீ ஆறுமுகநாவலரும் இதனையே கூறியிருந்தார்கள்.

பண்டிதமணியின் குணதிசயங்களை பண்டிதர் என். சிவலிங்கம், திரு. என். பரராசசிங்கம் ஆகியோரும் எடுத்துரைத்தனர். முத்தமிழ்மணி மணி பாகவதர் அவர்களின் கதாப் பிரசங்கமும் நடைபெற்றது.

## ஈழத்தின் இயற்கைக் காட்சிகள்

★

### 'போட்டோ' அழகுப்போட்டி: மூன்று பரிசுகள்

இலங்கையின் இயற்கை அழகு உலகப் புகழ் பெற்றது. யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருக்கோணமலை, மலைநாடு உட்பட இலங்கையின் பல பகுதிகளிலும் இயற்கை அன்னையின் வனப்புக்கள் மக்கள் மனத்தைப் பெரிதும் கவர்ந்து ஈழ நாட்டுக்குப் பெருமை அளிக்கின்றன.

நீங்கள் விரும்பும் அழகுக் காட்சிகளைப் படம் பிடித்து **கலைப்பகுதி, ஈழநாடு, தபாற் பெட்டி எண் 49, யாழ்ப்பாணம்.** என்ற விலாசத்துக்கு அனுப்புங்கள்.

இப்படங்களில் தரமானவற்றை அவ்வப்போது 'ஈழநாடு' இதழ்களில் பிரசுரித்து, சன்மானம் அளிப்போம். ஒரு குறிப்பிட்ட காலத்துக்குப் பிரசுரமான படங்களைத் தொகுத்து, அவற்றுள் மிகச் சிறந்த மூன்று போட்டோக்களை கலைவல்லுனர் மூவர் அடங்கிய குழு தெரிந்தெடுப்பார்கள். இவற்றுக்கு முறையே ரூ 50, ரூ 25, ரூ 15 என மூன்று பரிசுகளை **ஈழநாடு** அளிக்கும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

- போட்டோவின் அளவு, 6" X 4"
- முடிவு திகதி 31-12-59

படங்களுடன் அதுபற்றிய குறிப்பும் அனுப்பப்படவேண்டும். படம் அனுப்புபவரின் பெயரும் விலாசமும் கடதாசியில் தெளிவாக எழுதிப் படத்துடன் இணைத்தல் வேண்டும்.

# "இறுதி யாத்திரை"யின் சிங்களப் பதிப்பு

## அனுராதபுரத்தில் இலவசப் படக் காட்சி
### வருண பகவான் கருணை பொழிந்தார்

நமது நிருபர்

அனுராதபுரம்.

காலஞ்சென்ற பிரதமர் திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவின் இறுதிச் சடங்குகளைத் தெளிவாகக் காட்டுகின்ற "இறுதி யாத்திரை" என்ற செய்திப் படத்தின் சிங்களப் பதிப்பு சனிக்கிழமை இரவு 8-45க்கு அனுராதபுரம் முற்றவெளியில் மக்களுக்கு இலவசமாகக் காட்டப் பெற்றது.

திரு. பண்டாரநாயக்கா, பௌத்தராக மாறிய காலத்திலிருந்து அனுராதபுரத்தைப் புதுப்பித்துப் பாதுகாக்கும் திட்டத்தில் மிகுந்த அக்கறை கொண்டு விளங்கியவர் என்பதும், சமீபத்தில் அவர் அனுராதபுரத்துக்கு விஜயம் செய்த காட்சிகள் பல சேர்க்கப்படும் என்பதும் மக்கள் அறிந்துள்ளதால் கொட்டும் மழையையும் பொருட்படுத்தாது திரளாகக் கூடினர்.

திரு. பண்டாரநாயக்காவின் பொது வாழ்க்கையில் உள்ள முக்கிய திருப்பங்களையும் சம்பவங்களையும் படம் விவரமாகக் காட்டுகின்றது. அன்றையத் தினம் அனுராதபுரம் ரூவான்வெலிசாய விகாரையில் விசேஷ பிரார்த்தனைகளையும் நடாத்தினர்கள். பண்டாரநாயக்கா நினைவு நிதிக்கு என்று மக்களிடமிருந்து நன்கொடையும் வசூலிக்கப்பட்டது.

புஷ்பதான சபை போன்ற சில தாபனங்கள் மறைந்த பிரதமரின் நினைவையொட்டி அன்னதானம் வழங்கின என்பதும், சில வைபவங்களில் அனுராதபுரம் அரசாங்க அதிபர் திரு. நிஸங்கா பி. விஜேரத்தின உட்படப் பிரமுகர்கள் பலர் கலந்து கொண்டார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

### வருணபகவான் கருணை

கடும் வரட்சியால் பாதிக்கப்பட்டிருந்த அனுராதபுரப் பகுதியில் இறுதியாக வருண பகவான் கருணை காட்டிவிட்டார். கடந்த ஒரு வாரமாக பலத்த மழையும் பெய்துள்ளபடியால், வறண்டுகிடந்த குளம் குட்டைகளின் நீர்மட்டம் உயர்ந்துள்ளது.

பதினலு நாட்களுக்கு மட்டுமே தண்ணீர் போதுமானதாக இருந்தது என்று அறிவிக்கப்பட்ட நிலைமை மாறிவிட்டிருந்த போதிலும், மீண்டும் வேளாண்மை செய்யும் நிலையுண்டாகவில்லை என்று கூறப்பட்டது. ஆயினும் வராப் பிற்பகுதியில் பெய்த பெருமழையின் பலனகத்தகுந்தசூழ்நிலையுண்டாகியுள்ளது என்று நம்பப் படுகிறது.

### இலவசப் படக்காட்சி

அனுராதபுரம் வாலிப முன்னேற்றக் கழகம், கொழும்பிலுள்ள ஐக்கிய இராச்சியத் தகவற் பகுதியினரின் ஆதரவில் இம்மாதம் 30-ந் தேதி தொடக்கம் இலவசப் படக்காட்சிகளை நடாத்துகிறார்கள்.

பிரிட்டனின் தொழிற்துறை, அறிவியற்துறை, விவசாயத்துறை, கல்வித்துறை போன்ற பல துறைகளின் வளர்ச்சியையும் முன்னேற்றத்தையும் விளக்கும் பல படங்கள் இந்த இலவசப் படக்காட்சித் திட்டத்தில் இடம் பெறும்.

இளைஞர்களின் வாழ்க்கையிலே ஓய்வுப் பொழுதும் பயன்தரக் கூடியதாக விளங்க வேண்டும் என்பதற்காகவே இந்தப் படக்காட்சிகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன என்று வாலிப முன்னேற்றக் கழகச் செயலாளர் திரு. வை. நாகராசன் தெரிவித்தார்.

இப்படக்காட்சிகள், விவேகானந்த வித்தியாலயம், கன்னியர் மடம், புதுநகரச் சனசமூக நிலையம், நிவத்தக சைத்திய வித்தியாலயம், கம்பிரிகஸ்வவ கலவன் பாடசாலை, அர்ச் சூசையப்பர் கல்லூரி ஆகிய இடங்களில் காட்டப்பெறும்.

தீபாவளிக் கொண்டாட்டத்தின் கருத்தையும் முக்கியத்துவத்தையும் தோட்டத் தொழிலாளர் இன்றும் உணர்ந்திருக்கிறுர்கள். ஆனல், காலம் மாற மாற அதன் தன்மையும் மாறி வருகிறது.

# தோட்டத் தொழிலாளர் கொண்டாடும் ஒளித் திருநாள்

— சி. வி. வேலுப்பிள்ளை —

பொங்கலும் தீபாவளியும் பூசையுமே தோட்டங்களில் பிரதான கொண்டாட்டங்கள். முக்கியத்துவத்தில் தீபாவளியைப் பொங்கலுக்கு இரண்டாவதாகச் சொல்லலாம். ஆனல் அது பொங்கலுக்கு இரண்டொரு மாதங்களுக்கு முன்னலேயே வருகிறது. அதன் வருகையை தோட்டத் தொழிலாளர் வரவேற்கும் ஆவலையும் உற்சாகத்தையும் பார்த்தால்உண்மையில் பரிதாபமாயிருக்கும். ஏனென்றுல் அவர்களுடைய வரண்டு போன வாழ்க்கையில் ஏற்படும் மகிழ்ச்சிக்குரிய சம்பவமாகும் தீபாவளி. அவர்களுக்கு அது ஆறுதலையும் அமைதியையும் தரும். வேலையிலிருந்து ஓய்வையும் கொண்டு வரும். எனவே தொழிலாளி அதை உள்ளம் குளிர்ந்த ஆனந்தத்துடன் வரவேற்பான்.

ஆண்களும் பெண்களும், வயதானவர்களும் வாலிபர்களும், தீபாவளிக்கு இன்னும் எத்தனை நாட்கள் இருக்கிறதென்று கணக்குப் போட்டுக் கொண்டேயிருப்பார்கள். ஒரு மாதத்துக்கு முன்பதாகவே, பெண்கள் வேலை முடிந்த ஓய்வு நேரங்களில், வெள்ளைக் களிமண் சேகரித்து தூசியும் புகையும் மண்டிக் கிடக்கும் தங்கள் மனைகளை உள்ளும் புறமும் துடைத்துச் சுத்தம் செய்வார்கள். முன்புறச் சுவர்களிலும் வெளித் திண்ணைகளிலும் கோலம் போடுவார்கள். மஞ்சளும் சிவப்பும் கலந்த இக்கோலங்கள் ஜாமினி ரேயின் சித்திரங்களை நினைவூட்டும்.

## தீபாவளிப் பொருள்கள்

இந்த மாதத்தில் குடும்பத்திலுள்ள ஒவ்வொருவரும் முழுச் சம்பளம் வாங்குவதற்காக ஒழுங்காக வேலைக்குப் போவார்கள். தீபாவளித்தினம் பத்தாம் திகதி கழிந்து பல நாட்களுக்குப் பின் வருமாகில் தோட்ட முதலாளிகள் ஒரு விசேஷ தீபாவளிப்படி கொடுப்பார்கள். தீபாவளிக்கு முந்திய ஞாயிற்றுக்கிழமை குடும்பத் தலைவர்களாகிய தாயும் தகப்பனும் கடைவீதிக்குச் சென்று வேண்டிய சாமான்களை வாங்குவார்கள். தீபாவளிக்கு வாங்கப்படும் பொருள்கள் பொங்கற் சாமான்களைப் போலிருக்கமாட்டா. மகளுக்கும் மருமகளுக்கும் சேலை, ரவிக்கை முதலியன, பையன்களுக்கு வேட்டியும் சாரமும், விசேஷ விருந்துக்காகவும் பலகாரங்களுக்காகவும் பச்சரிசி, சர்க்கரை முதலியன—இவைபோக அந்த சந்தர்ப்பத்துக்கு இன்றியமையாத சாராயமும், ஒரு போத்தலோ இரண்டு போத்தலோ வாங்கப்படும்.

(ஐந்து வருடங்களுக்கு முன்பு, 60.000 தொழிலாளர் வரை வேலை செய்யும் ஹட்டன் (தொப்பி தோட்டம்) குறிச்சியில், 50,000 க்கு மேற்பட்ட சாராயப் போத்தல்கள் விலைப்பட்டன. பதினைந்து வருடங்களுக்கு முன் தீபாவளிச் சாமான்கள் தலையில் சுமந்து வீட்டுக்கு கொண்டு போகப்பட்டன. இன்று வீடு செல்லும் தூரம் ஒரு மைலாயிருந்தாலும் அவை காரில்தான் வீடு வந்து சேரும்).

துணிமணிகள், வளையல்கள் முதலியவற்றை விற்கும் வியாபாரிகள் தங்கள் சரக்குகளைச் சுமந்து கொண்டு "லைன்"களுக்கே வந்து விடுவார்கள். எல்லோரும் பெருத்த ஆரவாரத்துடன் அவர்களைச் சுற்றி வளைத்து நின்று சேலைகளையும், ரவிக்கைத் துணிகளையும் சிறு பையன்களுக்கு பெனியன்களையும் குழந்தைகளுக்கு விளையாட்டுச் சாமான்களையும் வாங்குவார்கள். வாங்கிய பொருள்களை அணிவதிலும் பார்க்க தீபாவளிக்கு நாமும் ஏதோ வாங்கி விட்டோமே என்ற நினைவுதான் அவர்களுக்கு அளவில்லாத மகிழ்ச்சியைக் கொடுக்கும்.

தோட்டத்திலுள்ள தையல் மெஷின்கள் எல்லாம் இரவு பகலாக ரீங்காரம் செய்யும்.

## சிறு கும்மாளம்

காந்திய வசன நடையில் சொல்ல வேண்டுமானல், பணிகார வகைகள், வளையல்கள், ஒரு சிறு கும்மாளம்—இவற்றின் ரூபத்தில்தான் தோட்டத் தொழிலாளிகள் தீபாவளியைக் காண்கிறுர்கள். தங்கள் சொந்த கிராமத்திலும் வீட்டிலும் சுதந்திரமாக ஆடிப்பாடி விளையாடுகிறுேமென்ற சுதந்திர உணர்ச்சியை அது அவர்களுக்குக் கொடுக்கிறது.

இந்த இரண்டு நாட்களும் இளைஞர்கள் இரவோடிரவாக பல ஆயத்தம் செய்வார்கள். கோவலன், சதாரம், தூக்குத் தூக்கி, சத்தியவான் சாவித்திரி — இவற்றுள் ஏதாவதொன்றை அரங்கேற்றுவதற்கு ஒத்திகை செய்வார்கள். "லைன்"களுக்கு மத்தியில், ஒரு பெரிய மைதானத்தின் ஓரத்தில் மேடை அமைக்கப்படும். இதில் வேலை செய்யும் எவருக்குமே கூலி கிடையாது. ஆர்மோனியமும் தபேலாவும் சேர்ந்து விடியும் வரை ஒலிக்கும். நல்ல நிலவாயிருந்தால் இளைஞர்கள் கும்மி, கோலாட்டம், ஒயில் ஆட்டம் முதலிய கிராமிய நடனங்களை ஒத்திகை பார்ப்பார்கள். பெரியவர்கள் பழைய, மறந்துபோன பாட்டுக்களை நினைவு படுத்துவார்கள்.

**நந்தவனத்திலோர் ஆண்டி—அவன்**
**நாலாறுமாதமாய் குயவனைத் தேடி**
**கொண்டுவந்தானொரு தோண்டி—அதைக்**
**கூத்தாடிக் கூத்தாடி போட்டுடைத்தாண்டி.**

**—நந்த**

தீபாவளிக்கு முதல் நாள் சாயங்காலம் எங்கும் ஒரே பரபரப்பாயிருக்கும். அன்றிரவு பலர் தூங்கவே மாட்டார்கள். பெண்கள், த்கர விளக்குகளை விருந்தை சுவர்களில் ஏற்றி வைத்து விட்டு சிற்றுண்டிக்கு மாவிடிப்பார்கள். ஆண்கள் தோரணங்களாலும் மாவிலையாலும் வீட்டை அலங்கரிப்பார்கள். கடைசி முறையாக எல்லாம் சரி பிழை பார்க்கப்படும். பெட்டிக்குள் வைத்த சேலைகள் வெளியே வரும், கொழுத்துவதற்குத் தயாராக சீன வெடிப் பட்டாசுகள் எடு

[14ஆம் பக்கம் பார்க்க]

# மண் குளிர, மனை குளிர மக்கள் அகங்குளிர வரும் தீபாவளி

மாரிகாலத்தின் முற் பகுதியைக் கூட தனதாக்கிக் கொண்ட கோடையின் கனல் நீண்டு சென்று கொண்டிருந்தது. உயிரினங்களின் தவிப்பு, பயிர் பச்சைகளின் வாட்டம் இவற்றினுக்கும் மேலாக மழையைக் காணவில்லையே என மக்களின் ஓலம். இவ்வெப்ப நிலையை நீக்க வானம் கருணை பொழிந்தது. எங்கணும் புனற்காடு செறிந்து, புதுக்குருத்து எறிந்து, புதுமையின் பொலிவுடன் விளங்குகின்றது இவ்வாண்டுத் தீபாவளி.

உலகத்தைத் தனது அக்கிரமச் செயல்களால் அடக்கி ஆட்டிப் படைத்த நரகாசுரனை, பாபத்தையும் துயரத்தையும் நீக்குபவன் என்ற அர்த்தங் கொண்ட கிருஷ்ண பரமாத்மா கொன்றழித்த நாளிது. புதுப் புனலாடி, புத்தாடை புனைந்து அழகும் ஒளியும் குடிகொள்ள மண் வீடுகளிலும் மாளிகைகளிலும் மக்களின் உள்ளம் குதூகலிக்கும் நாளிது. அன்றுடம் உழைத்து வாழ்பவரும் சிறுகச் சிறுகச் சேர்த்து தம் தகுதிக் கேற்ப வாங்கிய புத்தாடைகளை அணிந்து ஆனந்தம் கொண்டாடும் இந்நாள் துன்பத்தை மறந்த சாந்தியை அளிக்கும் தன்மை வாய்ந்தது.

தீபாவளியென்றுல் தீபங்களை வரிசையாக ஒளிரவிட்டு மன இருளை அகற்றும் ஒளித் திருநாளாகும். அகன்ற பரத கண்டத்தின் வடபகுதியில் இரவையே பகலாக்கும் வகையில் தீபங்களை வரிசையாக ஏற்றி மகிழ்கின்றனர்.

நரகாசுரன் உயிர் விடுகையில் தன்னைக் கொன்றெழித்த கிருஷ்ணபரமாத்மாவிடம் தான் உயிர் துறந்த அந்நாளை மக்கள் குதூகலமாகக் கொண்டாட வேண்டுமெனக் கேட்டுக் கொண்டான். அவ்வேண்டுகோளுக்கேற்ப, அவர் அருளால் வழிவழியாக இந்துக்கள் இவ்விழாவைக் கொண்டாடி வருகின்றனர்.

அதர்மமாகிய இருள் அகன்று விட்டால் மக்களின் இதயத்திலே இன்ப ஒளி குடிகொண்டு பிரகாசிக்கின்றதென்பதே இக்கதையின் அடிப்படைத் தத்துவமாகும்.

ஈழநாட்டைப் பொறுத்த வரை இன்று மக்கள்வாழ்விலே கலந்து வரும் இன்னல்களோ அளப்பில. வறுமையும், விஷம் போல் ஏறி வரும் வாழ்க்கைச் செலவும், வேலையில்லாத் திண்டாட்டமும் பணவீக்கமும் ஒன்றுகூடி வாழ்வில் நீங்காத துன்பத்தைத் தந்த வண்ணம் இருக்கின்றன. அரசியல் வானில் கருமேகங்கள் திரண்டு பெரிய நெருக்கடியை உண்டாக்கின. இலங்கையின் வரலாற்றிலேயே கறை படிந்த சம்பவம் இடம் பெற்றுவிட்டது. எவ்வுயிர்க்கும் அன்பாயிரு எனப் போதித்தார் அஹிம்சாமூர்த்தியாகிய போதி மாதவன். அவரின் அடிச்சுவட்டைப் பின்பற்றி மக்களை நல்வழிப்படுத்தவேண்டியவர்களின் உள்ளங்களில் குரூரமான எண்ணங்கள் குடி கொண்டிருந்ததைக்கண்டோம். நாடெங்கணும் ஒரே பீதி. திசை தவறிய கப்பல் போன்று அரசியலார் தத்தளித்துக் கொண்டிருக்கின்றனர்.

சிக்கல்கள் நிறைந்த இந்நிலை மாறி நாட்டில் சுமுகமான பண்பு நிலவ வேண்டுமென்பதே மக்களின் உள்ளங்களில் இன்று எழுந்துள்ள எண்ணமாகும். இந்த எண்ணத்தை நெஞ்சொடு வைத்துக் குதூகலத்தில் மக்களை ஆழ்த்த வந்திருக்கின்றது ஒளித்திருநாளாகிய தீபாவளிப் பெருநாள்!

**ஆண்டிலோர் தீபா வளியாம்,**
**அடா! — அதை**
**ஆண்டியும் கொண்டாட**
**வேண்டும், அடா!**

[9ஆம் பக்கம் பார்க்க]


**தாய்ப்பாலுக்கு நிகரான சிறந்த மாற்றுப்பால்—**

**மில்க்கோஸ்**




தாய்மார்கள் தங்கள் குழந்தைகளுக்கு தாய்ப்பால் ஊட்டவே விரும்புவார்கள். உங்களால் அது முடியாது போனல், குழந்தைக்கு தாய்ப்பாலுக்குப் பதிலான சிறந்த மாற்றுப்பாலைக் கண்டு பிடிப்பதற்கு நீங்கள் முனைவீர்கள். சிசு உணவுகளில் சரியான விகிதாசாரப்படி பிசிதம், கரி நீரகைகள், கொழுப்புச் சத்துகள் மட்டும் இருந்தால் போதாது. அதில் தொற்று நோய்களை எதிர்ப்பதற்கும், சோகை மந்தம். எலும்பு உருகுதல் போன்ற வியாதிகள் பீடிக்காது தடுப்பதற்கும், எதிர்ப்பதற்கு முகந்த இரும்புச் சத்துகளும் விட்டமின் சத்துகளும் கொண்டதாகவிருக்க வேண்டும்.

மில்க்கோஸ் பத்திரமான, முழுச்சத்துள்ள சிசு–உணவாகும். இது சுத்தமான முழுப்பாலாடை நிறைந்த பசுப்பாலிலிருந்து தயாரிக்கப்படுகிறது. குழந்தைகளுக்கு வேண்டிய சத்துக்களை இது பூர்த்தி செய்கிறது.

மில்க்கோஸ், நன்கு பத்திரமாக குழந்தைகளின் மெல்லிய ஜீரண உறுப்புகளுக்கு ஏற்றதாகத் தயாரிக்கப்படுகிறது. மில்க்கோஸ் நவீன ரீதியாகப் பொதியப்பட்டு, உங்களுக்கு பத்திரமாகவும், பரிசுத்தமாகவும் கிடைக்கிறது.

உங்கள் குழந்தைகளை ஆரோக்கிய குழந்தைகளாக வளர்க்க அவர்களுக்கு இன்றே மில்க்கோஸ் ஊட்ட ஆரம்பியுங்கள்.

**மில்க்கோஸ்**

இன்றியமையாத சிசு–உணவு

ஹார்லிக்ஸ் தயாரிப்பாளரால் தயாரிக்கப்படுகிறது

HLM 3498

தொடர் கதை

# துறைக்காரன்

வ. அ. இராசரத்தினம்

## 8. பெருமூச்சு

"என்னப்பா வேலாயுதம் இந்தப்பக்கமா யாரும் போருங்களா?" என்று கேட்டான் உதுமாலெவ்வை.

'யாரும்' என்பதற்கு எல்லாருக்கும் அர்த்தம் தெரியாது. ஆனல் வேலாயுதத்திற்குத் தெரியும்!

அப்பாடா! இந்த வயிற்றுச் சோற்றைச் சம்பாதிப்பதிலே தான் எத்தனை கஷ்டம்? ஆற்றைக் கடந்து, நடுக்காட்டில் நான்கு ஐந்து நாட்களுக்குத் தங்கி, நுளம்புக் கடியைச் சகித்து, புலி, கரடிகளுக்குத் தப்பி, இரண்டு மானையோ மரையையோ வெடி வைத்து வந்துவிட்டால், அதைப் பிடித்துக் கொண்டுபோய்க் கோர்ட்டிலே வழக்கு வைப்பதற்கு ஆயிரம் பொலிசும், விதானைமாரும் கண்ணிலே எண்ணெயை ஊற்றிக்கொண்டு காத்திருக்கிருர்கள்! தற்செயலாக அவர்கள் கண்ணிற் பட்டுவிட்டால், அந்தப் பஞ்சமா பாதகர்களிடமிருந்து தப்புவதற்கு வீட்டிலே இருக்கிற உப்புச் சிரட்டையைக்கூட விற்கவேண்டிவரும்! நல்ல காலமாக இன்றைக்கு இந்தப் பக்கம் பொலிஸ் ஒருத்தரும் வரவில்லை!

"ஒருத்தருமே வரவில்லை. இனி வெய்யில் ஏறிற்று. ஒருவரும் வரமாட்டார்கள் என்றே எண்ணுகிறேன்" என்று சொல்லிக் கொண்டே வள்ளத்தை நெருங்கிப் பார்த்தான் வேலாயுதம்.

அது மாமரத்திற் குடையப்பட்ட பென்னம் பெரிய வள்ளம். ஆயிரம் ரூபாயாவது பெறும். ஒரு நாளைக்கு மூன்று ரூபாய் வாடகை கொடுக்க வேண்டும். புத்தம் புதிய வள்ளம்.

வள்ளத்தின் பின்னணியத்திலே சோற்றுப்பானைகளும், கறிச்சட்டிகளும் வெறுமையாகக் கிடந்தன. அவைகளின் அருகாக வள்ளத்தின் வயிற்றுக்குள் நான்கு இறைச்சிச் சரக்குகள் இருந்தன. துடுப்பு வலிக்கவேண்டிய ஆசனங்களின் பின்னல் முன்னணியத்தில் உரித்த மரை ஒன்று சந்து சந்தாகப் பிளக்கப் பட்டுக் காட்டுக் குழைகளால் மூடப்பட்டுக் கிடந்தது. அதற்கும் மேலே இரண்டு துவக்குகள், கத்திகள் முதலான ஆயுதங்கள் கிடந்தன.

உதுமாலெவ்வை அவசரப்பட்டான். பசிக்களையாகத்தான் இருக்க வேண்டும். வெய்யில் கொளுத்துவதாலுமிருக்கலாம். இன்னமும் மூன்று மைல் தூரத்திற்கு வள்ளத்தைக் கடற்கரை வழியாக இழுத்துச் செல்ல வேண்டும். எப்படியும் வீட்டுக்குப் போகும்போது மதியம் திரும்பிவிடும். ஆகையாற்தான் உதுமாலெவ்வை அவசரப்படுகிருன் போலும்.

அவன் தோழர்களான மற்றைய நால்வரும் களைப்பு மிகுதியாற் பேசக்கூடச் சக்தியற்றுப்போய் இருந்தார்கள். நித்திரை விழித்ததினலோ என்னவோ அவர்கள் கண்கள் எல்லாம் இரத்தக் குண்டுகளாகச் சிவந்திருந்தன. காட்டிற் புகுந்து திரிந்ததினல் உடல் முழுவதும் கம்புந் தடியும் கீறிக் கிழித்துச் சில இடங்களில் இரத்தம் கன்றிப்போயிருந்தது. வீரேசன் மட்டும் காலிற் பலமாகக் கட்டுப்போட்டிருந்தான். உள்ளங் காலிலே கட்டை குத்திவிட்டதாம்.

உதுமாலெவ்வை அவிழ்த்து வைக்கப்பட்டிருந்த குறைச் சாக்கில் இருந்து இரண்டு கை காய்ந்த இறைச்சித் துண்டுகளை எடுத்துக் கொடுத்தான். கொடுத்துவிட்டு "வெள்ளாமை வெட்டஆட்கள் போருங்களா?" என்று வேலாயுதத்திடம் கேட்டான்.

"காலமதான் இருபது முப்பது பேர் போருர்கள். ஆனல் அமாவாசை கழிச்சுத்தான் வெட்டுவிழுமாம்" என்ருன். வேலாயுதம்.

"அதற்குள்ளே நாமும்போயிரலாம். நாளைக்கே நாங்களும் வருவோம். இந்தப் பொழைப்பை நம்பி இருக்க ஏலுமா? ஏதோ! இந்தமுறை போனதுக்குப் பிழையில்லை. இருந்தாலும் இல்லாட்டியும் வெள்ளாமை வெட்ட விடுகிறதா? ஐஞ்சாறு கட்டுக்கு வெட்டி, வீட்டுக்குள்ளே இரண்டு சாக்கு நெல்லுக் கொண்டு வந்து வைச்சாத்தான் சோத்துப்பாடு நடக்கும்" கிழவன் உதுமாலெவ்வை இப்படி முனகியபடியே தன் கூட்டாளிகளைத் துரிதப்படுத்தினன். காலிற் கட்டிக்கொண்ட வீரேசன் மட்டும் வள்ளத்துள் இருந்தான். சுக்கானிலே உதுமாலெவ்வையும் இருக்க மற்றைய மூவரும் வள்ளத்தைக் கரைவழியே இழுத்துக்கொண்டு நடந்தார்கள்.

வேலாயுதமும் அவர்களின் பின்னே நடந்து ஆற்ருேரத்துப் புங்கைமர நிழலிலே குந்திக்கொண்டான்.

வில்லுப்போல வளைந்திருக்கும் கொட்டியாபுரக் குடாக் கரைவழியாக உதுமாலெவ்வையின் வள்ளம் இழுக்கப் பட்டுச் செல்கையில், வேலாயுதத்தின் சிந்தனை பின்னேக்கிச்சென்று மேய்ந்தது.

பத்து வருடங்களுக்கு முன்பாக இருக்கவேண்டும். அப்போது அவன் தந்தையார் இருந்தார். ஆகவே நீண்ட காலமாகக் கங்கைக்கு வேட்டைக்குச் செல்லவேண்டும் என்ற ஆசை நிறைவேறுவதற்கு அவனுக்கு வசதியிருந்தது. இப்போதாயிருந்தால் துறையை விட்டுச் செல்லவே முடியாது!

வெடிக்கார முத்தண்ணனேடு தானும் வருவதாகச் சொன்னன். அவர் உடன்பட்டதற்குக் காரணம் வேலாயுதத்திற்கு நன்ருகத் தோணி விடத் தெரியும் என்பதுதான். மேலும், அவர் மூத்த மகனுக்கும் இரண்டு மூன்று நாட்களாகச் சுகமில்லை. ஆகவே முத்தண்ணன் வேலாயுதத்தையும் சாமான்களை எடுத்துக் கொண்டு ஆயத்தமாக இருக்கும்படி சொன்னர்.

வேலாயுதமும் சாமான்களை எடுத்துக்கொண்டு முதல் நாளே ஆயத்தமாக இருந்தான். குட்டிச்சாக்கிலே நாலு கொத்து அரிசி, இரண்டு தேங்காய் கோப்பித்தூள், சீனி, உப்பு, ஒரு ரோச்லைற், ஆறு பெற்றிக்கட்டைகள், கம்பளிச்சட்டை, போர்வை எல்லாமே அந்தப்பையிற்தான் இருந்தன.

முன்னிரவிலேயே முத்தண்ணனின் தோணி உப்பாற்றிலிருந்து கங்கைக்கு வந்துவிட்டது. அப்போதும் இதைப் போலத்தான் மாசி மாதமாக இருந்தது. ஒரே புழுக்கமும் நுளம்புக்கடியும். கடற்கரை வெண்மணலிற் கதை சொல்லிக்கொண்டு படுத்திருக்கையிலே இருந்த ஆனந்தம்தான் என்ன!

விடிவெள்ளி உதயமாகி வரும்போது முத்தண்ணன் எல்லோரையும் எழுப்பிவிட்டார். நான்குபேர்தான். பொன்னையாவும், சுலைமானும் துடுப்பு வலித்தார்கள். வேலாயுதம் முன்னணியத்திலே தள்ளு கம்போடு நின்றுகொண்டான். முத்தண்ணன் சவளிலே இருந்தார்.

மகாவலிகங்கையிலே எதிர்த்துவரும் நீரையும், மேலே புகைத்துநிற்கும் பனிப் படலத்தையும் பிளந்து கொண்டு வள்ளம் முன்னேறிச் சென்றுகொண்டிருந்தது. முன்னேறிச் சென்றதா? நல்ல கதைதான். கங்கையிலே இந்த விரிந்த இடத்திலேயும் எவ்வளவு விரைவாக நீர் ஓடுகிறது? கம்பை நிலத்தில் ஊன்றிப் பலத்தையெல்லாம் சேர்த்து மிண்டித் தள்ளினல் ஒருமுழம் முன்னேறும். ஆனல் கம்தைப தண்ணீரைவிட்டு எடுத்ததும், அரைமுழம் நீரோடு பின்னுக்கு வந்துவிடும். இப்படியாக ஒரு தரம் மிண்டித்தள்ளினல் ஒரு சாணுக்கு வள்ளம் முன்னேறிக்கொண்டிருந்தது. சில இடங்களிற் கங்கை மிகக் குறுகலாக இருக்கும். அவ்விடத்தில் விரலை வைத்தால், விரலே அறுந்துவிடக்கூடிய அத்தனை வேகத்தில் கங்கை உறுமிக்கொண்டு செல்கிறது. அவ்விடத்திற் கம்பை நிலத்தில் ஊன்றி மிண்டித் தள்ளுகையில், கம்பைக் கிழித்துக்கொன்டு செல்லும் நீர் அபூர்வமான இசை பாடிற்று. கம்பின் பலங் குறைந்து வள்ளத்தின்முன்னணியம் சற்று நீரின் போக்கிற்குத் திரும்பிவிட்டாற் பத்துப் பதினைந்து பாகம் பின்னற் சென்றபிறகுதான் மறுபடியும் அதை நிறுத்திப் பிடிக்கலாம்.

ஆனலும் கரையின் இருமருங்குமுள்ள கண்ணைப் பறிக்கும் காட்சிகளைப் பார்த்துக் கொண்டு செல்வதிலேதான் எத்தனை ஆனந்தம்! சில இடங்களிலே சடைத்துப் படர்ந்த மருத மரங்கள் இரு கரையிலும் தண்ணென்ற நிழலைக் கொடுத்துக் கொண்டு நிற்கின்றன. இன்னுஞ் சில இடங்களில் ஆற்றங் கரையோரம் ஒரே சேருகக் கிடக்கிறது. ஆற்றிலே வெள்ளம் வரும்போது நீர் அங்கெல்லாம் பரவி வற்றும்போது வடிந்துவிடுகிறது. வளம் மிக்க அச்சேற்றிலே நாணல்கள் தன்னிஷ்டம்போல வளர்ந்து கிடக்கின்றன. நாணற்புதர்களிடையே வெள்ளைக் கொக்குகள் கூடு கட்டிக் கொண்டு வாழ்கின்றன. ஆள் அரவம் கேட்டதும், அந்தக்கொக்குகள் எல்லாமே ஜிவ்வென்று கிளம்பி மேகக் கூட்டங்களைப் போல நீல வானத்தை மறைத்துக் கொண்டு பறக்கும்போதுதான் எத்தனை அழகு. இன்னமும் கொஞ்சத் தூரஞ் சென்றபோது நாணற் புதர்களையே காணவில்லை. ஒரே வெளியாக இருந்தது. அந்த வெளியிலே சற்று உயரமான இடத்திலே ஒரு புளியமரம். அதன் கீழே ஒரு குடிசை!

அந்த வெளியிலே கரும் பச்சையாய்க் காற்றில் அலையெற்றித் தரை தொட்டு நிமிர்ந்து நிற்கும் கோரைப் புற்களை... இல்லை. இல்லை; கோரைப் புற்கள் என்றுதான் முதலில் அவன் நினைத்தான். ஆனல் அவை புற்களல்ல — அத்தனையும் நெற்பயிர்கள்.

யாரோ ஒரு புத்திசாலி அங்கே நெல்விதைத்திருந்தான். கங்கை வெள்ளம் தேங்கி நிற்கும் வளமான பூமி. வாய்க்கால் வெட்டவோ, தண்ணீர் இறைக்கவோ வேண்டிய அவசியம் கிடையாது. எந்தச் சிரமமும் இல்லாமல் தண்ணீர் வெள்ளம் வந்தபோது ஏறும். ஏற்று நேரத்தில் இறங்கிவிடும்!

இப்படியான இடங்கள் கங்கைக் கரையோரம் முழுவதுமே இருக்கிறது. பேராசிரியர் மயில்வாகனம் சொல்கிருர் அறுபதினயிரம் பேருக்கு வேலை கிடைப்பதில்லை என்று. அறுபதாயிரம் என்ன, எத்தனை கோடி இருந்தாலும், அத்தனை பேருக்கும் கங்கைக் கரையிலே வாழ்வு இருக்கிறது. ஆனல் இந்தக்காலத்து இளைஞர்கள் நிலத்தைக் கொத்தவே பயமும் வெட்கமும் அடையும்போது அவர்களுக்கு வாழ்க்கை எங்கிருந்து வரும்?

பத்துமணியாகிவிட்டபோது, அவர்களின் தோணி, மேலே செல்லச் சண்டித்தனம் பண்ணியது. எல்லோருடைய கைகளுமே சோர்ந்துவிட்டன. மணிக்கட்டுக்குக் கீழே முன்னங்கைகள் வலிபொறுக்கமுடியாமற் கீழே இற்று விழுந்துவிடுவனபோலத் துடித்தன. உடல் முழுவதும் வியர்வையிற் தெப்பமாக நனைந்திருந்தது.

எனவே மேலே போகமுடியாமல் அவர்கள் தோணியை ஆற்றங்கரை மருதமரத்திலே கட்டிவிட்டார்கள். ஆறு, வளையும் அந்தத் திருப்பத்தின் மேல் கரையில் வெண் மணலை வார்த்துவைத்திருந்தது. மருதமரத்து நிழலிலே, அந்த வெண்மணலிலே படுப்பதுதான் எத்தனை ஆனந்தமாக இருந்தது! ஆனற் படுத்திருக்க அவர்களால் முடியுமா? பரபரவென்று அடுப்பை மூட்டிச் சமைக்கத் தொடங்கினர்கள். சோறு பொங்குவதற்கிடையில் முத்தண்ணன் நாலைந்து வெள்ளைக் கொக்குகள் சுட்டுவந்துவிட்டார்.

சாப்பிட்டுவிட்டு மறுபடியும் பிரயாணத்தைத் தொடர்ந்தார்கள். அப்போது முன்னிலவுக் காலம். நிலாப் படும்போது அவர்கள் இன்னொரு வெளிக்கு வந்துவிட்டார்கள்!

அந்த இடத்திலே தங்கியிருந்து விடியற்காலத்தில் வேட்டைக்குக் கிளம்பினர்கள். அடுத்தநாள் மூவரும் காட்டுக்குப் போனர்கள். நான்காம் ஆளுக்கு வேட்டையாடிய இறைச்சியை நெருப்பில் காய வைக்கும் வேலை இருந்தது!

இப்படியாக ஆறுநாட்கள் காட்டில் அலைந்து வீடுவந்து சேர்ந்தபோது, ஆளுக்கு நாலரை ரூபாய்க்குப் 'பங்கு' வந்துசேர்ந்தது. அப்போது அரிசி ஒரு கொத்துப் பன்னிரண்டு சதந்தானே!

இப்போது என்ன? இதே வள்ளத்தை இழுத்துக்கொண்டு போகிறவர்களுக்கு இருபது மிஞ்சினல் இருபத்தைந்து ரூபாய் பங்கு வரும்? அது எத்தனை நாளைக்குக் காணும்! உதுமாலெவ்வை பிள்ளை குட்டிக்காரன்! இருபத்தைந்து ரூபாய் அவன் குடும்பத்திற்கு ஐந்து நாட்களுக்கும் போதாது! ஆனல், இந்தத் தொழிலையும் விட்டால் வேறுவழி? வருஷக் கணக்காக அவன் சீவியம் இப்படித்தான் போகிறது!

வேலாயுதம் பெருமூச்சு விட்டான். உலகத்தின் துன்பங்களை யெல்லாம் உணர்ந்த புத்தர்பிரான், போதிமரத்தின் கீழிருந்து பெருமூச்சு விட்டதைப்போல, புங்கைமரத்தின் நிழலிலிருந்து வேலாயுதம் பெருமூச்சுவிட்டான்!

(தொடரும்)

'ஹென்றிலி'
உடை அலங்காரத்தின்
உன்னத அடையாளமாகும்

ஹென்றிலி

★ சேட்
★ ஷோட்ஸ்
★ காற்சட்டை

ஹென்றிலி சேட், ஷோட்ஸ், காற்சட்டை ஆகியவற்றை அணியும் ஆடவரும், இளைஞரும் சௌகரியத்தை அனுபவிப்பதுடன் வசீகரமான தோற்றத்தையும் பெற்று அழகுடன் விளங்குகின்றனர்.

ஹென்றிலி உடைவகையில்
நீங்கள் எதைத் தெரிந்தெடுத்து வாங்கினலும்,
அது கொடுத்த பணத்திற்கு நிறைந்த பெறுமதியாகும்.

ஹென்றிலி (காமெண்ட்ஸ்) லிமிடெட்,
பழைய விமான நிலைய வீதி,
(Old Air Port Road)
இரத்மலானை.

**இந்தியாவில் சென்ற பத்து வருட காலமாக சமஷ்டி ஆட்சி முறை நடைபெறுகிறது. இதனுல் நாட்டில் மாகாண வெறியும், மொழி வெறியும் அதிகரித்து, தேசபக்தியும், நாட்டு ஐக்கியமும் குலைவதாயும், சுயநல அரசியல் வாதிகளிடையே, போட்டிகள் அதிகரித்து பொது மக்களின் நன்மை குலைவதாகவும் இந்திய சுப்ரீம் கோர்ட் முன்னுள் பிரதம நீதிபதியான மேகர் சந்திரமகாஜன் கூறுகிருர்.**

# இந்தியாவில் சமஷ்டி ஆட்சி முறை பத்து வருட அனுபவம்

மூன்று வருஷங்களுக்கு முன்பாக என்னையே நான் ஒரு கேள்வி கேட்டுக்கொண்டேன். அரும்பாடு பட்டுப்பெற்ற சுதந்திரத்தையும், ஒற்றுமையையும், என் அருமை பாரத நாடு பாதுகாத்துக்கொள்ளுமா? அல்லது பழையபடி, ஒற்றுமை குலைந்து சின்னஞ்சின்ன ராஜ்யங்களாகப் பிரிந்து குறுகிய அரசியல், மொழி வெறியர்களின் கையில் சிக்கி அடித்துக்கொள்ளுமா?

ஒற்றுமை இல்லாததால் தான் இந்தியா அந்நிய படையெடுப்பாளருக்கு அடிமைப்பட்டது. வண்டி வண்டியாகப் பொன்னும், வெள்ளியும், பெண்களும் கஜினிக்கும், பாரசீகத்துக்கும் கொண்டுசெல்லப்பட்டனர். கைபர் கணவாய் வழியாக ஒரு சில ஆயிரம் பேர்வழிகள் இந்தியா வந்தார்கள். கங்கராவிலிருந்து சோமநாத் வரையில் அவர்கள் தடையின்றிச் செல்ல அனுமதிக்கப்பட்டனர். இயற்கைத் தடைகள் பல இருந்தும், அவர்கள் தடுக்கப்படவில்லை.

## மேனுட்டார் ஆதிக்கம்

வர்த்தகத்துக்காக மேற்கே இருந்து வந்தவர்களோ, தங்களது கட்டுப்பாட்டாலும், ஆயுத பலத்தாலும், சிதைந்து வந்த மொகலாயர் ஆட்சியை நீக்கி, ஆதிக்கம் பெற்றனர். நாடெங்கும் தங்கள் ஆட்சி அதிகாரத்தை ஸ்தாபித்தனர். இது எப்படி சாத்தியமாயிற்று? இந்தியர்களின் உதவியால்தான் இது முடிந்தது. இந்தியாவின் பல பகுதிகளிலும் வசித்த மக்களிடையே, பல மொழி பேசுபவரிடையே, தங்கள் பாரத நாட்டின் மீது தேசாபிமானம் அடியோடு இல்லை. இந்திய மக்கள் அனைவரும் ஒரே கலாசாரத்தால் பிணைக்கப்பட்டிருந்தும், அவர்களிடை ஒற்றுமை இல்லை. தங்கள் சின்னச்சின்ன ராஜ்யங்கள் நன்ருக இருந்தால் போதும் என்ற சுயநலம் காட்டினர். அண்மையிலுள்ளவர்கள் நன்மையைப்பற்றிக் கவலை கொள்ளவில்லை. அண்மையிலுள்ளவர்கள் அழிவதைக் கண்டு சிலஇடங்களில் மகிழ்ச்சியுமடைந்தார்கள்.

நாட்டில் இந்த மாதிரியான ஆபத்து மீண்டும் ஏற்படாமல் பாதுகாக்க வேண்டும். எப்படிப் பாதுகாப்பது என்பது பற்றி நான் ஒரு யோசனை கூறியிருந்தேன். அரசியல் விளையாட்டில் ஈடுபட்ட சிலருக்கு இது பிடிக்கவில்லை. சுதந்திரத்தால் கிடைத்த சுகபோகங்களை அனுபவிப்பதிலேயே அவர்கள் நாட்டம் செலுத்தினர். என்யோசனை காலங் கடந்ததென்றும் அனுபவ சாத்தியமற்றதென்றும் ஒதுக்கினர். நான் ஒற்றை ஆட்சி முறையே வேண்டுமென்று கூறியிருந்தேன். அதை அரசியல் நிர்ணய சபை நிராகரித்து நாடெங்கும் சமஷ்டி அமைப்பை ஒப்புக்கொண்டுவிட்டதால் ஒற்றை ஆட்சி முறையை இப்போது ஏற்படுத்த முடியாதென்று விட்டனர்.

பிரிட்டனிலுள்ளதைப் போல ஒரே பார்லிமெண்டையும், ஒரே மந்திரி சபையையும் இங்கும் ஏற்படுத்துவதால், இன்று பல ராஜ்யங்களிலும் அரசியலில் ஈடுபட்டுள்ள ஆயிரக்கணக்கானவர்களுக்குப் பிழைப்பு இல்லாமல் போய்விடுமென்றும், வேலையில்லாக் கஷ்டம் பெருகுமென்றும் அதைத் தீர்க்க முடியாதென்றும் கூறப்படுகிறது. மேலும் சுயநல அரசியல், மொழி வெறியர்கள் இதை உண்ணுவிரதம், கலகம் முதலியவைகளால் எதிர்ப்பரென்றும் கூறுகின்றனர்.

இவ்வித தடைகள் இருப்பினும், எனது ஒற்றை ஆட்சி யோசனையை மீண்டும் வலியுறுத்த விரும்புகிறேன். பாரத நாட்டையும், பாரத மக்களையும் ஐக்கியமாக ஒன்றுபடுத்த எனது யோசனைதான் சரியானதென்று கட்சி, கோஷ்டி முதலிய பற்றில்லாதவர்களில் பலர் என்னிடம் தெரிவித்துள்ளனர்.

## சமஷ்டி ஆட்சியில்

சமஷ்டி ஆட்சி முறை சென்ற பத்து ஆண்டுகளுக்கு மேல் இருந்து வருகின்றது. அதனுல் ஏற்பட்ட நன்மை தீமைகளென்ன? இந்த ஆட்சி முறை மக்களிடையே தேசாபிமானத்தையும் ஒற்றுமை உணர்ச்சியையும் வளர்த்துள்ளதா? ஒரு பிரிட்டிஷ்காரருக்கு பிரிட்டன் மீதுள்ள தேச பக்தியும், ஒரு பிரெஞ்சுக்காரருக்கு பிரான்ஸ் மீதுள்ள தேசாபிமானமும், இந்தியருக்கு இந்தியாமீது உள்ளதா? இதைப்பற்றி சற்றே யோசித்தால் "இல்லை" என்றுதான் என்மனம் கூறுகின்றது. இந்த அரசியல் அமைப்பு, தனித்தனி குட்டி அரசுகள் இருந்துவந்த அந்தப் பழைய காலத்துக்கு நம்மை திருப்பிக் கொண்டு செல்லும் பிற்போக்கானதாக இருக்கிறதென்றே உணர்கின்றேன். "ஆந்திரா ஆந்திரர்களுக்கே" "பீகார் பீகாரிகளுக்கே", 'வங்காளம் வங்காளிகளுக்கே', என்பன போன்ற கோஷங்கள் அதிகரிக்கின்றனவா? அல்லது குறைகின்றனவா? குறுகிய எல்லைக்குள்ளாக பல பல அரசியல் கோஷ்டிகள் கிளம்பி, மொழியின் பெயராலும் சாதியின் பெயராலும் அரசியல் ஆதிக்கத்தையும் அதிகாரத்தையும் பெற முற்படுகின்ருர்களா? அல்லது விரும்புகின்ருர்களா? என்று பணிவுடன் கேட்க விரும்புகின்றேன். இவ்வித சுயநலசக்திகள் அதிகம் வேலை செய்தால், நாட்டின் ஒற்றுமை குலைந்து, தனித்தனி சின்னச்சின்ன பகுதிகள் மற்ற பகுதியிலுள்ளவர்களை அந்நியராகக் கருதி வேற்றுமை உணர்ச்சிகளை அதிகரிக்கவும் மாட்டார்களா? ஒவ்வொரு ராஜ்யத்திலும் நாட்டில் எந்தப் பகுதியைச் சேர்ந்தவர்களும் தாராளமாக சேவை செய்யலாம் என்று அரசியல் அமைப்புச் சட்டம் கூறினும், அந்தந்த ராஜ்ய மக்களுக்கே அங்கு வேலை என்ற கருத்து அதிகரிக்கவில்லையா?.

நான் பார்க்கும் வரை, மக்கள் குறுகிய மனத்துடன் நினைக்கவே முற்பட்டுள்ளனர். பாரத நாட்டில் ஒற்றுமையை ஏற்படுத்தவும், தேசபக்தியை வளர்க்கவும் நமது தலைவர்கள் கூடியளவு கத்தியும், உண்மையில் மக்கள் மாகாண ரீதியிலும், என் சாதி, என் மொழி என்ற அளவிலும் தான், நினைத்துக் காரியங்கள் செய்கின்றனர்.

## ஒற்றை ஆட்சி

பிரிட்டிஷார், இந்தியா அனைத்தையும் ஒரே ஆட்சியின் கீழ் கொணர்ந்தனர். ஒற்றை ஆட்சி முறையை நாடனைத்துக்கும் ஏற்படுத்தினர். மாகாணங்கள் நிர்வாக உறுப்புக்களாக இருந்தன. இந்திய சமஸ்தானங்களும் ஒரே மன்னருக்கே விசுவாசமாக இருந்தன. இந்திய தேசிய காங்கிரஸ், இந்திய மக்கள் அனைவரையும் ஒரு தேசிய சமூகமாக ஒற்றுமைப் படுத்தியது. இந்தியாவில் தேசபக்தியை வளர்த்தது. மதம், மொழி, மாகாண வேற்றுமைகளுக்கு இடம் தராமல், சுதந்திரப் போராட்டத்தை நடாத்தியது. ஒரே ஐக்கிய இந்தியாவுக்காகப் பாடு பட்டது. தனித்தனி மாகாண பிரிவினைக்கோ, மொழி ஆட்சிகளுக்கோ வேறு கோஷ்டிகளுக்காகவோ பேசவில்லை; போராடவில்லை. அந்த நல்ல காரியம், இந்த சமஷ்டி அரசியல் அமைப்பினுல் சிதைந்து வரவில்லையா?.

இந்தியாவை இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்று முஸ்லிம் லீக் "இரண்டு தேசம்" பற்றிப் பிரசாரம் செய்தது. பிரிவினை எவ்வளவு கசப்பாயினும், இந்தியத் தலைவர்கள் அதற்கு ஒப்பியது அறிவுடைமையேயாகும். பிரிவினையை ஒப்புக்கொண்ட பின், நமது நாட்டை ஐக்கியமாக, ஒரே தேசிய சமுதாயமாகச் செய்யக் கூடிய அரசியல் அமைப்பு எப்படிப் பட்டதாக இருக்க வேண்டுமென்பது முக்கிய கேள்வி. எந்த மொழி பேசினுலும், எந்த சாதியாயினும் யாவரும் பாரத நாட்டின் மீது தேச பக்தியுடன் இருக்க, எவ்வித அரசியலமைப்பு உதவும் என்பதே பிரச்சினை. நாடு மேலும் பல பல கூறுகளாகப் பிளந்து விடாமல் பாதுகாக்க ஒற்றை ஆட்சியே மேலானதென்பது எனது கருத்தாகும். சமஷ்டி முறையில் குறுகிய அபிமானங்களுக்கும், மொழிவெறிக்கும், சாதி, மதச் சார்புள்ள இயக்கங்களுக்கும் மாகாண வேற்றுமைகளுக்கும் இடமளிக்கின்றது.

## மத்திய மந்திரி சபை

நான் கூறுவது, பாலைவனத்தில் போட்ட கூச்சலாக இருக்கலாம். ஆனுலும் இந்தியாவுக்கு சட்டம் செய்ய ஒரே ஸ்தாபனம், ஒரே பார்லிமேண்டே வேண்டுமென்றும் நான் கருதுகிறேன். மத்திய மந்திரி சபையே பாரத நாட்டின் நிர்வாகமனைத்துக்கும் பொறுப்பாக இருக்கவேண்டும். **பார்லிமெண்ட் தேர்தல் கிராம, ஜில்லா, மாகாண பஞ்சாயத்து சபைகள் மூலம் மறைமுகமான முறையில் நடைபெறவேண்டும்.**

நான் கூறும் இந்த யோசனையை பாரபட்சமின்றி, விருப்பு வெறுப்பு இன்றி நிதானமாகக் கவனிக்க வேண்டுகிறேன். பழைய கருத்துக்களையோ, வேறு நோக்கங்களையோ கொண்டு இதைக் குழப்பக்கூடாது: பாரத நாட்டை ஐக்கியப்படுத்தி, மக்களனைவரையும் ஒரு தேசிய சமுதாயமாக்கி, அவர்களிடையே தேசாபிமானத்தை வளர்ப்பதெப்படி என்ற ஒரே நோக்கத்தைக் கொண்டு இதை நிதானிக்கவேண்டுகிறேன். யாரையும் புண்படுத்தவேண்டுமென்று நான் 1950ஆம் வருஷ அரசியல் திட்டத்தைக் குறை கூறவில்லை. மேற்குறித்த மேலான நோக்கத்தை மனதில் கொண்டே இதை எழுதுகிறேன் என்ருலும் எந்த ஒருவரையாவது எனது கூற்றுப் புண்படுத்திஞல், நான் மனப்பூர்வமாக மன்னிப்புக்கேட்டுக் கொள்ளுகிறேன்.

சமஷ்டி முறையினுல், மாகாண, மொழி வெறிகள் அதிகரித்துள்ளதாயும், நாட்டின் ஒற்றுமை உணர்ச்சியைக் குலைத்துள்ளதாகவுமே நான் கருதுகிறேன். மாகாண சட்டசபை, மந்திரி சபை இவற்றுக்காகச் செலவிடப்படும் பெருந்தொகைகளும் வீணேயாகுமென்று பொதுவாகக் கூறப்படுகின்றது. நிர்வாகம் திறமையாக இருக்க வேண்டுமானுல் எந்த ராஜ்யத்திலும் ஆகக் கூடியது ஐந்து மந்திரிகளே இருக்கவேண்டும். பல பல அரசியல் ஜாலவித்தைக்காரர்களையும் கோஷ்டிகளையும் திருப்தி செய்ய, வண்டி வண்டியாக மந்திரிகளும், பரிவாரங்களும் தேவையில்லை. பல ராஜ்யங்களும் கணக்கற்ற "பெரிய மனிதர்கள்", சின்னச் சின்னக் காரியங்களிலும் தலையிட்டு, குழப்புகிருர்கள். ஜில்லா நிர்வாகத்தில் சங்கடம் ஏற்படுகிறது. ஓயாத டெலிபோன் கூப்பாடுகள் போட்டு, தங்கள் தொகுதி வாக்காளரைத் திருப்தி செய்ய அரசாங்க ஊழியருக்குப் பெருந் தொல்லை கொடுத்து அவர்களைக் கெடுக்கிருர்கள்.

## பஞ்சாப் மாகாணத்தில்

எனது சொந்த பஞ்சாப் மாகாணத்தில் 1950ஆம்வருஷ அரசியல் சட்டம் எப்படிநடைபெறுகிறதென்பதை முதலில் பார்ப்போம். சம்பந்தப்பட்டவர்களெல்லாரும் மன்னிக்க வேண்டும். அங்கு ஸ்திரமான அரசாங்கமோ, திறமையான நிர்வாகமோ இல்லை. அரசியல் சட்டத்தை நிறுத்தி வைத்து, ஜனுதிபதியே நிர்வாகத்தை மேற்கொண்ட போது தான் நிலைமை மேலாக இருந்தது. சென்ற பத்து வருஷ காலத்தில் பல அரசியல் கோஷ்டிகளிடையேயும் அதிகார வேட்டைக்காரர்களுக்கிடையேயும் எத்தனை சூழ்ச்சிகள்! ஒருவரை ஒருவர் கால் இழுத்துவிட சமயம் பார்த்துக் கொண்டிருந்தனர்.

அதே தேர்தலையே குறிக்கோளாகக் கொண்டு புதிய புதிய சட்டங்களைச் செய்தார்கள். சென்ற பத்து வருஷங்களில் நிறைவேற்றிய சட்டங்களின் எண்ணிக்கை முந்திய 20 வருடங்களில் செய்யப்பட்டதை விட இரட்டிப்புக்கு மேலாகும். அவற்றில் பல அமுலுக்குக் கொண்டுவர முடியாதது. வரிப்பளுவாலும், பல கட்டுப்பாடுகளாலும் சங்கடப்படும் பஞ்சாபிகளின் நன்மைக்காக இச்சட்டங்களாம். இதே சமயம் மந்திரிகள் பெரும் பணச் செலவில் உல்லாசப் பிரயாணங்கள் செய்கின்றனர்.

நகரங்களிலும், கிராமப்புறங்களிலும் வசிக்கும் பல மக்களைக் கண்டு நான் பேசியுள்ளேன். நிர்வாகத்தைப்பற்றி

[13ஆம் பக்கம் பார்க்க]

உத்தரவாதமுள்ள

ஜெயிஸ் பிளுயிட்

நெருப்புத் தண்ணீரையே வாங்குங்கள்.




'ஜெயிஸ்'

— மார்க்கையும் —

'உதய சூரியன்'

அடையாளத்தையும் தாங்கிய லேபிளையும் மூடியையுமுடைய

ஜெயிஸ் பிளுயிட்

நெருப்புத் தண்ணீரே சிறந்தது.

## பூஜ்யம் தபால்

ஸ்ரீமதி
ஸ்ரீமாவோ. பண்டாரநாயக்கா
அத்தனகலை.

அம்மணீ!

வணக்கம். தீராத துக்கத்தில் மூழ்கியுள்ள தங்களுக்குக் கடிதமெழுதித் தொந்தரவு கொடுக்க எனக்கு இஷ்டமில்லை.

ஆனாலும் நாட்டு நன்மையைக் கருதி இதை நான் எழுத வேண்டியுள்ளது. தங்களது புகழ்பெற்ற கணவனாரின் மரணத்தால் காலியான அத்தனகலை பார்லிமெண்ட் தொகுதிக்கு, தங்களை அபேட்சகராக நிற்கும்படி பலர் கேட்டுக் கொண்டுள்ளதாக அறிகிறேன். தேர்தல் நெருங்கி வருகிறது. ஆனாலும் தங்கள் பதில் தெரியவில்லை.

சில கூட்டங்களில் தாங்கள் தலைமை வகித்து ஆங்கிலத்திலே வெகு கச்சிதமாகவும் அரசியல் ஞானி போலவும் பேசியுள்ளதாகக் கேள்விப்பட்டேன். சிறப்பாக வகுப்புக் கலவரங்கள் ஏற்பட்டதை அடுத்து, தாங்கள் 'மகிளா சமிதி' என்ற பெண்கள் ஸ்தாபனத்தின் ஆதரவில், சமூக சமரசத்தை வற்புறுத்தி நல்ல பிரசாரம் செய்தீர்களாம்.

தங்களைப்போன்ற வகுப்பு வாதமற்ற பரந்த மனப்பான்மையும், நல்லமனதும், பேச்சுத் திறனுமுள்ள பெண்மணிகள் பார்லிமெண்ட் சபைக்கு வந்து தேசப்பணியில் ஈடுபடவேண்டுமென்று பலரும் விரும்புவதில் வியப்பில்லை.

தங்கள் கணவனார் இருக்கையில் யாரோ ஒருவர், பிரதம மந்திரியாகத் தாங்கள் வர வேண்டுமென்று கூறியதற்கு அது வேண்டவே வேண்டாமென்று மறுத்தது நினைவிருக்கிறது. ஆனல் இப்போது தங்கள் கணவர் இல்லை.

அந்தத் தொகுதி மக்கள் மட்டுமன்றி இலங்கை அனைத்தும், ஏன் வெளி உலகும் கூட தங்களுக்குப் பெரிதும் அனுதாபம் தெரிவிக்கின்றது. சாதாரணமாக நான் தேர்தல் விஷயங்களில் தலையிடுவதில்லை. ஆனல் தங்களைப்போன்றவர்களின் சேவை நாட்டுக்குக் கிடைக்க வேண்டுமென்ற ஆவலில் இதை எழுதுகிறேன்.

எந்தக் கட்சி சார்பிலும் இன்றித் தனிப்பட்ட முறையில் தாங்கள் அபேட்சகராக முன் வாருங்கள். எதிர்ப்பின்றித் தாங்கள் ஒரே மனதாகத் தெரிவு செய்யப்படுவீர்கள் என்பதில் சந்தேகமில்லை. தங்கள் புருஷன் வகித்து வந்த ஸ்தானத்தைத் தாங்கள் வகித்து அந்தப்பணியைத் தொடர்ந்து செய்வது அவரது ஆன்மாவுக்கே, திருப்தியும் மகிழ்ச்சியும் அளிக்குமல்லவா?

இப்படிக்கு
பூஜ்யம்

குறிப்பு:—

தங்கள் கணவனாரின் அகால மரணம் குறித்துத் துக்கம் தெரிவித்த எல்லோருக்கும் தாங்கள் நன்றிகூறி வெளியிட்ட அறிக்கையைப் பார்த்தேன். ஒரு பெரிய அரசியல் தலைவரின் அறிக்கையைப் போல் இருந்தது அது. ஆனல், எல்லாரையுங் குறிப்பிட்ட தாங்கள், பிரதமர் தகநாயக்காவை மட்டும் குறிப்பிடாமல் விட்டுவிட்டதைக் கண்டேன். அவர் பெயரைத் தாங்கள் விட்டுவிடக் காரணமென்ன? மறந்துவிட்டீர்களா? நீர்வீழ்ச்சி போல் கண்ணீர் சொரிந்தாரே! அவரை நீங்கள் உண்மையில் மறந்திருக்க முடியுமா? பின்னர் அவர் பெயரைக் குறிப்பிடாமல் விட்டதேன்? தப்பான கருத்துகள் பரவுவதால் இதைப்பற்றித் தாங்கள் விளக்கி ஓர் அறிக்கை வெளியிடுவது நல்லது.

பூஜ்யம்

ஃ ஃ ஃ

சௌ என் லாய்,
பிரதம மந்திரி,
பீகிங்.

தோழரே!

தீபாவளி வாழ்த்துக்கள்!

தாங்கள் இமய மலைக்கு இப்பால் வந்து, இம்முறை தீபாவளி கொண்டாடியதாகக் கேள்விப்பட்டேன்.

தங்களது தீபாவளி கொண்டாட்டத்தில் சில இந்திய "வண்ணத்திப் பூச்சிகள்" சேதமடைந்தனவாம் இது பற்றி தங்கள் பஞ்சசீலத் தோழர் நேரு புகார் கூறுகிறார். நஷ்டஈடு வேண்டுமென்றார்.

ஆனல் நேருவின் "வண்ணத்திப் பூச்சிகள்" தான் உங்கள் வீட்டுக்கு அத்து மீறி வந்து தங்களைத் தாக்கியதாகவும் தங்களுக்குத்தான் நேரு நஷ்டஈடு தரவேண்டுமென்றும் கேட்கின்றீர்கள்.

எனக்கு ஒரு சந்தேகம்! தங்களை அந்த "வண்ணத்திப் பூச்சிகள்" தாக்கியதால், தங்களுக்கு ஏதும் சேதம் ஏற்பட்டதா? தாங்கள் இது குறித்து ஒன்றும் சொல்லாததிலிருந்து தங்களுக்குச் சேசதமெதுவுமில்லை என்றே நினைக்கிறேன். தங்களைத் தாக்கிய "வண்ணத்திப் பூச்சி"களில் ஒன்பது,செத்துக் கிடந்ததாகக் கூறுகின்றீர்கள். அவை எப்படி இருந்தன? யார் அவர்களைக் கொன்றது? அல்லது தற்கொலை செய்து கொண்டு விட்டனவா?

தாங்களும் தங்கள் பஞ்சசீலத் தோழரான நேருவும் இப்படி சண்டையிட்டுக் கொள்வது எனக்குப் பிடிக்கவேயில்லை. சந்தி சிரிக்கிறது. இருவருக்கும் பலத்த சண்டையை மூட்டிவிட சில பேர்வழிகள் காத்திருக்கிறார்களென்பது தங்களுக்குத் தெரியும்.

தாங்களோ ஒரு பௌத்தர். அகிம்சா பரமோதர்ம என்ற அற நெறியைக் கடைப் பிடிப்பவர்கள். அதன்படி ஒரு "வண்ணத்திப் பூச்சி"யையும் கொல்லப்படாதல்லவா?

இங்கும் தீபாவளி இன்றுடன் முடிந்து விடுவதால் நீங்களும் உங்கள் இமயமலைத் தீபாவளி வேடிக்கையை நிறுத்தி விடுவீர்களென்றே நம்புகிறேன்.

இப்படிக்கு
பூஜ்யம்

குறிப்பு:-

இந்தியாவிலேயுள்ள தங்கள் தோழர்களுக்கு, தங்கள் காரணமாக இப்போது பெரிய தர்மசங்கடம் ஏற்பட்டுள்ளதாயும், அவர்களுக்குள் பிளவுகள் கிளம்பியிருப்பதாயும் கேள்விப் பட்டேன்.

மேலும் கேரளத்தில் பொதுத் தேர்தல் விரைவில் வருவதால், தங்கள் தோழர்களுக்கு, தங்கள் இமயமலை விளையாட்டு மிகவும் திகைப்பளிப்பதாயும் அறிந்தேன். தங்களுக்கு இதெல்லாம் தெரியாதல்ல.

வேறெதற்குமில்லாவிடினும், இந்தியாவிலுள்ள உங்கள் தோழர்களின் நன்மையைக் கருதியாவது, . "வண்ணத்திப் பூச்சி" பிடிக்கும் இந்த இமயமலை விளையாட்டை நீங்கள் உடன் நிறுத்தி வைக்க வேண்டியது அவசியமென அறிவுறுத்த விரும்பும்,

பூஜ்யம்.

## மனை குளிர வரும் தீபாவளி

[3ஆம் பக்கத் தொடர்ச்சி]

என, கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை பாடுவது நெஞ்சில் ஒலிக்கின்றது. நாட்டிலே கவிந்துள்ள துன்ப அலைகளில் எற்றுண்டு நலிவோர்க்கு இதந்தரும் நன்னுள் இந்நாள். இந்த அரும் பெரும் நாளை மகிழ்வு குலவக் கொண்டாடுவதே நம் கடன். 'சென்றதை எண்ணி வருந்தாதேடா' என்ற தென்பூட்டும் வார்த்தை அது. இதந்தரும் தீபாவளியோடு நாமும் இணைந்து செல்வோம்.

**'நல்லெண்ணெய் பூசிக் குளிப்போம், அடா!—நல்ல**
**நல்ல உணவுகள் உண்போம், அடா!**
**அல்லும் பகலும் உழைப்பதெல்லாம்—வயிறு**
**ஆரப் புசிப்பதற் கல்லவோடா!**

உழைத்துக்களைத்து இயந்திரமாக மாறும் மனிதனுக்கு எத்தனையோ விடுமுறை நாட்கள் கிடைத்துவிட்டபோதும், சகலரும் மனமகிழும் நாளில் கூடிக்கொண்டாடுவது போன்ற இன்பம் வேறில்லை. ஆண்டில் ஒன்றோ இரண்டோ பண்டிகைகள் தாம் அவனைக் குதூகலமடையச் செய்கின்றன.


சர்வ மக்களும் அதிற் பங்கு கொண்டு மகிழும்போது தீமையின் இறுகியபிடி தளர்ந்து இதம் தரும் இன்பம் உண்டாகின்றது. எங்கள் நாட்டில் என்றுமே தீபாவளியாக இருந்துவிட்டால் என்ன? இந்தக் கற்பனையும் உதயமாகத்தான் செயயும். அந்தக் கற்பனை காட்டும் ஒரு சுபதினமாக இன்றைய தீபாவளி இருக்கட்டுமே.

மண்குளிர, மனைகுளிர, மக்கள் அகங்குளிர வரும் தீபாவளியின் இன்பம் அனைவருக்கும் உரித்தாகுக.

## மின்சார விநியோகம்

குரும்பசிட்டிப் பகுதிக்கு மின்சாரம் விநியோகிப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. அநேகமாக இன்னும் ஒரு மாதத்தில் அங்கு மின்சாரம் விநியோகிக்கப்படும்.


நீங்கள் செய்ய விரும்பும் கணக்கற்ற தையல் வேலைகளை




நெச்சி
தையல் மெஷின் செய்துகொடுக்கும்.

NECCHI

உலகத்திலேயே மிகச்சிறப்பு வாய்ந்த தையல் மெஷின். இலங்கையிலுள்ள வீடுகளிலெல்லாம் நெச்சி தான் இடம்பெற்று வருகிறது. ஏனெனில் நெச்சி மூலம் பெண்களின் கனவுகள் நனவாகின்றன.

உங்கள் பல்வேறு தையல்வேலைகளையும் மிகவும் இலகுவாகவும், திறமையுடனும் செய்துவிடுகிறது நெச்சி தையல் மெஷின்.

சாதாரண தையல்மெஷினில் வேலை செய்வதனல் ஏற்படும் களைப்போ, சோர்வோ நெச்சி மெஷினை உபயோகிக்கும் பொழுது ஏற்படவே மாட்டா.

நெச்சி சூப்பர்நோவா ஓட்டமெட்டிக்கா தையல்மெஷின், பலவித வர்ணப் பூவேலைகளையும், லேஸ் வேலைகளையும், பட்டன் துவாரங்களையும் எவ்வித கஷ்டமுமின்றி தைத்துக் கொடுக்கும் திறமை வாய்ந்தது.

நெச்சி நோரா, ஓட்டோமெட்டிக்கா ரூ.825/-தொடக்கம்.

நெச்சி எஸ்பெரியா ரூ.375/-தொடக்கம்.

நெச்சி மிரெல்லா (மின்சாரத் தாலும் கையினலும் இயங்குவது) ரூ. 625 தொடக்கம்.

விற்பனையாளர்கள்:

தி நியூ சீத்தா ஸ்டோர்ஸ் (கம்பஹா)


கெந்தலா ஸ்டோர்ஸ் (கெந்தலா)

பி. ஏ. எஸ். ட்ரான்ஸ்போர்ட் லிமிடெட் (ஹோமகம)

தி பயனியர் ஸ்டோர்ஸ் (கண்டி)

5 வருஷ உத்தரவாதத்துடன் கட்டுப்பணத்திற்குக் கிடைக்கும்.

மெஷினின் பாகங்களை எம்மிடமே பெற்றுக் கொள்ளலாம்.



விபரங்களுக்கு

ரிச்சார்ட் பீரிஸ் அன் கோ., லிமிடெட்

மெயின் வீதி, கொழும்பு. போன்: 4753



மகாவித்துவான் கணேசையர்

## வித்துவசிரோமணியின் அஸ்தி சேமிப்பு வைபவம்

செந்தமிழும் சிவமணமும் கமழும் வைபவமொன்று சென்ற புதன்கிழமை யாழ்ப்பாணம் வருத்தலை விளான் மருதடி விநாயகராலயத்தருகே நடைபெற்றது. இங்குதான் காலஞ்சென்ற மகா வித்துவான் பிரமஸ்ரீ சி. கணேசையர் ஆச்சிரமம் அமைத்து வாழ்ந்து வந்தார். சென்ற புதன்கிழமை ஐயா அவர்களின் சிரார்த்த தினமாகும். அன்று மாலை குறித்த ஆலயத்துக்கு வடக்கே அமைக்கப் பட்டுள்ள சமாதியில் அன்னாரது அஸ்தி சேமித்து வைக்கப்பட்டது.

ஐயா அவர்களின் ஆச்சிரமத்திலிருந்து வெள்ளிப் பாத்திரத்தில் இடம்பெற்ற அஸ்தியை யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் திரு. எம். ஸ்ரீகாந்தா பயபக்தியுடன் எடுத்துச் சென்று சமாதியில் வைத்தார். ஐயாவின் மாணாக்கர்களும் அன்பர்களும் இவ் வைபவத்திற் கலந்து கொண்டனர். திராவிட சிற்ப முறைக்கேற்ப நிறுவப்பெற்ற சமாதி திருக்கோவில் போற் காட்சியளிக்கின்றது.

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள், மகாவித்துவான் கணேசையர் அவர்களைப் பற்றிப் பேசும்போது ஐயா அவர்களுக்குப் பிற்காலத்தில் இறைவழிபாட்டிலேயே மிகுந்த ஈடுபாடு இருந்ததாகவும் தாம் வருந்திப் பெற்ற கல்விச் செல்வத்தை ஆத்ம ஈடேற்றத்துக்காகவே பயன்படுத்தி அதில் மன நிறைவு எய்தி வந்தார் எனவும் குறிப்பிட்டார். ஐயா அவர்கள் எவ்விதமாகத் தமது இறுதிகாலம் கழிய வேண்டுமென விரும்பினாரோ, அவ்வாறே அவர்கள் ஆச்சிரம வாழ்க்கையை மேற்கொண்டு திருவடி நிழலிற் கலந்து கொண்டார் எனக் கூறிப் பண்டிதமணி வித்துவசிரோமணிக்குத் தமது அஞ்சலியைச் செலுத்தினர்.

மகாவித்துவான் கணேசையர் அவர்களின் நினைவுச் சின்ன அமைப்புச் சபையின் செயலாளர் பண்டிதர் வ. நடராஜா அனைவருக்கும் நன்றி கூறினார். அச்சபையின் சார்பில் விரைவில் அங்கு ஒரு விழா நடாத்தப்படுமெனவும் அவர் தெரிவித்தார்.

# கலை தெய்வீகத்தை மலரச் செய்கின்றது தமிழினத்தின் பழைய பண்பாடு இன்று மங்கி மறைவதேன்?

## கலை மன்றங்கள் செய்யவேண்டிய பணி

— அஜன் —

புது டில்லியிலே 1956 ஆம் ஆண்டில் நடைபெற்ற ஆசிய எழுத்தாளர் மாநாடு ஆசிய நாடுகள் கலைத்துறையில் பெற்றுள்ள விழிப்புணர்ச்சிக்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்கியது. றங்கூனில் 1955 ஆம் ஆண்டு பெப்ரவரியில், 'ஆசியாவிற் கலாசார விடுதலை' என்ற பொருளை அடிப்படையாகக் கொண்டு ஒரு மாநாடு நடைபெற்றது. இம் மாநாட்டில் பங்கு பற்றிப் பேசியவர்கள் அனைவரும் ஆசிய நாடுகள் அனைத்தும் தங்கள் சொந்தக் கலைகளையும் கலாசாரங்களையும் பேணிக் காக்கவேண்டுமென வற்புறுத்தியிருந்தனர். இந்த வகையில் இலங்கையில் ஏற்பட்டுள்ள கலாச்சார மறுமலர்ச்சிக்கு ஆதரவளிக்க அரசினர் முன்வந்திருப்பது வரவேற்கத் தக்கதே. யாழ்ப்பாணத்திலும் அரசினரின் ஆதரவுடன் பிரதேசக் கலை மன்றம் கலைவளர்ச்சிக்கான திட்டங்களை வகுத்து அத்துறையில் உழைத்து வருகின்றது.

* * *

கலைத் துறையில் ஒரு நாடு அடையும் பெறு பேறுகளிலிருந்து மட்டுமே அதன் பெருமையைக் கணிக்க முடியும். தமிழினம் பழம் பெரும் கலாச்சாரப் பெருமை வாய்ந்தது. பழந்தமிழரின் வாழ்க்கை சமயத்தோடும் கவின்கலை நுகர்ச்சியோடும் வளமுற்றுத் திகழ்ந்தது. வாழ்க்கையும் கலையும் புறம்பானதென்ற எண்ணம் அவர்களுக்கு இருந்ததில்லை. கலையும், கலாசாரமும், சமயமும் அவர்களின் நாளாந்த வாழ்விற் பரந்து செறிந்திருந்தன. துரதிருஷ்ட வசமாக மேனாட்டு வாழ்க்கை முறைகளின் தாக்கத்தினால் எங்கள் பழைய கலாசார முறைகளை நாம் இழந்துவிட்டோம். இவ்வாறு சென்ற சனிக்கிழமை யாழ்ப்பாணம் கச்சேரியில் நடைபெற்ற பிரதேசக் கலை மன்றத்தின் கூட்டத்திற் பொதுச்செயலாளரான கலைப் புலவர் க. நவரத்தினம் தமது பேச்சிற் குறிப்பிட்டார்.

### அரசினர் ஆதரவு

மன்றத் தலைவரும் யாழ்ப்பாண அரசாங்க அதிபருமான திரு. எம். ஸ்ரீகாந்தா தலைமை வகித்துப் பேசுகையில் கலை மன்றத்தின் நோக்கத்தைப் பற்றியும் தமிழ்க் கலைகள், கைப்பணிகளின் விருத்திக்குக் கலாசார அமைச்சுக் காட்டி வரும் ஆதரவையும் விளக்கினார்.

கலைப்புலவர் க. நவரத்தினம் பேசும்போது தமிழ்க் கலை வளர்ச்சியில் அரசினர் அக்கறை காட்டி வருவது தமிழினத்தின் அதிர்ஷ்டமேயெனவும், மன்றத்தின் சகல முயற்சிகளுக்கும் அரசினர் பண உதவி புரிந்து வருவார்கள் எனவும் தெரிவித்தார். இத்தருணத்தை இழந்துவிடாது மக்கள் நல்ல முறையிற் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமெனவும் அவர் கேட்டுக்கொண்டார். அவர் தொடர்ந்து பேசியதாவது:

வாழ்க்கை பற்றிய எமது நோக்கம் இன்று முற்றாக மாறிவிட்டது. மேனாட்டு நல்ல காரியங்களைப் பின் பற்றுவதில் தவறெதுவுமில்லை. ஆனால் அவற்றை எமது நாட்டின் தேவைகளுக்கும் பண்புக்கும் சூழ்நிலைக்கும் ஏற்ற வகையில் அமைத்துக்கொள்ளவேண்டும். மேனாட்டை முற்று முழுக்கப் பின் பற்றுவதால் எமது பண்பாட்டின் தனித்தன்மை அழிந்துவிடும். இது தொடர்ந்து நடைபெறுமாயின் உலகின் பொதுப் பண்பாட்டின் முன்னேற்றம் மிகுதியும் பங்கமடையும்.

### கலைச்சுவை குன்றுதல்

கலையழகுடன் பொலிந்து விளங்கும் வீட்டுத் தேவைகளுக்குரிய எத்தனையோ பாத்திரங்கள் தமிழ் மக்களின் இல்லங்களில் முதன்மை ஸ்தானம் பெற்று விளங்கின. இவையாவும் இப்போது மூலைக்குள் ஒதுக்கப்பட்டுவிட்டன. இல்லையேல் பயனற்ற பொருள்கள் என விற்கப்படுகின்றன. இவற்றுக்குப் பதிலாக இங்கிலாந்திற் செய்யப்படும் அவலட்சணப் பொருள்களை மக்கள் வாங்குகின்றனர். இங்கிலாந்திலுள்ள படித்த மனிதர்கள் இவற்றைத் திரும்பியும் பார்ப்பதேயில்லை. யப்பானிலும், அமெரிக்காவிலும், ஐரோப்பிய நாடுகளிலும் உருவாக்கப்பட்ட அவலட்சணமான அலுமினியப் பொருள்களும் கோப்பை பீங்கான்களுமே இன்று எங்கள் இல்லங்களிற் குவிந்து கிடக்கின்றன. இதுகாரணமாக மக்கள் தங்கள் அழகுணர்ச்சியை இழந்து வருவதுடன் சொந்த நாட்டிலே பண்டுதொட்டு அழகிய பொருள்களைச் செய்து தமது கைத்திறனைக் காட்டி வந்த தொழிலாளர்களும் பிழைக்க வழியின்றித் தவிக்கின்றனர்.

[10ஆம் பக்கம் பார்க்க]


# இந்தியா

**அதிசய உலகம் உங்கள் தலைவாயிலில் நிற்கின்றது!**

வனப்பும், லாவண்யமும் நிறைந்த இவ்வுலகை பண்டைய சிற்பிகள் எல்லோரா, அஜந்தா, கோனராக் முதலிய இடங்களில் கல்லுருவத்தில் செதுக்கியிருக்கிறார்கள் .........மலைகள் நிறைந்த இடங்களில் மனோரம்மியமான காட்சிகள்......பழம் பெரும் பொக்கிஷங்களும்மகிழ்ச்சி பொங்கித் ததும்பும் திருவிழாக்களும்...... புராதன கட்டடங்கள், ஸ்தூபிகள்......நவ இந்தியாவின் மகோன்னதத் திட்டங்கள்... இவையெல்லாம் நீங்கள் பார்த்து மகிழக் காத்து நிற்கின்றன!



For details write to your travel agent
or
**GOVERNMENT OF INDIA TOURIST OFFICE**
6. York Street, Fort.
Colombo.
Phone: 78805
Grams: TOURINDIA

இப்பொழுது இந்த 1959-ம் ஆண்டில் இந்தியா குளிர்சாதனங்களுடன் கூடிய ரயில்வே, விமானம் ஹோட்டல் முதலிய நவீன வசதிகளையெல்லாம் உங்களுக்கு அளிக்க முன் வந்துள்ளது.

இவற்றுக்கான கட்டணங்கள் எல்லாம் உங்கள் குடும்பச் செலவுத் திட்டத்திற்கு அமைந்தவையே!
உள்ளம் மகிழும் உல்லாச யாத்திரிகைக்கு நல்ல தருணம் இதுவே!

விபரங்களுக்கு:
உங்கள் பிரயாண ஏஜன்டுக்கு
அல்லது
**இந்திய அரசாங்க டூரிஸ்ட் காரியாலயம்,**
6, யோர்க் ஸ்டிரீட், கோட்டை, கொழும்பு.

போன்: 78805 தந்தி: "TOUR INDIA"

# ஈழநாடு

யாழ்ப்பாணம், விகாரி ஆண்டு ஐப்பசி மீ 14 உ (31-10-59)

EELA NADU: National Tamil weekly Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna.
*Colombo Office*: 142, New Bullers Road, Colombo 4.


## அரசாங்கம் பிழைத்தது

நூல் இழையில் தொங்கிக் கொண்டிருந்த தகநாயக்காவின் அரசாங்கம் நியமன அங்கத்தவரின் ஆதரவுடன் தப்பிப் பிழைத்துவிட்டது. எனினும் இப்போதைய ஆட்சி பொது மக்களின் நம்பிக்கையைப் பெரிதும் இழந்துவிட்டது. இனி இப்படியே அரசாங்கத்தைக் கொண்டு செல்வது சுலபமோ, நன்மையோ அல்ல.

கழுதை தேய்ந்து கட்டெறும்பானதாக ஒரு கதையுண்டு. 1956ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் எம். ஈ. பி. அரசாங்கம் இருந்ததையும், இப்போது அதுவுள்ள நிலைமையையும் ஒப்பிடும்போது, இந்தக் கதைதான் எமக்கு ஞாபகத்துக்கு வருகிறது. காலஞ்சென்ற பண்டாரநாயக்காவின் தலைமையில், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, புரட்சிவாத சமசமாசக்கட்சி, பாஷா பெரமுனை முதலிய கட்சிகள் கூட்டாக எம். ஈ. பி. என்ற மக்கள் முன்னணிக் கட்சியை அமைத்துத் தேர்தல் விஞ்ஞாபனம் தயாரித்து அதன்மீது மக்களின் ஆதரவை நாடினர். எம். ஈ. பி. கட்சிக்கு அதிக ஆதரவு கிடைத்ததால் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றனர்.

ஆனால் எந்தத் தலைவரின் கீழ் இந்தக் கூட்டாட்சி ஒன்று சேர்ந்ததோ அந்தத் தலைவர் கொலை செய்யப்பட்டுவிட்டார். அவர் இன்று இல்லை. மேலும் அரசாங்கத்திலிருந்து புரட்சிவாத சமசமாஜக்கட்சியினர் சில மாதங்களுக்கு முன் விலகினர். அதன் பிறகு கட்சியில் வலதுசாரிகள் ஆதிக்கம் பெற்றனர். இப்போது வலதுசாரிகளிடையேயும் பூசல்கள் ஏற்பட்டு ஸ்ரீமதி விமலா விஜயவர்த்தன மந்திரிபதவியிலிருந்துமட்டுமன்று, கட்சியிலிருந்தே விலக்கப்பட்டிருக்கின்றார். இதனால் கட்சியின் பலமும் வரவரக் குன்றி நியமன அங்கத்தினரின் பலத்தில் நித்தியகண்டமாக அரசாங்கத்தின் வாழ்வு இருக்கிறது.

இப்போதுள்ள நிலையில் அரசாங்கத்தை நாட்டின்முன்னேற்றத்துக்கான முறையில் தொடர்ந்து நடாத்த முடியுமா என்பது சந்தேகம். கட்சி மிகவும் பலவீனமடைந்துள்ளது. நாட்டு மக்கள் மனத்திலும் அமைதியில்லை. அவசரகால பிரகடனம் இல்லாவிடில், கலவரங்கள் அதிகமேற்படக்கூடும். இப்படியே எவ்வளவு காலம் சமாளிப்பது? இதனால் யாருக்குப் பயன்? இது ஜனநாயகமாகுமா?

நாட்டு மக்களின் நன்மையை உண்மையில் கருதுவதாயின், நாம் சென்றவாரம் இப்பத்திரிகையிற் குறிப்பிட்டதுபோல், சர்வ கட்சி அரசாங்கம் ஒன்றினை அமைத்து, நாட்டு மக்களின் நம்பிக்கையைப் பெற்று, அமைதியை நிலைநாட்ட வேண்டும். அதுமட்டுமல்ல; இப்போதுள்ள அரசியல் அமைப்பை மாற்றவேண்டிய அவசியத்தைக் காலஞ்சென்ற பிரதமர் பண்டாரநாயக்காவே உணர்ந்தார். இதைத்திருத்த ஒரு குழுவை நியமித்தார். அதன் வேலை அரைகுறையாகவுள்ளது. சர்வ கட்சி அரசாங்கம், இந்த அரசியல் திருத்தத்தைத் திருப்திகரமாகச் செய்து, அதன் மீது பொதுத்தேர்தல் நடத்துவதே எதிர்கால ஆட்சி அதிக ஸ்திரமாகவும், மக்களுக்கு நன்மை பயக்குவதுமாக இருக்கும்.

எக்காரணம் பற்றியும் சர்வ கட்சி அரசாங்கம் அமைக்க முடியாதுபோனால், கவர்னர் ஜெனரலே இச்சமயம் ஆட்சிப் பொறுப்பை ஏற்று, அரசியல் திட்டத்தைத் தக்கபடி ஜனநாயக முறையில் திருத்தம் செய்து பின்னர் பொதுத்தேர்தல் நடாத்துவதையே பொது மக்கள் பலவிதங்களிலும் வரவேற்பார்கள்.

## ஸ்டான்லிக்கும் கல்தா கொடுக்க வேண்டும்

(1-ஆம் பக்கத் தொடர்ச்சி)

ராமல் பல ரகசியங்களை அம்பலப்படுத்தினார்.

"இந்த அரசாங்கத்துக்கு இந்த நாட்டை ஆள தார்மிக உரிமை சிறிதும் கிடையாது. இதன் ஒவ்வொரு நடவடிக்கையும், இச்சபையின் நம்பிக்கையை இழக்கச் செய்வதாகும்"

என்ற தீர்மானத்தைப் பிரேரித்து குறிப்பிட்டதாவது:

சென்ற 1956ம்ஆண்டுத் தேர்தலில் மொத்தம் பதிவான 20 லட்சத்துக்கு மேற்பட்ட வாக்குகளில் எம். ஈ. பிக்கு 11 லட்சம் வாக்குகள் கிடைத்தன. ஆனால் இப்போது அரசாங்கக் கட்சியிலுள்ள பிரதிநிதிகள் பெற்ற வாக்குகளை எல்லாம் கூட்டினால் 7 லட்சம்தானுண்டு. ஆகவே மக்களின் போதிய ஆதரவை இந்த அரசாங்கம் பெறவில்லை. இந்தப் பார்லிமெண்டைக் கலைத்து மறு தேர்தல் நடாத்தி மக்களின் தீர்ப்பைப் பெற வேண்டும்" என்றார்.

"இந்த அரசாங்கம் அளித்த உறுதி மொழிகளை மீறியது நியாயமின்றி அவசரகாலத்தை நீடிக்கிறது; பத்திரிகைகளுக்கு வாய்ப்பூட்டுச் சட்டம் போட்டது. ரேடியோவை துஷ்பிரயோகம் செய்கிறது; சிம்மாசனப் பிரசங்கத்திற் குறிப்பிட்ட சமதர்மக் கொள்கைக்குமாறாக, வர்த்தகத்தைத் தனிப்பட்டவரிடம் ஒப்புவித்துள்ளது; பிரதமரின் கொலை சம்பந்தமான புலன் விசாரணையைச் சரிவர நடாத்தத்தவறியது, முதலிய குற்றச்சாட்டுகளைச் சுமத்தினார்.

"காலஞ்சென்ற பிரதமருக்கு பார்லிமெண்ட்சபை உடன் அனுதாபம் தெரிவிக்கமுடியாமல், வேண்டுமென்றே தாமதம் செய்யப்பட்டுள்ளது. அவசர காலத்தில் மக்கள் உரிமைகளைக் காக்க விசேஷ கமிட்டியைப் பிரதமர் நியமிக்கத் தவறிவிட்டார். பண்டாரநாயக்கா, படுகாயத்துடன் ஆஸ்பத்திரியிலிருக்கையில், ஒரு பொலிஸ் அதிகாரி "கிறிஸ்தவர் தான் மஞ்சள் உடையில் இந்தக்காரியம் செய்துள்ளார்" என்ற புரளியைக் கிளப்பினர். உடன் அவரைச்சிறையில் தள்ளுங்களென்றேன்."

### அரசியல் குறிப்பு

டக்டர் என். எம். மேலும் பேசுகையில், "ரேடியோ அரசியல் குறிப்பு டெம்பிள்ட்ரீஸ் மாளிகையில் தான் தயாராகிறது. ஸ்ரீமதி விமலாவினால் தான் ஸ்தலஸ்தாபனங்களின் பொற் காலம் ஆரம்பமாகிவிட்டதாக அந்தக் குறிப்புக் கூறியது. ஆனால் அந்தப் பொற்காலம் சிலநாட்களில் அஸ்தமித்துவிட்டது. ஸ்தலஸ்தாபனங்களின் பிதா காலஞ்சென்ற பண்டாரநாயக்கா. அவர் இறந்த பின்தான் பொற்காலம் ஆரம்பமானதென்பது அவரை அவமதிப்பதாகாதா? 1956 முதல் 59 வரை அதர்ம துவீபமாக இது இருந்ததென்றும் அரசியல் குறிப்பு கூறியது. இதுவும் அவரையும், எம். ஈ. பி. ஆட்சியையும் தாக்குவதல்லவா?

### புத்தரக்கித்தாவின் வாக்குறுதி

பின்னர் டக்டர் பெரேரா, பிரதமர் தகநாயக்காவின் அரசியல் பூர்வோத்திரங்களைப்பற்றி காரசாரமாகப் பேசினார். "அவர் புத்தரக்கித்தாவின் நண்பர். சுதந்திரக் கட்சியைச் சேர்ந்தவரல்ல. பாஷா பெரமுனைக் காரர். பிலிப் குணவர்த்தனவை நீக்கிவிட்டால், தகநாயக்காவை இரண்டு மாதங்களுக்குள் பிரதமராக்குவதாக புத்தரக்கித்த கூறியது பகிரங்க ரகசியம். "நான் ஒருவரை பிரதமராக்கினேன். அவரை வீழ்த்தி மற்றொருவரைப் பிரதமராக்கவும் செய்வேன்" என்றார் புத்தரக்கித்த. தகநாயக்காவுக்கு ராஜ யோகம் அடித்தது.

டெம்பிள்ட்ரீஸ் மாளிகையில் விமலா, தகநாயக்கா, புத்தரக்கித்தாவின் சகோதரரான டக்டர் கே. கே. யு. பெரேரா இவர்கள் இரவில் வெகுநேரம் பேசியுள்ளனர். அவர்கள் என்ன ரகசியம் பேசினர்? புத்தரக்கித உள்ளிட்டு 4 பேரை உடன் கைதுசெய்ய வேண்டுமென்று பிரதமரிடம் கூறினேன். ஏன் அவரைக் கைது செய்யப்பலநாள் தாமதம் செய்தனர்? புத்தரக்கிதவை ஏன் ரேடியோவில் பேசவிட்டீர்கள்? இந்த தவறு செய்யும் ஒரு அரசாங்கம் ஒருநாள் கூட ஆட்சி செலுத்தத் தகுதியற்றது. (எதிர்க்கட்சி கரகோஷம்) எந்த குற்றத்துக்காக, விமலாவை மந்திரிசபையிலிருந்து நீக்கினரோ அதேகாரணத்துக்காக நிதிமந்திரியையும் நீக்கியிருக்க வேண்டும். ஏன் அவரை நீக்கவில்லை? இருவரும் ஒழியவேண்டியதே. ஆனால் பிரதமர் அரசாங்கக்கட்சிக்கூட்டத்தில் பேரம்பேசினார். நிதிமந்திரியையாவது விட்டு விடுங்களென்றார். கொலையில் சம்பந்தப்பட்ட முக்கியஸ்தர்களைக் கைதுசெய்ய முடியாமல் விமலாவும் சொய்ஸாவும் தடையாக இருந்திருக்கிறார்கள்.

கைத்தொழில் மந்திரியும் புத்தரக்கிதாவின் நண்பரென்றும், அவரதுசகோதரருடன்சேர்ந்து ஒரு விஸ்கி தொழிற்சாலையை இங்கு ஆரம்பிக்கமுயற்சித்துள்ளார். (இதை கைத்தொழில் மந்திரி மறுத்தார்.)

நிதிமந்திரியின் மீது தான் என். எம். கடுமையாகத் தாக்கினார். "பண்டாரநாயக்காவின் கொலை சம்பந்தப்பட்ட ஒஸி கொரியா, நிதிமந்திரியின் உயிர்த்தோழர். மந்திரிக்காக அவர் உயிரையும் விடத்தயார். அந்தக் கொரியா, பல கொலைவழக்குகளில் சம்பந்தப்பட்டவர். ரிமாண்டில் இருக்கையில், பொலிஸ் துணையுடன் வெளிவந்து, சாராய ஏலக் குத்தகை எடுத்தவர். மற்ற ஏலதாரருக்கு அவரைக்கண்டால் பயம். அவருக்காக இந்த நிதிமந்திரி பலமுறை பரிந்து தலையாட்டியிருக்கிறார். அப்பேர்ப்பட்ட பேர்வழியுடன் உற்ற நண்பராக இருப்பவர் மந்திரியாக இருக்கத்தகுதியா? அவர் சாட்சியாக மாறிவிட்டாராம்! ஆனால் ரிவால்வர் சம்பந்தமாக அவர் மீதுள்ள குற்றம் நியூற்றன் பெரராவின் குற்றத்தைவிட அதிகமானது. அந்த ரிவால்வரால் சுடுவதற்கான பயிற்சிகளும் அளிக்கப்பட்டுள்ளன.

"பண்டாரநாயக்கா கொலை வழக்கு புலன் விசாரணை செய்யும் பொலிஸ் அதிகாரிகள் மீதும் எனக்குநம்பிக்கையில்லை. நேர்மையான ஒரு பொலிஸ் அதிகாரி மாற்றப்பட்டார். சோமராமாவும் தப்பிவிடலாம். ரிவால்வரே மாற்றப்படலாம் குற்றவாளிகளையும் கண்டுபிடித்துத் தண்டிக்காவிடில் பொது மக்களின் சாபத்துக்கு நாமெல்லாம் ஆளாகவேண்டியிருக்கும். இந்த அரசாங்கம், இப்பொறுப்பை சரிவர நிறைவேற்ற முடியாதாகையால், இதை இனியும் நீடித்து இருக்க அனுமதிக்கக் கூடாது" என்றார்.

### பிரதமரின் பதில்

பிரதமர் திரு. தகநாயக்கா, டக்டர் என். எம். மின் பேச்சுக்காக அவரைப் பாராட்டினார். "புத்தரக்கித என்னைக் கட்சித் தலைவராக்குவதாகவோ, பிரதமராக்குவதாகவோ கூறியதை நான் அறியேன். சொப்பனத்திலும் நான் பிரதமர் பதவியை எதிர்பார்க்கவில்லை. சந்தர்ப்ப சூழ்நிலை காரணமாகவே இப்பொறுப்பு எனக்குக் கிடைத்தது. டெம்பிள் ட்ரீஸ் மாளிகையில் ரகசிய மந்திராலோசனையை விமலா முதலியவர்களுடன் நான் செய்யவில்லை. இந்தக் கொலை வழக்கு விசாரணையில் நான் தலையிடாமல் ஒதுங்கி, எல்லா அதிகாரத்தையும் நீதி மந்திரியிடமே ஒப்படைத்துவிட்டேன். கவர்னர் ஜெனரல் மாளிகையில் நடந்த யோசனைகளின் போதும் நான் அங்கு இல்லை.

டக்டர் கொல்வின்:- இதில் கவர்னர் ஜெனரல் குறுக்கிடுவானேன்? நீதி மந்திரி ராணி மாளிகைக்குச் செல்வானேன்?

பிரதமர்:- இதைப்பற்றி விசாரிக்கிறேன் (பின்னர் இதுபற்றி கூறுகையில் மந்திரிகளுக்குள்ளாகவே ராணி மாளிகையில் அங்கு ஆலோசனை நடந்ததாக பிரதமர் மழுப்பினர்.) இந்தக் கொலை விஷயமாக எங்களில் யார் மீதும் சந்தேகமிருந்தால், இச்சபை ஒரு விசாரணை கமிட்டியை நியமித்து, அதன் முடிவுபடி நடக்க நாங்கள் தயாராக இருக்கிறோம்.

இப்போதுள்ள மந்திரி சபை, காலஞ்சென்ற பண்டாரநாயக்கா அமைத்ததுதான். இது ஒருகாவந்துமந்திரிசபையே. பத்திரிகைத் தணிக்கை அவசியமில்லாத போது நீக்கி விட்டோம். தொழிற் சங்கக் கட்சிகளை இயங்க அனுமதித்துள்ளோம். ஸ்தலஸ்தாபன தேர்தல்களையும் நடாத்த ஒழுங்கு செய்துள்ளோம். ஜனநாயக முறையையே நாங்கள் பின் பற்றுவதாக இவையெல்லாம் காட்டவில்லையா? நம்பிக்கையில்லாத் தீர்மானங்களை, எதிர்க் கட்சித் தலைவர் கூறிய தற்கிணங்க, முன்னதாகவே நடாத்த ஒழுங்கு செய்தோம். இதனால் இரு வாக்குகளை நாங்கள் இழக்க வேண்டியதாயிற்று. ஸ்கொட்லண்ட் யாட் ரகசிய பொலிசாரையும் இக்கொலை பற்றிய புலன் விசாரணைக்காக வரவழைத்துள்ளோம். அவசர காலம் அவசியம் வேண்டுமென்று 56 கடிதங்கள் வந்துள்ளன.

### பேச அனுமதிக்கவில்லை

"புத்தரகித தேரோவை நான் ரேடியோவில் பேச அனுமதிக்கவில்லை. அவர் பேசியது ஒக்டோபர் 6-ந் திகதி அவர் கைது செய்யப்பட்ட 15 நாட்களுக்கு முன்பு. ஆகவே

[9ஆம் பக்கம் பார்க்க]

## அன்றும் இன்றும்

இந்தக்கிழமை பார்லிமெண்ட் கூட்டத்தை நேரிற் பார்க்கவேண்டுமென்று உங்களைப்போல் எனக்கும் எவ்வளவோ ஆசை. அதிலும் பிரதம மந்திரி ஆசனத்திலே தகநாயக்கா வீற்றிருக்கும் காட்சியையும், எதிர்க்கட்சிகள் விடும் சொல்லம்புகளையும், நம்பிக்கையில்லா விவாதத்தையும் நேரில் பார்க்கவும் கேட்கவும் யாருக்குத்தான் ஆவல் இராது?

ஆனால் யார் செய்த பாவமோ தெரியவில்லை. நம்மையெல்லாம் அங்கு வரமுடியாமல் செய்துவிட்டார்கள். மூன்றரை வருஷங்களுக்கு முன்பாக "அப்பே ஆண்டுவா" ஆரம்பமான சமயத்தில் எப்படி இருந்தது?

பார்லிமெண்ட் கதவுகளை நமக்கெல்லாம் தாராளமாகத் திறந்துவிட்டார்கள். தேர்தல் சட்டம் எதுவுமில்லாமல் நம்மில் சிலர், பார்லிமெண்ட் சபைக்குள் நுழைந்து சபாநாயகர் ஆசனத்திலும் பிரதமர் முதலிய மந்திரிகளின் ஆசனங்களிலும் அமர்ந்திருந்தோம். இது மக்களின் ஆட்சி என்றும், மக்களும் அரசாங்கமும் ஒன்றுபட்டதாகவும் ஏதேதோ கூறினார்கள்.

ஆனால் இப்போதோ நம்மை எல்லாம் காணவும் மந்திரிகள் அஞ்சுகிறார்கள். அதனால் அவர்கள் சதா துப்பாக்கிகள் வைத்திருக்கிறார்களாம். எப்போதும் மெய்க் காவலர்கள் அவர்களுடன் சுற்றுகிறார்களாம்! நம்மைக் கண்டு அவர்கள் ஏன் இப்படி அஞ்ச வேண்டும்? நாம் என்னசெய்துவிட்டோம்? அல்லது செய்துவிடுவோம்?

மந்திரிமார் துப்பாக்கியோ, பீரங்கியோ கட்டிக்கொண்டு இருக்கட்டும். அதைப்பற்றி நமக்குக் கவலையில்லை. ஆனால் பார்லிமெண்ட் சபையிலே நம்மையெல்லாம் கலரிகளிற் கூட 'பர்மிட்'டுடன் அனுமதிக்கமுடியாதென்று தடுத்துவிட்டார்களே! அதைநினைக்கும் போதுதான், இது மக்களின் ஆட்சியா? அல்லது மக்களுக்கு மாறானவர்களின் ஆட்சியா? என்ற எண்ணங்களெல்லாம் தோன்றுகின்றன. "டைம்ஸ்"பத்திரிகை "இது ஒரு பெரிய அவமானம்" என்று சாட்டை கொடுத்துள்ளது. அன்றைக்கும் இன்றைக்கும் எவ்வளவு மாறுதல்.

பேப்பர்காரர்களை மட்டும் அனுமதிப்பார்களென்று அறிவித்திருந்தார்களல்லவா? அங்கே நடப்பதை நேரில் பார்த்து உங்களுக்குத் தெரிவிக்கவேண்டுமென்ற ஆவலில், நானும் பேப்பர்காரன் என்ற முறையில் அனுமதி கேட்டேன். ஆனால், தினசரிப் பத்திரிகைகளுக்கு மட்டும்தான் அனுமதியாம். 'ஈழநாடு' வாரப் பதிப்பாம். அதனால் அனுமதிக்க முடியாதென்று மிக மரியாதையாகத் தெரிவித்துவிட்டார்கள்! 'ஈழநாடு' சீக்கிரத்தில் தினசரியாகிவிட வேண்டுமென்று பிரார்த்தித்துத் திரும்பினேன்.

* * *

எங்கும் ஒரே மப்பும் மந்தாரமும். வருணன் படபடவென்று வந்தான். தேசியக் கொடிகளும், துக்கத்துக்கான வெள்ளைக் கொடிகளும் கண்ணீர் சொட்டிக் கொண்டிருந்தன! அவை பண்டாரநாயக்கா கொலைசெய்யப்பட்டதற்கு கண்ணீர்விடுகின்றனவா? அல்லது, இங்கு ஜனநாயகம் படுகிற பாட்டைக் கண்டா?

—ஐயாறன்

# பண்டாரநாயக்கா படு கொலையைப் பற்றி புதிய இரகசியங்கள் அம்பலமாயின

[8ஆம் பக்கத் தொடர்ச்சி]

அவர் பெயரை அச்சமயம் ஆட்சேபிக்கக் காரணமில்லை". என்றார். இலங்கை வானொலியில் ஒலி பரப்பும் அரசியல் குறிப்புகள் பற்றி டக்டர் என். எம். கூறிய குற்றச்சாட்டுகளுக்கு பிரதமர் நொண்டிச் சமாதானம் கூறினார். இலங்கை பத்திரிகைகள் அரசாங்கத்துக்கு விரோதமாக இருக்கின்றன வென்றும், பத்திரிகை கமிஷன் வேண்டுமென்று எதிர்க் கட்சியினரை கேட்டனரென்றும், அவ்வித கமிஷனை சீக்கிரம் நியமிப்பதாயும் கூறினார்.

"ஜனநாயகத்துக்கு மாறாக இந்த அரசாங்கம் எதுவும் செய்யாதென்று உறுதி கூறுகிறேன். காலஞ்சென்ற பிரதமரின் கொலை விஷயமாக பட்சமற்ற முறையில் தீர விசாரித்து, எவ்வளவு பெரிய பதவியிலிருப்பவராயினும் அவர்களை நீதிக்கு உட்படுத்தத் தயாராக இருக்கிறோம். [அரசாங்க கர கோஷம்] நான் இவ்விஷயமாக, அதிகாரம் எதையும் வைத்துக்கொள்ளவில்லை. பொலிஸ் அதிகாரம் வேறு மந்திரியிடமுள்ளது. அதில் நான் தலையிடுவதில்லை. நீங்கள் ஒரு விசாரணை கமிட்டியை நியமியுங்கள். எங்கள் யார் மீதும் குற்றம் ருசுவானால், நாங்கள் பார்லிமெண்டின் உத்தரவுக்குத் தலைவணங்குவோம். எங்கள் கடமையை விட்டு விட்டு நாங்கள் ஓடமாட்டோம். நாட்டைக்கொள்ளைக் காரரிடம் காட்டிக் கொடாமல், சமாதானத்தையும் அமைதியையும் காக்கும் மிகப் பெரிய பலமான பொறுப்பை நாங்கள் ஏற்றிருக்கின்றோம்". என்று கூறி தமது 50 நிமிஷப் பேச்சை அரசாங்க கரகோஷத்திடையே முடித்தார்.

### கெனமன் பேச்சு

திரு. பீட்டர் கெனமன் [கம்யூனிஸ்ட்] பின்னர் பேசினார்.

"ஏதோ எதிர்பாராத முறையில் தம்மிடம் இப் பொறுப்பு திணிக்கப் பட்டதாக, பிரதமர் கூறி நமது அனுதாபத்தை நாடுகிறார். அதை ஒப்புக் கொள்வதற்கில்லை. இதை ஏதோ "காவந்து அரசாங்கம்" என்றார். ஆனால் இது உண்மையில் "மரணச் சடங்கு மந்திரி சபையே" (எதிர்க்கட்சி கரகோஷம்) இந்த அரசாங்கம் வந்த முதல் மாதத்திலேயே அது செய்த பாதகங்கள் கொஞ்சமல்ல. இதுவரை எந்த அரசாங்கமும் பொது மக்களால் இப்படிச் சந்தேகிக்கப்பட்டும் கண்டிக்கப்பட்டதுமில்லை. உள்ளுக்குள்ளே எவ்வளவோ முரண்பாடுகள். இவர்களெல்லாரும் சேர்ந்து தொங்காவிடில், தனித்தனியேயாக தொங்க நேரிடும்.

### தற்செயலானதன்று

பண்டாரநாயக்காவின் மரணம் தற்செயலானதன்று. அரசியல் தலைவர்களின் கொலை, தனிப்பட்ட காரணத்துக்காக ஏற்பட்டதில்லை. கொலைகாரனுக்குப் பின்னால் சுயநல சக்திகள் இருப்பது சகஜம். சதி 1956ஆம் ஏப்ரல் மாதமே ஆரம்பமாகி விட்டது. முன்னேற்ற சக்திகளை நீக்கி, மீண்டும் பிற்போக்கு சக்திகளை அதிகாரத்துக்குக் கொண்டு வருவதே அவர்கள் நோக்கம். வாயில் ஜனநாயகம், கையில் ரத்தம். இதுதான் அந்த சக்தியின் உண்மை சொரூபம். அந்த சக்திகளுக்கு பண்டாரநாயக்கா ஒரு தடையாக இருந்தார். அந்தத் தடையை எப்படியும் ஒழித்து விட முன்வந்து விட்டனர். அவர் வலதுசாரி சக்திகளுக்குப் பலியானார்.

1956இல் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கத்துக்கும் இப்போதுள்ள தற்கும்தொடர்போ சம்பந்தமோ கிடையாது. கூட்டுறவு இலாகாவை, ஆர். ஜி.யிடம் ஒப்புவித்தது ஆட்டுக்குட்டியை ஓநாயின் கையில் ஒப்புவித்தது போலாகும். முக்கியமான பொலிஸ் இலாகாவை ஏன், இச் சபையில் இல்லாத ஒருவரிடம் நீர் ஒப்புவித்தீர்.? ஸ்தலஸ்தாபன மந்திரி விமலாவை நீக்கிய பிரதமர், ஏன் நிதி மந்திரியை அதே காரணத்துக்காக நீக்கவில்லை.

### துப்பாக்கி மீது குற்றம்!

**பண்டாரநாயக்காவைக் கொன்ற துப்பாக்கி பல கைகள் மாறியதாம். கொள்ளைக்காரனும், கொலைகளில் சந்தேகப் பேர்வழியுமான ஒருவனது நெருங்கிய நண்பர் எப்படி நிதி மந்திரியாக இருக்க முடியும்? சந்தேகப் பேர்வழி இப்போது சாட்சியாகிவிட்டார். துப்பாக்கி மீது குற்றம் சாட்டப்படுகிறது! கொலைக்கு மூலகாரணஸ்தர்கள் தப்பிவிடப் படுகிறார்கள்.**

பண்டாவுக்குப் போட்டியாக உருவாக்கப்பட்டவர் இன்று பிரதமராகியுள்ளார். இவர்கள் அவரது உண்மையான அரசியல் வாரிசுகளல்லர். விசாரணையில் தமக்கு சம்பந்தமில்லை என்று கை விரிக்கிறார் திரு. தகநாயக்கா. இது விபரீதம். அவரே இதில் பூரண பொறுப்பேற்று குற்றவாளிகளைத் தண்டனைக்குட்படுத்த வேண்டாமா? ஒரு மந்திரியே புத்தரக்கிதாவைப் பற்றிப் பொலிசுக்கு புகார் செய்தாரே. அப்படிப்பட்டவரை ரேடியோவில் பேச எப்படி அனுமதித்தீர்? விமலாவை பிரமாதமாக விளம்பரப் படுத்த பிரதமர் முயன்றார். அவர் கட்சியிலேயே எதிர்ப்பு அதிகரித்ததால் அவரை நீக்க ஒப்புக்கொள்ள வேண்டியதாயிற்று.

ரேடியோவின் அரசியல் குறிப்பு தகநாயக்காவின் குறிப்பே. "பொன் காலத்துக்கு" மூலகாரணமான ஒருவர் (விமலா) சென்றுவிட்டார். அவரது கூட்டாளியும் அதே வழியில் செல்ல வேண்டிய சமயம் வந்து விட்டது. (இச் சமயம் பிரதமர் தலைகுனிந்து கீழே பார்த்துக் கொண்டிருந்தார்.) உண்மை பொது மக்களுக்கெல்லாம் தெரியும். என்றாலும் சில மந்திரிகள் "இடது சாரிகளே இக் கொலைக்குக் காரண"மென்று கூறிக் கொண்டு திரிகிறார்கள். சோமராமாவை ஏன் முதலில் துறைமுக பொலிசிடம் கொண்டு செல்ல வேண்டும்? இந்த அவசரகாலச் சட்டம் மக்களைப் பாதுகாக்க அல்ல. இந்த லொடலொட்டை அரசாங்கத்தைப் பாதுகாத்துக் கொள்ளவே. இந்த அவசரகால நிலையை நீடிக்க நியாயமேயில்லை. நியாயமாக இருப்பின், எப்படி பல பகுதிகளிலும் தேர்தல்களை அனுமதிக்க முடியும்?

மகாசங்கத்தைச் சீர்திருத்த வேண்டுமென்றும், கெட்ட பிக்குகளை, களை எடுக்கவேண்டுமென்றும் கேட்பதில் என்ன தவறு? ஏன் இதற்காகப் பத்திரிகைக்கு வாய்ப்பூட்டுப் போடவேண்டும்? ஒருமாதத்தில் நீங்கள் செய்துவிட்டது, உங்கள் சீட்டைக் கிழிக்கப் போதுமானதாகும். பண்டாரநாயக்காவின் கொலைக்குக் காரணமாக இருந்தவர்களை எல்லாம் வேட்டையாடி, பிடித்து, அவர்களுக்குப் பின்னாலிருந்த சக்திகளையும் அம்பலப்படுத்தி, நீதியை நிலைநாட்டவேண்டும். அதற்கு இப்போதுள்ள அரசாங்கம் தகுதியற்றதாகும்".

திரு. கெனமன் ஒருமணி நேரத்துக்குமேல் வீரகர்ச்சனை செய்தார். அவரது பாணங்களுக்கு எதிர்நிற்கமுடியாமல், மந்திரிகளில் பலர் குனிந்த தலையை நிமிர்த்தவில்லை.

பின்னர் திரு. இரியகொல்லை தீர்மானத்தை ஆதரித்து சிங்களத்தில் பேசினார். திரு. எஸ். டி. பண்டாரநாயக்கா எதிர்த்தார்.

திரு. ரூபேட் குணவர்த்தன, பின்னர் பேசுகையில், "நிதி மந்திரியை அவுஸ்திரேலியாவுக்குச் செல்லாமல் தடுக்க வேண்டும். போனால் தப்பிவிடுவார். (இச்சமயம் நிதிமந்திரி சபையிலிருந்து எழுந்து சென்றார்.)

திரு. தேமிஸ் பின்னர் பேசுகையில் சிறையில் இருக்க வேண்டியவர்கள் இன்று மந்திரிசபையில் உள்ளனர். நிதி மந்திரியை வைத்துக்கொண்டு, சதிவிசாரணையைச் சரிவர நடாத்தமுடியாது. இது சரிவர நடைபெறுவிடில், நாடு நாசமாகும் என்றார்.

திரு. நிமல் கருணதிலகா பேசுகையில் "திரு. பண்டாரநாயக்கா பிரதமமந்திரியான முதல்வாரமே சதி ஆரம்பித்து விட்டது. விமலாவும், புத்தரக்கித்தாவும், தகநாயக்காவும் இதில் பெரும்பங்குகொண்டார்கள். கூட்டுறவு வங்கி மசோதா வந்தபோதே தமக்கு விரோதமாகச் சதி நடப்பது பண்டாரநாயக்காவுக்குத் தெரியும். தஹாதான் பண்டாவுக்குப் போட்டியாக இருந்தார். காலி நகரசபை உபமேயராக வருமுன், முன்னிருந்தவர், வெடிகுண்டினால் கொல்லப்பட்டதாக நீங்கள் பொலிஸ் ஸ்டேசனில் விசாரிக்கப்படவில்லையா? மொலமரே குறுக்கிட்டு உங்களைக் காப்பாற்றினார். ஆகவே இதெல்லாம் உங்களுக்குப் புதிதல்ல. நான் காலியில் நடந்த பொதுக்கூட்டத்தில் இதை உம் எதிரிலேயே கூறினேன். நீங்கள் பண்டாவின் கழுத்தறுப்பீர்கள் என்றேன். 6 மாதங்களில் செய்துவிட்டீர்கள்.

ஸ்ரீமதி ர்ர்ஜரத்ன பின்னர் சிங்களத்தில் பிரேரணையை எதிர்த்தார். யூகோ, அமெரிக்கஸ்தானிகரைப்பற்றி விசாரிக்க வேண்டுமென்றார்.

திரு. பிலிப் குணவர்த்தன பின்னர் பேசியதாவது:-

பழைய பிரதமரிடம், சதி நடப்பதுபற்றி சென்ற நவம்பர் மாதமே எச்சரித்தேன். உங்கள் உயிரே ஆபத்தில் இருக்கிறதென்று கூறினேன். இரண்டு வருஷ காலமாக சதி நடந்துவந்துள்ளது. கப்பல், சீனி வர்த்தகத்தில் கொள்ளையடிக்க முற்பட்டவர்களுக்கு சில மந்திரிகள் உடந்தையாக இருந்தனர். களனி விகாரையில் பல வருஷங்களாக கொள்ளைக்காரர்கள் இருந்துள்ளனர். குருவைப் போலவே தானே சிஷ்யர்களும் இருப்பர். இதன் பயன் பிரதமரின் படுகொலை. சென்ற வருஷ அவசரச் சட்ட காலத்தில்: புத்தரக்கிதா, சொய்ஸா இவர்களது சிறைக் கைதியாக பண்டா இருந்தார். திரு. பண்டாரநாயக்காவையும், ஐ. ஜி. பியையும் சேர்த்து கொல்ல வேண்டுமென்பது சதியாம். நிதிமந்திரி, பழைய ஐ. ஜி. பி ஒஸ்மண்டுக்கு விரோதமாக மந்திரி சபையில் அறிக்கை சமர்ப்பித்தார். தமது சகோதரரை ஐ. ஜி. பி ஆக்க வெகு பாடுபட்டார். பிரதம மந்திரியின் வீட்டில், கொலை நடந்தபோது பல பிக்குகளிருந்தனர். பொலீஸ் அதிகாரி கூட்டத்தை விரட்டிவிட்டார். ஏன்?

இது ஒருவரது செயலல்ல, திட்டமிட்ட சதியாகும். பிரதமர் இதுபற்றி தீர விசாரிக்க வேண்டும். நிதிமந்திரி நாட்டை விட்டு வெளியேற அனுமதிக்கக் கூடாது. இது பிரதமரின் கடமையாகும். உதவி பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஸிட்னி ஸொய்ஸாவை உடனே வேலையிலிருந்துநீக்கி, விசாரிக்கவேண்டும். உண்மையான சதிகாரர்களைப் பிடிக்காவிட்டால், இந்த சபையால், அரசாங்கத்தால் என்ன பயன்?

எம். டி. பண்டா (யு.என்.பி):- மந்திரிகள், கவர்னர் ஜெனரலிடம் போவானேன்? பிரதமர் தன் பொறுப்பை தட்டிக்கழிக்கிறார். இந்த மந்திரிகள் எவ்வளவு சீக்கிரத்தில் நீங்குகிறார்களோ அவ்வளவுக்கு இந்த நாட்டுக்கு நல்லது என்றார்.

திரு. அமிர்தலிங்கம் தீர்மானத்தைத் தமிழில் ஆதரித்துப் பேசினார். "பிரதமர் தமிழருக்கு ஏற்படுத்திய புண்களை ஆற்றப்போவதாகக் கூறினார். ஆனால் இவர்கள்தான் புண்படுத்தியவர்கள். தமிழரின் உரிமைகளை நிலைநாட்ட நாங்கள் எந்த நாயக்கா அரசாங்கத்துடனும் போராடுவோம். அநீதிகளை நீக்க இந்த பிரதமரால் முடியாது. முடியுமாயின் திரு. செனவிரத்னவை முதலில் மொழி இலாகாவிலிருந்து அவர் நீக்கட்டும்."

### 100க்கு 90 வீதம் உண்மை

அரசாங்கக் கட்சியைச் சேர்ந்த திரு. மகாநாம சமரவீரா எதிர்க்கட்சியினர் இன்று கூறியதில் 100க்கு 90க்கு மேல் உண்மையுண்டு என்று கூறியதும், எதிர்க்கட்சியினர் பலத்த கரகோஷம் செய்தனர். கொலை விசாரணை போக்கு தமக்குத் திருப்தி அளிக்கவில்லையென்றும் இடதுசாரிகளுக்கு இதில் சம்பந்தமில்லை என்றும் பொலிஸ் அதிகாரியான ஸிட்னி சொய்ஸாவை உடன் வேலையிலிருந்து நீக்க வேண்டுமென்றும் வற்புறுத்தினார்.

இச்சமயம் மணி இரவு 9-30 ஆயிற்று. டக்டர் கொல்வின் ஆர். டி. ஸில்வா, நிதி மந்திரி சொய்ஸா இவர்கள் பேச எழுந்தனர். ஆனால் விவாதத்தை முடிக்க வேண்டுமென்ற பிரேரணையைப் பிரதமர் கொண்டு வந்தார். அது நிறைவேறியது.

பின்னர் நம்பிக்கையில்லாத் தீர்மானம் வாக்குக்கு விடப்பட்டது. முதல்முறை எடுத்ததில் தவறு ஏற்பட்டதால் இரண்டாம்முறை எடுத்தனர். பிரேரணைக்கு சாதகமாக 43 பேரும் பாதகமாக 48 பேரும் வாக்களித்ததால், பிரேரணை தோற்றது.

சேர் ஜோன் கொத்தலாவல விமலா விஜயவர்த்தன, சேர் ராஸிக்பரீத் இவர்கள் சபைக்கு வரவில்லை. திரு ஜீ. ஜீ. பொன்னம்பலம் தீர்மானத்துக்குச்சாதகமாக வாக்களித்தார்.

வாக்கெடுப்பின் முடிவை அறிவித்ததும், இரு கட்சியினரும் வெற்றி ஆரவாரம் செய்தனர். நியமன மெம்பர்கள் ஆறு பேரும் இல்லாதிருப்பின் அரசாங்கம் தோற்றிருக்குமென்று எதிர்க்கட்சியினர் ஆரவாரித்து தார்மிக வெற்றி தங்களுக்கே என்று கோஷமிட்டனர்.

# பரமேசுவரக் கல்லூரியை தமிழ் சைவ கலாசாரப் பல்கலைக் கழகமாக்கும் முயற்சி

## திரு, எஸ் நடேசனின் விளக்கம்

நமது சிறப்பு நிருபர்

யாழ்ப்பாணம்.

தமிழ்ப் பல்கலைக்கழகம் ஒன்றினை யாழ்ப்பாணத்தில் நிறுவ வேண்டுமெனவும் அதற்காகப் பரமேசுவரக் கல்லூரியையும், இராமநாதன் கல்லூரியையும் தாம் அளிக்கமுடியுமெனவும் பிரதமர் தஹநாயக்காவுக்குத் திரு. எஸ். நடேசன் கூறியதாகப் பத்திரிகைகளில் வெளியான செய்தி தமிழ் மக்களிடையே தவறான கருத்துக்களை ஏற்படுத்தியுள்ளது. இது சம்பந்தமாகத் திரு. நடேசனை நேரிற் கண்டு பேசியபோது அவர் கூறியதாவது:

காலஞ்சென்ற திரு. பண்டாரநாயக்கா வித்தியோதயப் பல்கலைக்கழகத்தைத் திறந்து வைத்தபோது தமிழர்கள் தமது சமய கலாசாரத்துக்கென ஒரு பல்கலைக்கழகம் வேண்டுமெனக் கேட்டால் தாம் அப்படியானவொரு பல்கலைக் கழகத்தை அளிக்கச் சம்மதமாக இருப்பதாகச் சொன்னார்.

இதற்கு முன்னதாகத் தமிழ்ப் பல்கலைக்கழக இயக்கத்தினரின் கோரிக்கையை அவர் மறுத்திருந்தார் என்பது பலரும் அறிந்த விஷயம். திரு. பண்டாரநாயக்கா ஒரு தமிழ் சமய கலாசாரப் பல்கலைக்கழகத்தைக் குறிப்பிட்டபின்னரே, பரமேஸ்வரக்கல்லூரி நிர்வாக சபையினர் பண்டாரநாயக்கா அவர்களுக்கு ஒரு தமிழ்ச் சைவ கலாசாரப் பல்கலைக் கழகத்தை ஏற்படுத்தவேண்டுமென்று திரு. பண்டாரநாயக்காவைக் கேட்டுக்கொள்ளத் தீர்மானித்தனர்.

இதன்பிறகு சென்ற ஜூலை மாதம் நான் (திரு. நடேசன்) திரு. பண்டாரநாயக்காவைச் சந்தித்தேன். அப்போது பரமேசுவரக் கல்லூரி நிர்வாக சபையினர் செய்த தீர்மானத்தைத் தெரிவித்தேன்.

திரு. பண்டாரநாயக்கா சிங்கள பௌத்த கலாசாரவிருத்திக்கு இரண்டு பல்கலைக் கழகங்களைக் கொடுத்திருப்பது போல் தமிழ்ச் சைவகலாசாரத்துக்கு ஒரு பல்கலைக்கழகம் அமைக்கும் யோசனையைத் தாம் ஏற்றுக் கொள்வதாக இருந்தாலும், அதைப் பற்றிய நடவடிக்கையை இலங்கைப் பல்கலைக்கழக கொமிஷன் அறிக்கைக்குப் பின்னர்தான் யோசிக்கக் கூடுமெனத் தெரிவித்தார். அவருடைய அகால மரணத்துக்குப் பிற்பாடு புதிய பிரதமருக்கு இது சம்பந்தமாகப் பண்டாரநாயக்கா காலத்தில் நிகழ்ந்ததைக் குறித்தும் நான் கடிதம் எழுதியிருந்தேன். பின்னர் அவரை நேரிற் கண்டபோது இந்தக் கோரிக்கைக்கும் தமிழ்ப் பல்கலைக் கழகத்தாருக்கும் சம்பந்தமில்லையென்பதை விளக்கமாக எடுத்துக்காட்டினேன். **எனது கோரிக்கை தமிழ் சைவ கலாசாரத்தைப்பற்றியது** என்பதையும் வற்புறுத்தியிருந்தேன்.

தமிழ்ப் பல்கலைக் கழக இயக்கத்தினர் தங்களுடைய யோசனையைப் பற்றித் தமக்குக் கூறியிருக்கின்றனர் எனவும், அதனையும் தாம் கவனித்து வருவதால் இந்த இரு யோசனைகளையும் சேர்ப்பது உசிதமென்றும் பிரதமர் தகநாயக்கா கூறினார்.

தமிழ்ப் பல்கலைக் கழக இயக்கத்தினர் திருக்கோணமலையில் பல்கலைக் கழகம் ஒன்றினை நிறுவுவதற்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இப்போது நான் சமர்ப்பித்துள்ள கோரிக்கை பிரத்தியேகமானது. தமிழ்ப் பல்கலைக் கழக இயக்கத்தினர் நிறுவும் பல்கலைக் கழகம் சமய அடிப்படையற்றது (Secular). நான் கோரியுள்ள பல்கலைக் கழகம் சமய அடிப்படையைக் கொண்டுள்ளது.

சேதாவுக்குக் கர்ப்பம் ஆரம்பமான காலங்களில் கொஞ்சம் அதிகமாக மசக்கை இருந்தது. இப்போதுதான் ஞாபகத்திற்கு வருகிறது; அதன் காரணமும் தெரிகிறது. தனிப் பிள்ளையின் தாயிலும் பார்க்க இரட்டைப் பிள்ளைகளின் தாய்க்கு மசக்கை அதிகமாக இருப்பது வழக்கம். அதேபோல் மூச்சுவாங்கக் கஷ்டமாக இருப்பது, குழந்தை துடிப்பது, இரத்தச்சோகை ஏற்படுவது, கால்கள் வீங்குவது, கால்களில் நாளங்கள் தடித்தல் போன்ற சிறு இன்னல்களும் அதிகமாகவும் அடிக்கடியும் தோன்றலாம். வயிறும் பெரியதாக இருக்குமென்பது நாம் அறிந்ததுதானே.

இரட்டைக் குழந்தைகளின் தாய்க்கு இப்படியான சிறு கஷ்டங்கள் ஏற்பட அதிக சந்தர்ப்பம் இருப்பதால், சேதா கண்டிப்பாக டாக்டரை ஒழுங்காகச் சந்திக்க வேண்டும். அதனால் நீ வீட்டிலேயே இருந்துவிடலாம் என்பதல்ல நான் சொன்னதன் அர்த்தம். கர்ப்பிணிகள் அனைவருமே தவறுமல் சிகிச்சை நிலையங்களுக்குச் சென்று அங்கு தரப்படும் பால்மா, மருந்து மாத்திரைகள் முதலியவற்றைப் பெற்றுப் பயனடைய வேண்டும். இதை நான் எனது முதலாவது கடிதத்திலிருந்தே வற்புறுத்தி வருகிறேன்!

மாதர் பகுதி

**இரட்டைக் குழந்தைகளின் தாய் படும் கஷ்டங்களையும் அவர்கள் உட்கொள்ள வேண்டிய சத்துள்ள உணவு வகைகளைப் பற்றியும் டக்டர் தமது தங்கைக்கு இங்கு விளக்குகின்றார். இது அவரது ஐந்தாவது கடிதத்தின் பிற் பகுதியாகும்.**

# தாயும் சத்துள்ள உணவும்

— நந்தி —

### புரதம்

பால் மாவிலும், பாலிலும் புரதச்சத்து அதிகம் உண்டு. புரதம் உடல்வளர்ச்சிக்கு மிகவும் அவசியமான சத்தாகும். மீன், நெத்தலிக்கருவாடு, இறைச்சி, ஈரல், முட்டை, பருப்பு, பயறு, போஞ்சி முதலிய உணவுவகைகளும் நமக்கு வேண்டிய புரதத்தைத் தரக்கூடியவை.

### கால்சியம்

டாக்டர்கள் கர்ப்பிணிகளுக்குத் தரும் மருந்து வகைகளில் கால்சியமும் இரும்புச் சத்தும் கண்டிப்பாக இருக்கும். கால்சியம் (சுண்ணும்புச் சத்து) குழந்தையின் எலும்புகள் நன்ருக வளருவதற்குத் தேவைப்படுகிறது. பால், முட்டை, நெத்தலிக் கருவாடு, குரக்கன், வல்லாரை, எள் முதலிய உணவுகளில் கால்சியம் ஏராளமாக உண்டு.

### இரும்பு

கர்ப்பிணிகளுக்கு இரத்தச் சோகை உண்டாவதைத் தவிர்க்கவே டாக்டர் இரும்பு கலந்த மருந்துகளைத் தருகிருர். இரும்பு இரத்தசாயப் பொருளை உற்பத்தியாக்க உபயோகிக்கப்படும் மூலப் பொருள்களில் ஒன்ருகும். இரத்த சாயப் பொருள்தான் (ஹீமோகுளோபின்) இரத்தத்திற்கு நிறத்தைத் தருவது. இந்த சாயப் பொருள் குறைந்தால் ரோசாக்கன்னம் வெளிறிவிடும். கண்களில் ஒளி குறையும். நாக்கும் வெள்ளையாகவே இருக்கும். பிராண வாயுவை நமது உடலின் ஏனைய பாகங்களுக்குச் சுமந்து செல்வதும் இரத்த சாயப் பொருள்தான். இது குறைந்தால் நாம் சுறுசுறுப்பாக வேலை செய்ய முடியாது. இலேசான வேலை செய்தாலும் மூச்சு மேலும் கீழும் வாங்கும். குழந்தையின் இரத்தம் உற்பத்தியாக வேண்டிய இரும்புச் சத்தையும் தாய் தானே உட்கொள்ள வேண்டும். இரட்டைப் பிள்ளைகளானல் இரும்பு இன்னும் அதிகமாகத் தேவைப் படுகிறது. உணவு வகைகளில் இரும்புச் சத்துள்ள உணவு வகை நெத்தலிக் கருவாடு, ஈரல், பருப்பு, குரக்கன், பச்சைப் பயறு, எள், கீரை வகைகள் முதலியவையாகும்.

இரட்டைப் பிள்ளைகளைப் பற்றி எழுதத் தொடங்கிய நான், தங்கையர்களையும் அவர்கள் குழந்தைகளையும் வளர்க்கும் ஆசையினல் நல்ல உணவு வகைகளைப் பற்றியும் எழுதிவிட்டேன். எழுதத் தொடங்கிய விஷயத்தைப் பற்றிக் கடைசியாகச் சில வார்த்தைகள்.

இரட்டைக் குழந்தைகளின் பிரசவம் நாம் கணக்கிட்டு அறிந்து கொண்ட குழந்தை பிறக்கும் நாளுக்குப் பல தினங்களுக்கு முன்னர் ஏற்படலாம். குழந்தைகள் பிறக்கும் போது அளவில் சிறியவர்களாக இருப்பார்களாகையால் பிரசவம் இலகுவாக இருக்கும். சேதா உனக்குப் பின்பு கர்ப்பம் தரித்தாளேயானலும் அவளுடைய குழந்தைகள் உனது குழந்தைக்கு முன்னதாகவே பிறக்கலாம்.

உனது அன்புள்ள,
நந்தி அண்ண.



இந்தச் சூரிய ஒளிச் சமையற் கருவி, நல்ல சூரிய வெளிச்சத்தில், 600 உவாற் சக்தியுடைய மின்சாரத் தட்டிலிருந்து கிடைக்கப் பெறுமளவு சூட்டை அளிக்கின்றது.

## கலைத் தெய்வம்

[7ஆம் பக்கத் தொடர்ச்சி]

### ஆத்மீக அர்ப்பணம்

பண்டைய கலைஞனும் கைப்பணியாளனும் காட்சிக்கு வைப்பதற்காகப் பொருள்களைச் செய்யவில்லை. நூதனமான பழம் பொருள்களைச் சேகரிக்கும் இன்றுள்ள பெரிய பணக்காரர்கள் பலர் அவற்றைப் பணம் கொடுத்து வாங்கவேண்டுமென்பதற்காகவும் செய்யவில்லை. அஜந்தா குகைக் கோவிலிலும், இத்தாலியிலுள்ள தேவாலயத்திலுமுள்ள ஓவியங்கள் ஆத்மீக அர்ப்பணங்களாகும். மக்களை மிருகத்தன்மையான இழிந்த படியிலிருந்து தெய்வீகத் தன்மை வாய்ந்த புனிதமான சூழலில் அவர்களைக் கைதூக்கிவிட வேண்டுமென்பதற்காகவே அந்த ஓவியங்கள் புனையப்பெற்றன. எங்கும் நிறைந்துள்ள பரம்பொருள்மீது எங்கள் சிந்தனையைக் குவியச் செய்வதற்கான அடையாளங்களே அவை. இசையும் இத்தன்மையதே. மக்களிடையே சமய உணர்ச்சியையும் கலைச் சுவையையும் வளமுறச்செய்வதில் இன்னிசைக்குப் பெரும் பங்குண்டு. நடனமும் இப்பணியைச் செய்து வருகின்றது. பழந்தமிழ் நாட்டிலே கோவில்களில் எல்லாம் இசை, நடனம், சிற்பம், நாடகம் என்பன சமயச் சடங்குகளுடன் இணைக்கப்பெற்றிருந்தன. கலைச்சுவையானது பழந்தமிழ் மக்களை வாழ்க்கையின் உயர்ந்த படிக்களுக்குக் கொண்டு சென்றது.

### சிறப்பியல்பு

ஆனல் இன்றோ எல்லாம் தலைகீழாகிவிட்டது. கலைக்காகவே கலை என்ற மனப்பான்மையுடன் இயந்திர சாதனங்களைக்கொண்டு கலையை விருத்தி செய்ய முனைந்துள்ளோம். இந்த மனநிலை கலைக்கு சௌந்தரியத்தை ஊட்டமாட்டாது. அத்துடன் மனிதனிடத்தேயுள்ள தெய்வத் தன்மையையும் மலரச் செய்வதற்கும் சிறிதளவேனும் துணை புரியமாட்டாது.

உலகக் கலாசாரக் குழுவில் தமிழினமும் தனக்கென ஓர் இடத்தை வகுத்துள்ளது. இந்தியாவிலும் இலங்கையிலுமுள்ள கலாசாரச்சேர்க்கைக்கு தமிழரும் தங்கள் சிறப்பியல்புகளை உதவியுள்ளனர். அது மாத்திரமா? சீனம், யப்பான், சாவகம், சுமாத்திரா உட்பட மத்திய கிழக்கு நாடுகளில் எல்லாம் அவர்களின் கலைப்பண்பு செறிந்துள்ளது. மனிதனின் கலைவாழ்வுக்கு தமிழரின் பண்பாடு அவசியமென்பதை உலக நாடுகளே ஒப்புக்கொள்ளும். பிறரைப் பின்பற்றி நாங்கள் போலிகளாகவும் பிச்சையெடுப்பவர்களாகவும் இருக்கக்கூடாது. பொருளாதாரத்தைப் பொறுத்தவரை நாங்கள் பிச்சைக்காரர்களே. கலாசாரத் துறையிலேனும் நாங்கள் பிச்சை ஏற்காதிருக்க வேண்டும். எங்கள் சமயத்திலும் கலாசாரத்திலுமுள்ள விலை உயர்ந்த மாணிக்கங்களை எல்லாம் மாலையாகக் கோத்து உலகுக்கு அளிப்போம்.

## மன வேதனை

— க. கணேசலிங்கம் —

தீபாவளித் திருநாளை முன்னிட்டுப் புடவைக்கடை நாடக மேடையாக மாறியிருந்தது. அலங்காரமாக உடை தரித்திருந்தோர் மேலும் தம்மை அலங்காரப்படுத்திக்கொள்ளப் புடவைக்கடைகளை நோக்கிப் படையெடுத்திருந்தனர்.

புடவைக்கடை கண்ணுக்கு அழகான காட்சியாக அமைந்திருந்தது. கையில் பணமில்லாவிட்டாலும் பார்க்கக் கண்கள் இருக்கின்றனவே! மறுகணம் உள்ளே சென்றேன்.

'எது வேணும் சொல் மனமே' என்று காற்றில் மிதந்துவந்த கீதம் என் இதயத்தின் எதிரொலியாகத்தான் எனக்குப் பட்டது. ஆனல், இவற்றை வாங்க எது வேண்டுமோ அது என்னிடம் இல்லை.

பள்ளிக்கூடத்திற் பயிலும் ஏழைப்பையனை என்னிடம் பணம் எப்படி இருக்கும்?

'உங்களுக்கு எது வேணும்?' தயாளசிந்தையுடன் கேட்டார் கடையில் நின்ற விற்பனையாளர். என் காற்சட்டைப் பையிற் பணமில்லை என்பதை அவர் எப்படி அறிவார்.

கேட்டதோடு நின்றுவிடாமல் கட்டுக்கணக்காகச் சட்டைகளையெல்லாம் மேசைமீது போட்டார்.

எந்தப் பொருளையும் காணமல் இருந்தால் அதன் எண்ணம் வராது. ஆனல்: கண்டபின் அந்தப் பொருளின் ஆசை அதிகமாக வளருமே தவிர அடங்குவதில்லையே.

'உங்கள் நிறத்திற்கு இதுதான் நல்லாய்ப் பொருந்தும்' என்று என் நிறத்தைப்பற்றி வியந்தார் கடைக்காரர்.

'சைஸ் இதுதான் நல்ல பொருத்தமான சைஸ். இந்தச் சட்டையைத்தான் எல்லோரும் விரும்பி வாங்குகின்றார்கள்.'

பாடசாலையில் உபாத்தியார்கூட இவ்வளவு விளக்கமாகக் கூறமாட்டார்.

'எல்லாம் எனக்கு விளங்கும்' மனவேதனையும் ஆத்திரமும் கலந்த குரலில் கூறினேன்.

'சரி. நீங்களே பார்த்து விருப்பப்பட்டதை எடுங்க' தன்மையாகக் கூறினர் கடைக்காரர்.

கதிரையை இழுத்துவிட்டு 'இதில் அமர்ந்து 'சிலெக்ட்' பண்ணி எடுங்கள்' மரியாதை காட்டினர் அவர்.

வயதில் சிறியவன், சாதாரணமாகச் சொல்லப்போனல் நான் 'பொடியன்'. ஆனல் ஏதோ வாங்கப்போகிறேன், இல்லை-வசப்படுத்தி வாங்கச் செய்யலாம் என்ற எண்ணத்தில் 'ங்க' மரியாதையுடன் கதிரையும் போட்டார் கடைக்காரர்.

'இதுதான் எனக்குப் பிடித்திருக்கிறது' என்றேன்.

'சரி எடுங்க' கடைக்காரர் விடை கூறினர்.

'விலை எவ்வளவு'

'அவ்வளவு தொகையில்லை. ஆகப் பதினறு ரூபாய்'.

'என்னிடம் பணம் இல்லையே' என்றேன். 'பின் ஏன் படியேறி வந்தாய்? திரும்பிப் பார்க்காமல் வெளியே நட' என்ருர் கடுகடுத்த குரலுடன் கடைக்காரர்.

வெறுங்கையோடு வெளியே நடந்தேன்.

என் போன்றவர்களுக்கு என்றுதான் கொண்டாட்டம் வருமோ?

கண்ணேட்டம் 18

## 'மக்கள் அரசாங்க'மும் மக்களும்!

ஜனநாயகம் என்ருல் மக்கள் அரசாங்கம் என்பது தான் அர்த்தம் என்றுஅரசியல் படிப்புப் படித்தவர்கள் கூறுகின்றனர். சொல்லளவில், சொல்லின் பொருளளவில் ஏற்றுக் கொள்ளக்கூடிய உண்மையாக அதுவிருக்கலாம். ஆனல், நடைமுறையில், உலகத்திலுள்ள ஜனநாயக நாடுகளின் வாழ்க்கையில், இந்த உண்மையை நாம் காண்பது அரிதே. இலங்கையும் ஒரு ஜனநாயக நாடுதான். ஆனல், இந்த 'மக்கள்' நாட்டில் மக்களுக்காக, அவர்களைக்குறித்துப் 'பொது' என்ற அடைமொழியுடன், நிறுவப்பட்டுள்ள பலவிதமான பொது ஸ்தாபனங்களும், நிலையங்களும் கவனிப்பாரற்றுச் சீர்கெட்ட நிலையிலிருந்து வருவது மக்கள் அரசாங்கத்திற்கு ஒரு பெரிய இழுக்காகும்.

பொது நிலையங்களான ரயில்வே, பஸ் நிலையங்களைப் பாருங்கள். அவை, பொதுமக்களின் சேவைக்காக, அவர்களின் தேவைகளை உணர்ந்து நடாத்தப் படுகின்றனவா? இல்லவே இல்லை. ரயிலிலே முதலாம் வகுப்பு அல்லது இரண்டாம் வகுப்புக்களில், அதிக பணம் கொடுத்துப்பிரயாணம் செய்பவர்களுக்கு ரயில் பிரயாணம் ஒருவேளை சுகமாகப் படலாம். அதிக பணம் கட்டுவதற்கு வசதியில்லாத ஏழை மக்கள் மூன்ரும் வகுப்பில் தானே ஏறிப்போக முடியும்? எங்கள் ரயில்களில் மூன்ரும் வகுப்பில் பிரயாணம் செய்தால் எப்படி இருக்கும் என்பதை நாம் இங்கு கூறவேண்டியதில்லை. அதே போலத்தான் இ. போ. ச. பஸ் பிரயாணமும். இ. போ. ச. பஸ் சேவையைப்பற்றிக் குறைகூறி, வாயும் கையும் அலுத்துவிட்டன. ஆனல். முன்னேற்றம் எதுவும் தோன்றுவதாகத் தெரியவில்லை.

முக்கியமாக, பொது நிலையங்களுள் மிக்க கேவலமான நிலையிலிருப்பது நகர்களில் உள்ள 'பொது' மலசலகூடங்கள். அப்பப்பா! அவற்றுள் எந்த மனிதனும் காலெடுத்து வைக்கத் துணிவானு? இப்பொது மலசலகூடங்களின் நோக்கம் தான் என்ன? கடமைக்காக, நாமும் ஒரு பொது மலசலகூடம் கட்டிவிட்டோம் என்று பெருமைப் படுவதற்காகவா இவற்றைக் கட்டினுர்கள்? அப்படித்தானிருந்தாலும் அதில் பெருமைப் படுவதற்கும் ஒன்றும் இல்லையே!

'சுகாதாரம், சுகாதாரம்' என்று நாட்டுமக்களுக்கு எவ்வளவோ போதிக்கும் அரசினரால், இப் பொதுக் கூடங்களைச் சுகாதாரமான முறையில் நடாத்த முடியவில்லையென்ருல் பின் ஏன் இந்தப்போதனைகள்? ஏன் இந்த வருடாந்தச் 'சுகாதாரவாரம்'? இந்தப்பொது மலசலகூடங்கள் பற்றிச் சுகாதாரப் பகுதியினர் கவனமும், அக்கறையும் காட்ட வேண்டியது மிக்க அவசியமாகும். அதுவும், மழைகாலங்களில் இக்கூடங்களின் நிலை வார்த்தைகளால் சொல்லிவிட முடியாத அளவுக்கு மோசமாகி விடுகின்றது. பொதுமக்களுக்கான இக் கூடங்கள் சுவரொட்டிகள் ஒட்டுவதற்குச் சினிமா விளம்பரகாரருக்குத்தான் உபயோகப்படுகின்றனவே தவிர, பொதுமக்களுக்கல்ல!

இவ்விதமாகப் பொதுமக்கள் பெயரில், அவர்களுடைய பணத்தில் நிறுவப்படும் பொது ஸ்தாபனங்கள், நிலையங்களெல்லாம், சீராகவும் சிறப்பாகவும் நடாத்தப்படுபனவாகத் தெரியவில்லை. இந்நிலையங்களைப் பொதுமக்கள் தமதாக எண்ணிப் பெருமையுடன் அவற்றை உபயோகப் படுத்தக் கூடிய முறையில் அரசாங்கம் தக்க சிரத்தையும், அக்கறையும் எடுக்க வேண்டும். இல்லாவிடில், இப் பொது நிலையங்கள், ஸ்தாபனங்கள் இருந்தும், இல்லாவிடிலும் பொதுமக்களுக்கு ஒன்றுதான்!

## புதிய மருமக்கள்

பெயர்களும் பதிவு எண்ணும்

565. ஞா. யேசுதாசன், மணல் ஒழுங்கை, பருத்தித்துறை.
566. மு. இராமச்சந்திரன், அசோகா பாடசாலை, எல்கடுவ.
567. பூ. ஆறுமுகம், சென். அன்றூஸ் கல்லூரி, கம்பளை.
568. க. திருச்செல்வம், பீற்றூ விடுதி, அருள்யோவான்கல்லூரி, யாழ்ப்பாணம்.
569. எஸ். எம். சுப்பிரமணியம், தெலிவத்தை தோட்டம், மலங்காமி பிரிவு, பதுளை.
570. ஜெ. அரியரெத்தினம், 7/1, கச்சேரி நல்லூர்வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.
571. ஆர். பாலச்சந்திரன், மே/பா திருமதி சண்முகநாதன், பொலீஸ் கட்டடம், வட்டவளை.
572. சு. ஸ்ரீகாந்தன், கைதடி வடக்கு, யாழ்ப்பாணம்.
573. ஹரியர் ஜோசவ், 241/1 சேணிய தெரு, யாழ்ப்பாணம்.
574. தி. நிர்மலகுமாரி, 3/3, கேசாவில் பிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.
575. வே. தவபாக்கியலட்சுமி, 15, செட்டித்தெரு, நல்லூர், யாழ்ப்பாணம்.
576. வீ. மனோகரன், 3, றக்கா ஒழுங்கை, சுண்டிக்குளி.
577. கி. கிருஷ்ண்ஜோதி, 31, நியூமோர்லேன், திருக்கோணமலை.

# சிறுவர் பகுதி

## தீபாவளித் திருநாள்

[க. செல்வராணி — ப. எண் 119]

ஏழை முதல் பணக்காரர் வரை, இளைஞர்முதல் முதியோர் வரை கொண்டாடும் ஆனந்தத் திருநாள் தான் தீபாவளி. காலையில் எழுந்து எண்ணை தேய்த்து ஸ்நானம் செய்து, புத்தாடை அணிந்து புது உணவருந்திக் குதூகலமாக உற்றூர் வீடு சென்று உறவுகொண்டாடும் பொன்னாள் இந் நன்னாள்.

அசுரபயம் ஒழிந்து அமைதி நிலவிய நாளை நினைவூட்டுவதே தீபாவளித் திருநாள். கொடுமைகள் பல புரிந்த நரகாசுரனைக் கொன்று மக்களின் பயத்தைப் போக்கி அபயமளித்தார் கிருஷ்ணபரமாத்மா அன்று. இத்தகைய சிறப்பு வாய்ந்த இத் தீபாவளியை நாம் வருடா வருடம் அக்கிரம ஆட்சியிலிருந்து விடுதலை பெற்ற சுதந்திர விழாவாகக் கொண்டாடினலும் தகும்.

துவேஷம், அடக்கு முறை, வெறுப்பு இத்தீய குணங்களின் உருவம் நரகாசுரன். அவன் ஒழிந்தாலும் இன்னும் நம் நாட்டில் அக் குணங்கள் முற்றாக ஒழியவில்லை: பயமும் அமைதியின்மையும் சிற்சில வேளைகளில் அவனைப் பற்றிய நினைவை நமக்கு ஊட்டுகின்றன.

இத்தகைய நினைவுகள் நமக்கு என்றுமே வராது, பசியும் பஞ்சமும் இன்றி, நல்ல உணவும், நல்ல உடையும், நல்ல மனமும் உடையவர்களாக எல்லோரும் வாழ வேண்டுமென இந்த நல்ல தினத்தில் இறைவனை வேண்டுவோமாக.

## நரகாசுரன் அழிந்த நாள்

[க. இந்திரகுமார் — ப. எண் 373]

நரகாசுரன் என்ற ஒரு கொடிய அரக்கன் மக்களுக்குப் பெருந் துயரைக் கொடுத்து வந்தான். மனிதர் துன்ப மேலீட்டினல் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவைத் துதித்து விமோசனங் கேட்டனர். மனிதர் படும் அவஸ்தையைக் காணச் சகியாத பரமாத்மா நரகாசுரனுடன்சமர்புரிந்து அவனைக் கொன்ருர். தீமையே உருவெடுத்தஅவ்வரக்கன் இறக்குந் தறுவாயில் ஸ்ரீ நாராயணனிடத்தில் ஒரு வரங் கேட்டான். தான் இறக்கும் அந் நாளில் மக்கள் அழுக்காடைகளை அகற்றிப் புத்தாடைகளை உடுத்துப் புது வாழ்வை மேற்கொள்ள வேண்டும் என்பதே அவன் கேட்ட வரம். கண்ணன் அவ்வரத்தைக் கொடுத்தார். தீபாவளிப் பண்டிகை தொன்மையும் தெய்வத் தன்மையும் வாய்ந்த பெருநாளென்று இக் கதையால் நாம் அறியக்கூடியதாய் இருக்கிறது. தீபாவளித் தினத்தில் ஈழநாட்டிலே தீப வழிபாடு நடைபெருவிடினும் இந்தியாவில் இது நடைபெற்று வருகின்றது. பாவம் எனப்படும் இருள் சூழ்ந்திருக்கும் உலகில் விளக்கு ஏற்றுவதால் இன்பமாகிய ஒளியைப் பெறலாம் என்பதே தீபாவளிக் கொண்டாட்டத்தின் அடிப்படைக் கருத்தாகும்.

## கவனிக்கவும்

**சிறுவர் பகுதி**: அங்கத்தவர் பதிவு எண் வரிசையில். 551, 553 இவ்விரண்டு இலக்கங்களிலும் ஒரு சிறிய தவறு ஏற்பட்டுள்ளது. இவ்விலக்கங்களுக்குரியவர் குறிப்பிட்ட வயதிற்கு மேற்பட்ட வயதினர். ஆகவே, இவ்விரு இலக்கங்களும் இப்பொழுது வேறு பெயர்களுக்கு மாற்றப்பட்டுள்ளன. 19 வயதுக்கு மேற்பட்டோர் **ஈழநாடு சிறுவர் பகுதியில்** அங்கத்தினராகச் சேர வியலாதென்பதைச் 'சின்னமாமா' மீண்டும் நினைவூட்டி வைக்கின்ருர்.

## உண்மைக் கதைகள்: டெலிவிஷனின் தந்தை IV



**தொலைப்புலன்மானி (ரடார்):-** டூமொன்ற் தமது 'கதோட்-ரே' ரியூப்பை விருத்திசெய்வதிலே ஈடுபட்டுக்கொண்டிருந்த பொழுது, கண்ணுக்குத் தெரியாத விமானங்கள், மற்றும் பொருள்களையும் கண்டுபிடிக்கும் கருவியான தொலைப்புலன்மானியின் முன்னேற்றத்துக்கும் உதவிபுரிந்தார். கப்பல், விமானப் பிரயாணம் இரண்டுக்கும் தொலைப்புலன்மானி மிகுந்த உபயோகமுள்ளதாக விருந்தது. ஆனல். டூமொன்ற் தான் கண்டுபிடித்த தொலைப்புலன்மானி முறையின் உரிமைகளைத் தமதாக்கிக் கொள்ளத் தவறியதால், வேருருவர் அந்த உரிமைகளைப் பெற்றுக்கொண்டார்.

**டெலிவிஷன்:-** 1936ஆம் ஆண்டில், டூமொன்றினுடைய 'கதோட்-ரே' ரியூப்கள் ஓரளவுக்கு விற்பனையாகத் தொடங்கின. இதன்பயனக அவர் பெற்ற சொற்ப பணத்தையும் அவர் டெலிவிஷன் கருவியின் விருத்திக்காகச் செலவுசெய்தார். அப்பொழுது ஆக்கப்பட்டு வந்த டெலிவிஷன் கருவிகளிலும் சிறந்த கருவிகளைச் செய்ய முடியுமென்ற நம்பிக்கை டூமொன்றுக்கு இருந்தது. ஆனல் இதற்கு ஒரு டெலிவிஷன் நிலையம் அவசியமாயிற்று. ஆனல் டூமொன்றிடம் இதற்குப்பணம் ஏது?

**பணப்பிரச்சினை:-** டெலிவிஷனின் எதிர்காலம் மிகுந்த சிறப்புடையதாக இருக்குமென்பதை டூமொன்ற் உணர்ந்தார். ஆனல், போதிய பணம் அவரிடம் இல்லாததால் அவர் தமது முயற்சியைக் கைவிட்டு விடக்கூட யோசித்தார். அந்த நேரத்தில், ஒரு பிரபல சினிமாக்கொம்பனியான 'தி பரமவுண்ட் பிக்சர்ஸ்' அவருடைய ஆக்கவேலைக்குப் பண உதவி அளித்து ஊக்கமளிக்க முன்வந்தது.

(தொடரும்)

செல்வச் சிறுவர்களே !

தீபாவளி என்ருல் சொல்லவும் வேண்டுமா? அனேக மருமக்களுக்கு இது ஆனந்தத் திருநாள். புதிய உடைகள் அணிந்து, பட்டாசு கொளுத்தித் தோழர்களுடன் கொண்டாடும் நாள் அல்லவா இது. பட்சணங்கள். சாப்பிடும்போது சின்ன மாமாவை மறந்துபோக வேண்டாம்.

சின்னமாமா

அகரவரிசைப் பாடல்: 3

## இயற்கை

— ஈழு —

கூடும் இருளைக் குலைத்துக் கிழக்கிடை
கும்பலாம் மேகத் திரை கிழித்து
பாடும் பறவைகள் கீதம் இசைத்திடப்
பாரினை ஓம்பப் பரிதிவந்தான்

திக்குகள் எங்கும் தெளிந்திட வேயிருள்
தேய்ந்து மறைந்துமே சென்றிடவே
மக்க ளொடுவுயிர் யாவும் விழித்துள
மங்களம் மண்ணில் மலர்ந்ததம்மா !

ஊரின் குளத்திடை பூத்துள தாமரை
ஒய்யா ரமாய்நகை செய்திடவே
சீரிளம் தென்றல் மலரின் மணத்தினை
செல்லுந் திசைகளில் தேக்கியதே

வானை யளந்துநில் மாமலை மீதினில்
வந்து பிறந்த நதியதுவும்
கான மிசைத்துமே ஓடும் அழகினைக்
காணவே இன்பம் கனியுதம்மா!

எங்கும் இயற்கையின் இன்னரும் காட்சிகள்
ஏகி உள்ளத்தில் இருந்திடவே
தங்கிய துன்பங்கள் யாவும் ஒழிந்துநல்
சாந்தி நிறைந்துமே பொங்குதம்மா.

## 'ஈழநாடு' சிறுவர் பகுதி

★ **ஈழநாடு சிறுவர்** பகுதியில் ஆறு வயது தொடக்கம் பத்தொன்பது வயது நிரம்பிய அனைவரும் அங்கத்தவராகச் சேர்ந்து கொள்ளலாம்.

★ அங்கத்தவராகச் சேரவிரும்புவோர் இங்குள்ள விண்ணப்ப பத்திரத்தை நிரப்பி அனுப்பவேண்டும். இந்த இதழில் வெளியாகியுள்ள பத்திரம் 7-11-59 க்குப் பின்னர்செல்லுபடியாகாது. ஒவ்வொரு வாரமும் இங்கு வெளியாகும் பத்திரத்தை அடுத்துவரும் சனிக்கிழமைக்குள் உபயோகித்துக் கொள்ளவும்வேண்டும். ஒருவர் ஒருமுறை அங்கத்தவர் பத்திரத்தை நிரப்பி அனுப்பினல் போதுமானது.

★ ஈழநாடு அலுவலகத்திலிருந்து அங்கத்தவர் பதிவுத்தாள் கிடைத்தபின்னர்தான் **ஈழநாடு சிறுவர் பகுதிக்கு** அங்கத்தவர் தங்கள் கதைகளையும், கட்டுரைகளையும், கருத்துக்களையும் அனுப்ப வேண்டும். அவற்றுள் நல்ல கதைகளும், கட்டுரைகளும் **சிறுவர் பகுதி** யில் வெளியிடப்படும்.

★ **சிறுவர் பகுதி** சம்பந்தமான சகல கடிதப்போக்குவரத்தும் பின்வரும் விலாசத்துக்கு அனுப்பப்பட வேண்டும்:

சின்ன மாமா,
**ஈழநாடு சிறுவர் பகுதி,**
தபாற்பெட்டி எண் 49,
யாழ்ப்பாணம், இலங்கை.

இங்கே வெட்டவும்

## ஈழநாடு சிறுவர் பகுதி

விண்ணப்பப் பத்திரம்

(31-10-59)

அன்புள்ள சின்னமாமா அவர்களுக்கு
வணக்கம்,

ஈழநாடு சிறுவர் பகுதியில் என்னை ஓர் அங்கத்தவராகச் சேர்த்துக்கொள்ளுமாறு வேண்டுகின்றேன்.

பெயர்.................................................

விலாசம்...........................................

..................................

..................................

கையொப்பம்

பெற்ருர் அல்லது
ஆசிரியரின் கையொப்பம். வயது............

இங்கே வெட்டவும்

சென்ற சிலமாதமாக லாவொஸின் வட பாகத்தில் வடவியற்னாமைச் சேர்ந்த கொம்யூனிஸ்ட்டுகள் படையெடுத்து நாட்டின் அமைதியைச் சீர்குலைத்துள்ளன.

# லாவொஸின் வரலாறும் அதன் நெருக்கடியும்
## மீண்டும் அமைதி நிலைபெறுமா ?

— வ. மகாதேவன் —

லாவொஸ் இந்தோசீனக் குடாநாட்டிலுள்ள ஒருகடற்கரை இல்லாத நாடாகும். மொத்த நிலப்பரப்பு ஏறக்குறைய *91,000* சதுர மைல். சனத்தொகை ஏறக்குறைய *30,00,000*. வடக்கே மக்கள் சீனமும், கிழக்கே வியற்னாமும், தெற்கே கம்போடியாவும், மேற்கே தாய் லந்தும், வடமேற்கே பர்மாவும் அயல்நாடுகளாக இருக்கின்றன.

கோடைகாலத்தில் *80* அங்குலம்வரை மழை பெய்கின்றது. நொவெம்பர் தொடக்கம் பெப்ரவரி குளிரான வரண்ட பருவமும், பங்குனி தொடக்கம் மே வரை வெப்பமான வரண்ட பருவமும் நிலவுகின்றன.

### வசிக்கும் மக்கள்

வசிக்கும் மக்களுள் மூன்றில் இரண்டு பங்கினர் தை சாதியினரின் கிளை சாதியனராகிய லாவொ இனத்தவர்களாவர். வடக்கேயுள்ள மலைப்பிராந்தியங்களில் மியோ, மான் லோலோ சாதியினர் வசிக்கின்றனர். சொந்த மொழிகளைப் பேசும் இம்மக்கள் மொங்கோலிய இனத்தைச் சேர்ந்தவர்கள். தெற்கே உள்ள மலைப்பிராந்தியங்களில் மோய் அல்லது காசாதியினர் வசிக்கின்றனர். இவர்கள் காட்டுச் சாதியினர். போர்னியோவிலுள்ள டயக் சாதியனரைப் போன்றவர்கள். இவ்வினங்களைச் சேர்ந்த மக்கள் தாய்லந்திலும், வியற்னாமிலும் வசிக்கின்றனர். லாவோ சாதியினர் பௌத்த சமயத்தவர்கள்.

தலைநகரும் பெரிய நகரமும் வியந்தியான். இந்நகரின் சனத்தொகை ஏறக்குறைய *30,000*. லுவாங் பிரபாங் என்ற நகரில் தான் அரச குடும்பத்தினர் வசிக்கின்றனர். விவசாயப் பிரதேச நிலையமாக விளங்கும் தாகீக் வெள்ளீய சுரங்கப் பிரதேசங்களுக்கு அண்மையிலும் இருக்கின்றது. சவன்னாகேற் என்ற நகரம் நாட்டின் மத்தியிலுள்ள ஒரு நிலையமாகும்.

### புகையிரத வீதிகள் இல்லை

லாவொஸில் புகையிரத வீதிகள் இல்லை. மோட்டார் வீதிகளின் மொத்த நீளம் *1800* மைல். இவ்வீதிகளுள் பெரும்பகுதி கேவலமான நிலையிலிருப்பதோடு மழைக்காலங்களில் உபயோகத்திற்கு உதவாத நிலையிலும் இருக்கின்றன. பிரதானவீதி *932* மைல் நீளமானது. இது வியற்னாமிலுள்ள சய்கோன் நகரிலிருந்து கம்போடியா வழியாகவும் லாவொஸிலுள்ள முக்கிய நகரங்கள் வழியாகவும் லுவாங் பிரபாங்கிற்குச் செல்கின்றது. மீக்கொங் நதியில் வியந்தியானுக்கும் சவன்னாகெற்றுக்கும் இடையே உள்ள பாகம் ஒரு போக்குவரத்துச் சாதனமாக உபயோகிக்கப்படுகின்றது.

பிரதான உணவுப் பொருளும் பிரதான விளை பொருளும் நெல், சோளம், பருத்தி, புகையிலை, கோப்பி ஆகியவையும் பயிரிடப்படுகின்றன. கோப்பியும், தேக்க மரங்களும், மாடுகளும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. தாகீக் நகருக்கு வடக்கேயும் வடமேற்கேயும் வெள்ளீயம் எடுக்கப்படுகின்றது. இப் பாகங்களிலேயே மர ஆலைகளும் இருக்கின்றன.

நாட்டில் உபயோகிக்கப்படும் நாணயம் கிப். *98* கிப்புகள் ஒரு பிரித்தானி பவுணுக்கு மதிப்பில் சமம். [*7 1/2* கிப் — *1* ரூபாய் என மதிக்கலாம்]

### பிரெஞ்சு ஆட்சி

*1893, 1902, 1904* ஆகிய வருடங்களில் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கைகள் மூலம் மீக்கொங் நதியின் இடது புறத்திலுள்ள பிரதேசங்கள் எங்கும் படிப்படியாக பிரெஞ்சு ஏகாதிபத்திய ஆட்சி தாபிக்கப்பட்டது.

*1941* ஜுலை தொடக்கம் *1945* ஓகஸ்ட்வரை யப்பானியரின் ஆட்சியில் லாவொஸ் இருந்தது. *1941* இல் நிறுவப்பட்ட "சுதந்திர லாவொஸ்" இயக்கம் *1945* இல் சுதந்திரத்தை கோரத் தொடங்கிற்று. *1945* செப்டெம்பரில் லாவொஸ் சுதந்திர இராச்சியமாகப் பிரகடனம் செய்யப்பட்டது. *1946* இல் பிரெஞ்சுப் படைகள் லாவொஸைக் கைப்பற்றி ஒரு குறிப்பிட்டளவு சுயாட்சியை வழங்கினர். *1949–50* இல் பிரெஞ்சு யூனியனில் லாவொஸ் ஒரு சுதந்திர உறுப்பு நாடாக்கப்பட்டது.

### சுதந்திரம்

*1950* பெப்ரவரியில் லாவொஸை ஒரு சுதந்திர நாடாக வெளி நாடுகள் அங்கீகரிக்கத் தொடங்கின. *1955* டிசம்பரில் லாவொஸ் ஐக்கிய நாடுகள் தாபனத்தில் ஓர் உறுப்பு நாடாகியது.

*1953* ஒக்டோபரில் கைச்சாத்திடப்பட்ட பிரான்சு — லாவொஸ் சிநேக உடன்படிக்கையில் பிரான்சு லாவொஸை ஒரு பூரண சுதந்திர நாடாக அங்கீகரித்தது.

### கொம்யூனிஸ்ட் படையெடுப்பு

*1953-54* இல் வியற்மின் கொம்யூனிஸ்ட் படைகள் லாவொஸ் மீது படையெடுத்து நாட்டைக் கைப்பற்றத்தொடங்கினர். இந்தயுத்தத்தில் பிரெஞ்சுப்படைகள் லாவொஸ்ஸிற்கு உதவியளித்தன. *1954* கோடைகாலத்தில் போர் ஓய்வு ஏற்பட்டு ஜெனீவாவில் மாநாடு நடைபெற்றது. இம் மாநாட்டில் ஐக்கிய இராச்சியம், ஐக்கிய அமெரிக்கா, கொம்யூஸ்ட் சீனம், சோவியத் ருஷியா, இந்தோசீன அரசாங்கங்கள், வியற்மின் (வடவியற்னாம்) ஆகியவற்றின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். லாவொஸின் யுத்த நிறுத்த உடன்படிக்கை *20-7-54* இல் கைச்சாத்திடப்பட்டது. இவ்வுடன்படிக்கையின் அம்சங்கள் நடைமுறைக்குக் கொண்டு வரப்படுவதை மேற்பார்வை செய்வதற்கு கனடா, போலந்து, இந்தியா அடங்கிய ஒரு சர்வதேசக்குழுவும், இருதரப்பினரதும் இராணுவக் குழுவும் நியமிக்கப்பட்டன.

### இறுதி உடன்படிக்கை

அரசியல் உடன்பாட்டிற்கு பேச்சுவார்த்தைகள் நடைபெற்றபோது சுதந்திர லாவொஸ் (பாதெற் லவோ) இயக்கத்தினருக்கும் அரசாங்கத்திற்கும் பிணக்குகள் ஏற்பட்டதால் இருதரப்பினருக்கும் *1955* இல் போர் மூண்டது.

*1956* இல் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டதன் பயனாக ஏற்பட்ட முடிவுகளை லாவொஸின் தேசியசபை நிராகரித்தது. உள்நாட்டுப் போர் மூள்வதைத் தடுப்பதற்காக தொடர்ந்தும் *1957* இல் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன. இறுதி உடன்படிக்கை *19-11-1957* இல் ஏற்பட்டது. புதிய அரசாங்கமும் பதவியேற்றது.

### இவ்வாண்டுப் போர்

சென்ற சிலமாதமாக லாவொஸின் வடபாகத்தில் வடவியற்னாமைச் சேர்ந்த கொம்யூனிஸ்ட்டுகள் படையெடுத்து நாட்டின் அமைதியைச் சீர்குலைத்துள்ளன. லாவொஸ் அரசாங்கத்தின் முறையீட்டை ஐக்கிய நாடுகள் தாபன பாதுகாப்பு சபை ஆராய்ந்து ஓர் உபகுழுவை லாவொஸிற்கு அனுப்பியது. இக்குழுவினர் நிலைமை பற்றிச் சேகரித்த விபரங்களை இம்மாதம் ஐக்கியநாடுகள் தாபன பாதுகாப்புச் சபைக்குச் சமர்ப்பிப்பார்கள். இவ்வறிக்கையைப்பரிசீலனை செய்தே பாதுகாப்புசபை நடவடிக்கைபற்றி முடிவு செய்யும். நாடு முழுவதும் நெருக்கடி நிலைமையும், சில பாகங்களில் ஊரடங்கு உத்தரவும் நடைமுறையிலிருக்கின்றன. இவ்வாண்டு நடைபெற இருந்த பொதுத் தேர்தல்கள் பின்போடப் பட்டிருக்கின்றன.

ஐக்கிய நாடுகள் தாபனம் அமைதியை நிலைநாட்டுவதற்குக் கையாள விருக்கும் முயற்சிகள் பற்றிய விபரங்கள் விரைவில் தெரியவரும். லாவொஸ் பிரதமர் ஐக்கிய நாடுகள் தாபன பொதுச் சபை விவாதத்தில் கலந்து கொள்வதற்காக நியூயோர்க் நகருக்குப் புறப்பட்டிருக்கிறார். பாதுகாப்புச் சபைக்கு உபகுழு சமர்ப்பிக்கும் அறிக்கையில் வட வியற்னாமின் ஆக்கிரமிப்பு பற்றித் தெளிவான விபரங்கள் இருந்தால் தான் ஐக்கிய நாடுகள் தாபனம் குறுக்கிடும். தொடர்ந்து லாவொஸில் அமைதியற்ற நிலைமை இருந்து வருமா? ஜெனிவா உடன்படிக்கைகள் மீறப்பட்டிருந்தால் மீண்டும் சர்வதேச மேற்பார்வைக் குழு அங்கு அனுப்பப்படுமா? இவற்றுக்கு விடைகள் விரைவில் தெரிந்துவிடும் என எதிர்பார்க்கலாம்.


யாழ்ப்பாணம்

**ஐக்கிய இலாப நிதி**

— *1918*-ஆம் ஆண்டு தாபிதமானது —

**வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.**

**இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப்பணம் ரூபா 616313,00**

**100 ரூபா விகிதமான 8000 பங்குகள்**

**பங்குப்பணங்கட்டுமுறை**

மாதமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்பட வேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100-00 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்தநேரமும் வாங்கலாம்.

**தினசரிப் பற்றுவரவு**

எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒருவிகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

**தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்**

க்ஷேமப்பணம் 12 மாசம், 36 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 6 விகிதமும் 8 விகிதமுமாகக் கொடுக்கப்படும்.

**உண்டியல்கள்**

கொழும்பிலுள்ள 'நாஷனல்' வங்கியிலும் 'இம்பீரியல்' வங்கியிலும், இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும்வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

**கடன்**

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகமாகக் கொடுக்கலாம்.

**இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.**

**எஸ். கனகசபை**
சிறுப்பர்

Std. 14.


# நமது நூல் நிலையம்

**ஹேமா-ஆசிரியர்:** சரத் சந்திரர்; **தமிழாக்கம்:** ஆர். ஷண்முகசுந்தரம்; **வெளியீடு:** மல்லிகா; **விற்பனை உரிமை:** மெர்க்குறி புத்தகக் கம்பனி, கோயமுத்தூர்; **விலை:** ரூ. *1-75*.

காலத்தை எதிர்நீச்சலடித்து நிலைக்கக்கூடிய படைப்புக்களை ஆக்கிய ஆசிரியர்களின் வரிசையில் முதலிடம் பெற்றவர் சரத் சந்திர சட்டர்ஜி. அவரது நல்ல படைப்புக்களுள் ஒன்றான இந்நூல்: ஹேமா, அனுராதா ஆகிய குறுநாவல்களின் தொகுப்பாகும்.

**ஹேமா:** அன்னையை இழந்த பிரிவிலும் கொடுமையின் நெருக்குதலிலும் வேதனைப்படும் பிஞ்சு நெஞ்சனான கிஷனுக்குத் தாய்மை உணர்ச்சியை அளித்துக் காக்க முன் வருகிறாள் ஹேமா. ஆனால் கொடுமையான சமூகம் ஓர் உயிர் இன்னோர் உயிருக்கு அன்பு காட்டுவதைக்கூடப் பொறுக்காது பொருமைப் புயலைக் கிளப்பி விடுகின்றது. துவளும் அந்த இரு உயிர்களும் தம்மைத் தாமே காத்துக்கொள்ள வெளிக் கிளம்புகின்றன.

**அனுராதா:** வாழ்ந்து கெட்ட குடும்பத்தின் ஒரேயொரு வாரிசு அனுராதா. தனிமையிலும் ஏழ்மையிலும் தன்னைப் பற்றி நிற்கும் குழந்தைகளைக் கவர்ந்து அணையாத பாசத்தை ஊட்டிப் பேணுகிறாள். அந்தப் பாசம் அவளை உயர்த்தி விடுகிறது. சிறுத்தையாகப் பாயும் விஜயன் அவளது தியாக சிந்தையின் முன் பசுவாகி விடுகின்றான்.

இரு கதைகளிலும் பரிபக்குவமான தாய்மை பரிமளிப்பதைக் காணலாம். சிறுசிறு சம்பவங்கள் மூலம் உணர்ச்சியைக் கிளறிப்பாத்திரங்களுடன் ஒன்ற வைத்து விடுகின்றார் ஆசிரியர்.

ஏறக்குறைய கால் நூற்றாண்டுக்கு முந்திய படைப்புக்களானாலும் அங்கே தென்படும் கருத்துக்களும் கருவும் பிறந்த மண்ணின் வாசனையைக் கமழச் செய்வதுடன் மனிதனை விட்டு என்றும் விலகாத உணர்ச்சிக்கோவைகளை உண்டாக்கியுமுள்ளன.

மூலத்தின் அடிநாதம் பிசகாமல் தமிழில் தந்துள்ளார் திரு. ஷண்முகசுந்தரம். இலக்கியப் பசிக்கு அமுத பானம் போன்ற இந்நூல் நெஞ்சை நெக்குருகச் செய்யும்சக்திவாய்ந்தது. அச்சுப் பிழைகள் அடுத்த பதிப்பில் திருத்தப்பட வேண்டும்.

---

**மகாசபை மலர்** — அகில இலங்கை சிறுபான்மைத் தமிழர் மகாசபையின் *16* ஆவது ஆண்டுவிழா வெளியீடு, *1959*.

**விலாசம்:** *117*, பருத்தித் துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

'எல்லோரும் ஓர் குலம் எல்லோரும் ஓர் இனம்'என சமத்துவ சங்கநாதத்துடன் வெளியாகியுள்ளது **மகாசபைமலர்.** இருட்டில் சென்று கொண்டிருக்கும் தமிழகத்துக்கு ஒளி காட்டும் விளக்காக இதுஅமைந்துள்ளது. தமிழினத்தைத் தாழ்த்திவரும் சாதிப்பாகுபாடு ஒழிந்தால்தான் தமிழினம் முன்னேறும் என்பதை மலரில் வெளியாகியுள்ள கட்டுரைகளும் கவிதைகளும் எடுத்துக் கூறுகின்றன.

'ஆண்டவன் தன்னின்
படைப்பினில் இங்குள
அத்தனைபேரும்
சமமெனவே
வேண்டும் நெறிபல
கொண்ட தமிழரில்
வேற்றுமை காண்பது
வீணதுவாம்.'

என்ற கவிதை இதற்குச் சான்று பகரும்.

பிரபல எழுத்தாளர்களின் படைப்புக்களுடனும் படங்களுடனும் விளங்கும் இம்மலர் ஆண்டு தோறும் வெளியாகி வரும்மென்பதை அறிந்து மகிழ்கின்றோம்.

---

# இலக்கிய விருந்து
## அ. இ. எழுத்தாளர் மாநாட்டின் ஏற்பாடு
### வெளி நாட்டுப் பிரதிநிதிகளும் சென்னையிற் கூடுகின்றார்கள்

சென்னையில் இவ்வாண்டு டிசம்பர் மாதம் மூன்றாவது வாரத்திற் நடைபெறவிருக்கும் அகில இந்தியா எழுத்தாளர் மாநாடு இந்திய இலக்கிய வரலாற்றிலும் வளர்ச்சியிலும் மிக முக்கியமான வொரு கட்டமாகும்.

நான்கு தென்னிந்திய மொழிகளில் வல்லுனரான எழுத்தாளர்கள் பலர் இம்மாநாட்டிற் கலந்து கொள்வார்கள்.

பிரபல ஓரிய மொழி எழுத்தாளரான திரு. காலிந்தி சரண் பாணிக்கிரகி தலைமையில் 'அரசினரும் எழுத்தாளரும்' என்ற விவாதம் ஆரம்பமாகும். மராத்தி நவீனங்கள் எழுதி வருபவரான திரு. பி. உவை. தேஷ்பாந்தே விவாதத்தை ஆரம்பித்து வைப்பார்.

'இந்திய இலக்கிய விமர்சனம்' என்ற பகுதிக்கு காஷ்மீரத்தைச் சேர்ந்த பேராசிரியர் ஜே. எல். கால் தலைமை வகிப்பார். திரு. கே. பி. கேசவ மேனன் 'இந்திய இலக்கியங்களின் ஒருமைப்பாடு' என்பது பற்றிய விவாத அரங்கை ஆரம்பித்து வைப்பார்.

நுட்பத்தொழில், விஞ்ஞானம், புதிய கருத்துக்களை வெளிக்கொணர்தல் முதலியவற்றுக்கு இந்திய மொழிச் சொல்லாக்கம் சம்பந்தமான விவாதத்துக்கு சென்னைப் பல்கலைக் கழகத்துணை வேந்தர் டக்டர். ஏ. லக்ஷ்மண சுவாமி முதலியார் தலைமை தாங்குவார்.

'இந்திய மரபும் நவீன எழுத்தாளரும்' என்ற விவாதத்தை திரு. என். இரகுநாத ஐயர் ஆரம்பித்து வைக்க இசைந்துள்ளார்.

'நவீனங்களில் இந்திய உருவம்' என்ற பகுதிக்கு பிரபலர் ஹிந்தி நாவலாசிரியர், திரு. எஸ். ஏச். வற்ஸயாயன் தலைமை தாங்குவார். வெளி நாட்டுப் பிரதிநிதிகள் பலர் இம்மாநாட்டிற் பங்குபற்றுவார்கள். மாநாட்டின் நடவடிக்கைகளைப் புத்தகமாக வெளியிடுவதற்கு வரவேற்புக் குழு ஆக வேண்டிய ஏற்பாடுகளைச் செய்துவருகின்றது.

அருள்வழி

# தீபாவளித் திருநாளில்
## ஞான ஒளியை ஏற்றுங்கள்

— யோகிராஜ் சச்சிதானந்தா —

ஆன்ம நேயர்களே,

ஆண்டு தோறும் வரும் தீபாவளி மீண்டும் உங்களை நாடி நிற்கிறது. அதனை ஆர்வமுடன் வரவேற்று ஆனந்தமடையுங்கள். சிறந்த நன்னாளில் சிந்தனையைத் தூய்மையாக்கும் சீரிய கருத்துக்களை நினைத்துக் கொள்ளுங்கள். அதனால், தெய்வீக ஆசியைப் பெற்றுத் திவ்விய வாழ்விலே திகழ்ந்து மகிழுங்கள்.

### புராண வரலாறு

அசுரன் ஒருவன் அழிந்த தினமே ஆனந்தமான தீபாவளி. நரகாசுரன் நாசமான நாள் நமக்கெல்லாம் நன்னாள். அவ்வரசன் 'நான்' என்ற அகங்காரத்தால், குடிகளைக் கொடுமையாக ஆண்டான். தான் இட்டதே சட்டம் என வகித்து, அறவழியிற் செல்லாது மக்களைத் தடுத்துப் பாவங்கள் பல செய்வித்தான். அசுரனது ஆணைக்கு அடங்கிய மக்கள், ஸ்நானம் செய்தல், சேலை தோய்த்தல், வீடு கூட்டுதல், விளக்கேற்றுதல், தெய்வத்தைப் போற்றுதல் ஆகிய நற் செயல்களைக் கூடக் கைவிட்டனரெனின் அவர்களின் அந்தகார நிலையைக் கூறவும் வேண்டுமோ. அறத்தை மறந்து அசுத்தத்திற் புகுந்து அவலப்பட்ட மக்களை ஈடேற்ற உருத்திர மூர்த்தி இரக்கங் கொண்டார். விஷ்ணு பகவானுக்கு பஞ்சாயுதங்களைக் கொடுத்து நரகாசுரனைக் கொல்வித்தார். அசுரன் சாவதற்கு முன் நல்லறிவைப் பெற்றான். தன் தவறை நினைந்து வருந்தினான். உயிர் துறக்கு முன் விஷ்ணு பகவானிடம் வரம் ஒன்று பெற்றான். 'இறைவனே! இந்த நாளிலே எவர் ஆசார சீலராய் பொய் கொலை முதலிய பாவங்களை விடுத்து தேவரீரை வழிபடுகிறாரோ அவர்களுக்கு ஆசிபுரிய வேண்டும்' என வேண்டினான். பகவானும் அப்படியே வரம் கொடுத்தார் என்பது புராண வரலாறு.

### ஆணவம்

இந்த நரகாசுர ஆட்சியும், அழிவும், ஆனந்தமும் என்றோ ஒரு நாள் நடந்து முடிந்த பழங் கதையன்று. அது இன்றும் நடைபெற்று வருகிறது. ஆன்மாவைப் பீடித்திருக்கும் ஆணவமே அந்த அசுரனாவான். ஆணவ அசுரனின் ஆணை, அறத்தை மறக்கச் செய்கிறது. ஆசாபாசங்களைப் பெருக்கி ஆசாரக் கோட்டையும் ஆக்குகின்றது. இத்தகைய நெருக்கடியிலே வருந்துகின்ற ஆன்மாக்கள் இறைவனைத் துக்க நிவிர்த்தி வேண்டி வணங்குகின்றன. ஆன்மாக்களின் மீது கருணை கொண்ட இறைவனின் திருவருள், ஆணவ மலத்தைப் போக்கி ஆனந்த நிலையைக் கொடுக்கிறது. இதுவே தீபாவளித் தினத்தின் உண்மைத் தத்துவம். அகத்திலே உள்ள அழுக்கு நீங்கி சிவானந்தம் பெறும் சீரிய கருத்தை நினைவு கொண்டு, புறத் தூய்மையும் நீராலாக்கிப் புத்தாடை புனைந்து புனித நாளைப்போற்ற வேண்டும்.

### தீபாவளிக் காலம்


ஐப்பசி மாதத்தில் அமாவாசைக்கு முதல் நாளாகிய சதுர்த்தசி பொருந்திய அதிகாலை நேரம் தீபாவளிக் காலமாகும். அந்நேரம் மதி (சந்திரன்) தோன்றும் நேரம். அமாவாசை இருளை அகற்றி மதி தோன்றி ஒளி பெருக வளர்வது போல, அஞ்ஞான இருளை அகற்ற மதி (புத்தி) தோன்றி ஞான ஒளி வீச வேண்டும்.

தீபாவளியைப் பற்றிப் பத்ம புராணம்:-இந்த நாளிலே செய்யப்படும் பூசைகளும் புண்ணியங்களும் ஆன்மாக்களை நரகத்தினின்றுங்காத்தலால்இதுநரக சதுர்த்தசியெனப்படும். ஸ்நானத்துக்குரிய எண்ணெயை லட்சுமியாகவும் தண்ணீரைக் கங்கா தேவியாகவும் பாவிக்க வேண்டும். தேவர்களுக்கும், பிதுர்களுக்கும் பூசை செய்து சிரார்த்தஞ் செய்ய வேண்டும். பசுக்களிலே பால் கறக்காமலும் எருதுகளைக் கொண்டு வேலை செய்வியாமலும் அவைகளை அலங்கரிக்க வேண்டும் என்று கூறுகிறது.

### புனிதமான நாள்

இவ்வளவு புண்ணியமான நாளிலே இன்னும் விசேஷமான புண்ணியங்களைச் செய்வதற்குப் பதிலாக பாவமான பல செயல்களைச் செய்பவருமுளர். தீபாவளித் தினத்தை நினைத்து எத்தனையோ சீவராசிகள் திடுக்கிடுகின்றன. அன்புடன்வளர்த்த ஆடும்கோழியும் அலறித் துடிக்க அவற்றின் உயிரைப் போக்குகின்றனர். அந்தோ என்ன கொடுமை. அசுரச் செயலை அழிப்பதற்குப் பதிலாக அதனை ஆதரிப்பது அறியாமையன்றோ! மதி விளங்க வேண்டிய மாசற்ற தீபாவளித் தினத்திலே மதுவைக் குடித்து மதியிழக்கும் மாந்தரும் உளர். தீபாவளி என்பது புனிதமான நாள் என்பதை மறந்து குடித்து வெறித்துக் கொலை புரிந்து அசுரத் தன்மையில் அறிவிழக்கும் நாளாகக் கொண்டாடுவோர், தீபாவளியின் புனிதத்தையும், அதன் தத்துவத்தையும் அறியாதவர்களே.

அன்பர்காள்! தெய்வீகத் தன்மை நிறைந்த தீபாவளியின் பெருமையை மற்றவர்களுக்கு எடுத்துரையுங்கள். தினமும் ஊனை உண்டு வருபவர்கள் அன்றாவது அதனை ஒழித்துச் சீவகாருணிய சிந்தனையோடு வாழ்வது நன்று. மதியைக் கெடுக்கும் மதுவை மனதிலும் நினையாமல் விடுவது மேலானது. சிந்தனையை இறைவனுக்குச் சொந்தமாக்கி, ஆனந்தம் பெறுவீர்களாக! தீபாவளி உங்கள் உள்ளத்தில் விளங்குவதாக! எங்கும் என்றும் ஞான ஒளி பிரகாசிப்பதாக!



சாம்ராஜ்ய கூட்டு நாடுகளின் புதிய நிலையமொன்றின் மாதிரிக் கட்டடம் மேலே காணப்படுகிறது. இந் நிலையம் லண்டனில் நிறுவப்படவிருக்கின்றது.

**மத உண்மைகள் எக்காலத்தும் உண்மைகளேயாதலால், அவற்றைப் பிற மதங்களில் சென்று உபதேசிக்க வேண்டுவதில்லை யென்பதை 'ஸ்ரீ ராம கிருஷ்ண விஜயம்' இதழில் வெளியாகியுள்ள கட்டுரை விளக்குகின்றது.**

# மனம் அமைந்த இடத்தில்
## இறையொளி இயங்குகின்றது

மதங்கள் முன்னோர் கண்ட உண்மைகளை நமக்குக் கூறுகின்றன. அவற்றுள் பலவற்றை அனுபவத்தில் உணரும் வன்மை இல்லாமையால் நாம் மறுக்கின்றோம். நமது பக்குவத்திற்கு மிகச் சேய்மையில் ஒளிரும் இறைவனாகிய சுடரைக் குறித்து நாம் இருளில் கிடந்து கொண்டு வாதிக்கின்றோம். ஆதலால் உண்மைகள் நமக்குப் புலனாவதில்லை. இறைவன் ஆராய்ச்சிகளினால் உணரப்படாதவனாகையால், ஆராய்ச்சி முறைகள் வீண் பிளவுகளுக்குக் காரணமாகின்றன. பகைகளை எழுப்புகின்றன. சொல் அமைந்த இடத்தில் மனம் அமைதி அடைகின்றது. மனம் அமைந்த இடத்திலேயே இறையொளி இலங்குகின்றது. ஆதலால், ஆராய்ச்சிகளும் வீணான தர்க்கங்களும் இறைநிலையை ஒரு காலத்தும் அறிவிக்க வல்லன அல்ல. ஐயம் நீங்காதவர்களுக்குள் மட்டுமே வாதம் உண்டாக முடியும். வழக்காடுபவர்கள் ஐயம் நீங்காதவர்களாக இருப்பதனால், அவர்களை வெல்ல முயல்வது பயனற்றதாகும். வென்றாலும், அவ்வெற்றி இறைநிலை அடைவிற்கு உதவுவதில்லை. உலகியல் வழக்குகள் உலகநிலையைக் கடந்த இறைநிலைக்குப் பொருந்தாதவை. உண்மை உணர்ந்தவர்கள் வழக்கிடுபவர்களைக் கண்டு நகைக்கின்றார்கள்.

வழக்கு வழியாக மதங்களைப் பரப்ப முயல்வது ஒரு போழ்தும் வெற்றி தராது. மதோபதேசங்கள் பிற மதங்களைத் தாக்காது, ஆக்க நெறியில் நிகழல் வேண்டும். நன்னெறிகளை அழிக்கத்தக்க நெறிகளில் மதங்கள் பரப்பப்படலாகாது. மதங்களின் வடிவமும் ஆக்க வடிவமாகவே இருக்க வேண்டும். அழி மதங்கள் பெயர்களால் மட்டுமே மதங்கள் எனப் படுகின்றன.

மத உண்மைகள் எக்காலத்தும் உண்மைகளே யாதலால், அவற்றைப் பிற மதங்களில் சென்று உபதேசிக்க வேண்டுவதில்லை. ஆனால் பிற மதங்கள் உலகியலிற் புக நேரும்போது அத்தகைய உபதேசங்கள் பயன்படும். நேர்நெறியில் நிற்கும் மதங்களைத் தழுவுகின்றவர்களுக்குப் பிற மத உபதேசங்களால் என்ன பயன்? சில மதங்கள் உலகியலை நாடுவதனால், தம் வடிவம் அழிந்துவரப் பெறுகின்றன. உலகியலின் பங்கள் முடிவுபெற்ற இடத்திலேயே மதம் தோன்றத் தொடங்குகின்றது. ஆகையால், உலகிய லீடுபாடு மத நெறியை அழிப்பதாகின்றது.

அனுபவத்தில் பயிலப்படுவது வரை மதம் வடிவுகொண்டு நிற்கின்றது. மதம் வீண் சொற்களில் மட்டும் நிகழும் பொழுது முதல் வடிவழியத் தொடங்குகிறது. மத உண்மைகள் ஒழுக்கத்தில் நிகழ வேண்டும். மதாசாரியர்கள் மதத்தை அனுபவத்தில் கண்டவர்கள். நாம் பயனற்ற சொற்களில் மட்டுமே மதத்தைக் காண்கிறோம். அவரவர்கள் மதத்தை அனுபவிக்கின்றார்கள். நாம் மதத்தைக் கேட்கிறோம். ஆனால் சிந்திப்பதும் கூடச் செய்வதில்லை. ஆசாரியர்கள் மதானுபவங்களைச் சுருங்கிய சொற்களில் உபதேசிக்கின்றார்கள். அவற்றைக் கேட்டு நாம் அனுபவத்தில் கொணர வேண்டுமேயன்றி, அவற்றை மேலும் மேலும் பிறர்க்கு உபதேசிப்பதனால் பெரும் பயன் உண்டாவதில்லை.

மத உண்மைகளை அனுபவத்திற் கண்டவர்களே அவற்றை உபதேசிக்கும் தகுதி உடையவர்கள்.

மத உண்மைகளை மனங்கொள்ளும் பக்குவம் இல்லாதவர்களுக்காகவே புராணங்கள் (Myths) எழுந்துள்ளன. அப்புராண கதைகளைக் கூறும் பொழுது அவற்றால் உணரப்படும் உண்மைகளையும் பொது மக்கட்கு உணர்த்தல் வேண்டும். அவ்வுண்மைகள் உணரப் படாதவரை, புராணங்களால் பயனில்லை. புராணங்கள் மத நெறிகளைக் கதைகள் வாயிலாக உணர்த்துவதோடு முடிகின்றன. அதற்குமேல் மதங்களில் புராணங்களுக்கு இடமில்லை.

# பத்து வருட அனுபவம்

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

குறை கூறாதவர்களே இல்லை. மந்திரிகள் மீது அதிக வெறுப்பு. தங்களுக்கு எல்லாம் தெரியுமென்ற எண்ணம் மந்திரிகளுக்கு இருப்பதாக மக்கள் கண்டிக்கின்றனர். சென்ற பத்து வருஷங்களில் ஒரே கட்சியிலேயே பல கோஷ்டிகளும், பரஸ்பர சண்டைகளும், போட்டி பொறாமைகளும் அதிகரித்துள்ளன. சுயநலமும் பதவி வேட்டையும் தான் காரணம். மந்திரி சபை என்றும் ஐக்கியப்பட்டிருக்கவில்லை. அரசியல் கோஷ்டிகளைத் திருப்தி செய்ய, யார் யாரையோ எல்லாம் எப்படியோ கட்டி வைத்திருந்தனர். அரசியல் ரீதியிலோ பொருளாதாரத்திலோ மாகாண நிர்வாகம் மோசமாகும். ஜில்லா நிர்வாகம் தன்னிடமே நம்பிக்கை இழந்துவிட்டது.

### அதிகாரஆசை

யார் கையிலாவது பசை தடவாவிட்டால் ஒருகாரியமும், ஆகாது. யாருடைய சிபார்சும் இல்லாவிட்டால் எதுவும் நடவாது. அரசியல் வாதிகள் குறுகியஜில்லாப்பிராந்தியவாதங்களில் ஈடுபட்டனர். இந்திய ராஜ்யம் வேண்டுமென்கின்றனர் சிலர். பஞ்சாபி ராஜ்யம் வேண்டுமென்கிறார் மற்றவர். சிலர் ஹரிஜன ராஜ்யம் வேண்டுமென்றும், மலைராஜ்யம் வேண்டுமென்றும் கோஷங்கள் கிளப்புகின்றனர். ராஜ்யத்தைப் பல பல சின்னத் துண்டுகளாக்கவேண்டுமென்று வேறு சிலர் கேட்கின்றனர். எல்லாம் அதிகார ஆசைதான். 1950-ம் வருஷ அரசியல் சட்டம் சென்ற 10 ஆண்டுகளாக நடந்துள்ள லட்சணம் இது. நாட்டின் ஒற்றுமையை வளர்க்க இது உதவவே இல்லை. மொழிப் பிரச்சினை, இந்த ராஜ்யத்தில் மத வெறிகளையும் பிரிவினைகளும் கிளப்பி விட்டுள்ளது.

நமது மந்திரிகளில் பெரும்பாலோரும் டில்லிக்கும் சந்திகாருக்கும்(பஞ்சாபின் தலைநகர்) இடையில் அலைந்துகொண்டும் கிராமமக்களிடையில்வாய்வீச்சு வீசிக் கொண்டும் காலத்தை வீணாக்குகிறார்கள். தங்களுக்கு ஆள்திரட்டித்தங்கள்நன்மையைக்காத்துக் கொள்ளுகிறார்கள். தேசிய ஸ்தல மொழிப் போட்டிச் சண்டை உச்சமடைந்துள்ளது. இரண்டையும் சமமாகச் செய்ய முற்படவில்லை.

பாடியாலா மகாராஜாவுக்கு சீக்கிய ராஜ்யம் அளிப்பதாக ஜனப் ஜின்னா கூறியதை அவர் தேசாபிமானத்துடன் நிராகரித்தார்.

தன் ராஜ்யத்தையும் தியாகம் செய்தார். ஆனால் இப்போது வகுப்புவாத முறையில் சின்னச் சின்ன ராஜ்யங்களைப் பிரிக்க வேண்டுமென்று கிளர்ச்சிகள் எழுப்பப்படுகின்றன. ஆண்டவன் தான் அவர்கள் கண்ணைத் திறக்கவேண்டும்.

எங்கும் சச்சரவு, வகுப்புப் பிணக்கு, மொழிவெறி முதலியவற்றுக்கான வித்துக்கள், சென்ற பத்துவருட சமஷ்டி ஆட்சியில் விதைக்கப்பட்டுள்ளன. தற்சமயம் ஒற்றுமைப் படுத்தும் ஆங்கில மொழிக்கும் எதிர்ப்பு. மந்திரி சபைகளையும், சட்ட சபைகளையும் கலைப்பதால், அரசியல் வாதிகள் தவிர வேறு யாரும் வருத்தப்பட மாட்டார்கள். அரசியல் வாதிகளின் புரட்டுக்களைக் கண்டபின், பொது மக்கள் ஜனாதிபதியின் ஆட்சி வரவேண்டுமென்று பிரார்த்திக்கிறார்கள்.

(தொடரும்)

## குழந்தை இலக்கிய மாநாடு சென்னையில் நடைபெறும்

சென்னை குழந்தை எழுத்தாளர் சங்கத்தின் ஆதரவில் குழந்தை இலக்கிய மாநாடு நவம்பர் 21, 22 இல் நடைபெறும். இம் மாநாட்டை ஒட்டி குழந்தைப் புத்தகக் காட்சி நடைபெறும். குழந்தை இலக்கிய மலர் ஒன்றும் வெளியிடப் படும்.

### குழந்தைக்கவிதைப் போட்டி

குழந்தைகளுக்கு ஏற்ற கவிதைகளை இயற்றுவோருக்கென இப்போட்டி ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது. சிறந்த மூன்று கவிதைகளுக்குப் பதக்கங்கள் வழங்கப்படும். எந்த வயதுக் குழந்தைக்கு வேண்டுமாயினும் எழுதலாம். போட்டிக் கவிதைகள் அனுப்புவோர் குழந்தைகளுக்கு ஏற்ற முறையில் 40 வரிகளுக்கு மேற்படாமல் எழுதி 31-10-59 க்குள் அனுப்பவேண்டும். விலாசம்: குழந்தை எழுத்தாளர் சங்கம் 10, வைத்தியராமய்யர் தெரு, சென்னை-17.

## தோட்டத்தில் ஒளித் திருநாள்

[3ஆம் பக்கத் தொடர்ச்சி]

த்து வைக்கப்படும். மகிழ்ந்தாட வேண்டிய நேரத்தை எல்லோரும் எதிர் நோக்கியிருப்பார்கள். அவர்களைப் போலவே தேங்காயெண்ணைப் போத்தலும் சாராயப் போத்தலும் வெளியே காத்திருக்கும். ஒன்று தீபாவளியின் வருகையைக் குறிக்க; மற்றது அதற்கு உஷார் கொடுக்க.

நள்ளிரவில் பட்டாசு வெடிகள் தீபாவளியின் வருகையைத் தெரிவிக்கும். வட்டிலில் பலகாரங்கள் சிலுசிலுக்கும். பெண்களும் பையன்களும் வழக்கத்துக்கு முன் படுக்கையை விட்டு எழுந்துவிடுவார்கள். பஞ்சாங்கத்தில் குறிப்பிட்ட சுப நேரத்தில் எல்லோரும் எண்ணை தேய்த்து ஸ்நானம் செய்வார்கள். பின்பு புத்தாடைகளால் தங்களை அலங்கரித்துக்கொள்வார்கள். பரம்பரை வழக்கத்தையொட்டி எல்லாப் பொருட்களும் பின்னர் காலஞ்சென்ற பிதுர்களுக்கு படையல் செய்யப்படும். அதற்குப் பின் நாள் முழுவதும் உண்டு குடித்து ஆனந்திப்பார்கள்.

தீபாவளியின் முதல் நாளன்று ஒருவரையொருவர் சந்தித்துக் குசலம் விசாரிப்பதில்லை. நெருங்கிய உறவினர் மட்டுமே ஒருவரையொருவர் விசாரித்துக்கொள்வார்கள். இரண்டாம் நாள் மட்டும் நண்பர்களும் உறவினர்களும் வீடு வீடாக விஜயம் செய்து உபகாரங்களைப் பரிமாறிக்கொள்வார்கள். நடன கோஷ்டிகளும் பஜனை கோஷ்டிகளும் தலைமைக் கங்காணி போன்ற பெரியவர்களிடம் சென்று தங்கள் மரியாதையைத் தெரிவிப்பார்கள்.

அதன் பின்னர் அவர்கள் "லைன்"கள் யாவற்றையும், முடியுமானால் மற்ற தோட்டங்களையும், அன்று சாயங்காலம் வரை சுற்றி வருவார்கள். நாள் முடிவில் சேர்ந்த பணத்தை எல்லாம் பங்குபோடுவார்கள். ஆனால் இந்த வழக்கம் பல தோட்டங்களில் மறைந்து போகிறதென்றே கூறலாம். இப்போதுள்ள சிறுவர் சிறுமியர்கள், நடனமாடுவதை விட, ஏதாவதொரு சினிமாப் படத்தைப் பார்க்கத்தான் விரும்புகிறார்கள். இதில் இன்னொரு முக்கியமான விஷயம் என்னவென்றால், தொழிலாளர் சங்கப் போட்டிகளும், கட்சிக் குழப்பங்களும் இந்த அற்புதமான திருவிழாவைக் கொண்டாடுவதற்குச்சிலசமயம் இடையூறுகின்றன. ஒரு "லைனி"ல் வேலை செய்யும் தொழிலாளர்கள் தங்களுக்கு மாறான இன்னொரு தொழிற்சங்க யூனியனோடு சம்பந்தப்பட்ட தொழிலாளர்களுடன் சம்பந்தம் வைத்துக்கொள்ள மாட்டார்கள்.

### மேடை நாடகம்

ஆட்டம், கூத்து, உணவு, குடி. இவையெல்லாம் இப்பொழுது முடிந்து விட்டன. இரவுச் சாப்பாட்டிற்குப் பின் ஆண்களும் பெண்களும் சிறுவர்களும் மைதானத்தில் கூடியிருக்கிறார்கள். மேடையின் பின்புறத்திலிருந்து சினிமாப் பின்பாடகர்களின் கீதம் ஒலித்துக் கொண்டிருக்கும். பழைய காலத்தைப் போல, சூத்திரதாரி, மோஹினி ராஜன், மோஹினிப் பெண் ஆகியவர்களுடைய குரல் இப்பொழுது மேடையில் ஒலிப்பதில்லை. என்றாலும் நாடகம் நடந்தே தீரும்.

சென்ற வருடம், மஸ்கேலியா பகுதியிலுள்ள லக்ஸபான தோட்டத்தில், தொழிலாளர் எல்லோரும் கூடி பழமையை விட்டுப் புதுமையைப் புகுத்தினார்கள். சதாரம், சத்தியவான்-சாவித்திரி போன்ற உழுத்துப் போன நாடகங்களை ஒதுக்கிவிட்டு, "நாடற்றவன்" என்ற ஒரு நாடகத்தை நடித்தார்கள். தொழிலாளர்களின் அரசியல், சமூக வாழ்க்கையை அது சித்தரித்தது. இது போன்ற நாடகங்கள் இனிமேல் மத்திய மாகாணம், ஊவா மாகாணம் ஆகிய இடங்களில் அடிக்கடி அரங்கேற்றப்படும்.

### கொண்டாட்டத்தின் கருத்து

தீபாவளிக் கொண்டாட்டத்தின் கருத்தையும் முக்கியத்துவத்தையும் தோட்டத் தொழிலாளர் இன்னும் உணர்ந்திருக்கிறார்கள். ஆனால், காலம் மாற மாற அதன் தன்மையும் மாறி வருகிறது.

நாடகம் இரவு முழுவதும் நடக்கும். தூக்கம் தாங்க முடியாத குழந்தைகள் நிலத்திலே படுத்து உருளுவார்கள். பெண்களோ கண்களைக் கசக்கிக் கொண்டு எப்படியும் விழித்திருப்பார்கள். வயதானவர்கள் மெய்மறந்து துயிலுறுவார்கள். ஆனால் காலதேவன் நித்திரை கொள்வதில்லை. அடுத்த நாள் வெகு சீக்கிரமே விடிந்துவிடும். அதோடு தீபாவளிக் கொண்டாட்டங்களும் முடிந்து விடும்.

இன்னும் மூன்றே மூன்று மணி நேரமிருக்கிறது. அதோ! தொழிலாளர்களை வேலைக்கழைக்கும் பேரிகை கொட்டுகிறது. வாருங்கள் தோட்டத்துக்கு!

## இலக்கியத்தில் தேசியம்

### யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற எழுத்தாளர் கூட்டம்

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் 17-10-59 இல் நடைபெற்ற எழுத்தாளர் கூட்டம் மீண்டும் சென்ற சனிக்கிழமை (24-10-59) அதேகல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. இக் கூட்டம் முந்திய வாரத்தில் நடைபெற்ற கூட்டத்தின் தொடர்ச்சியேயாகும்.

ஈழநாட்டு எழுத்தாளரின் திறமைகளைத் தேசிய அடிப்படையில் வழிப்படுத்துவது சம்பந்தமான தீர்மானம்பற்றி விவாதம் நடைபெற்றது. திரு. ஜீவா விவாதத்தை ஆரம்பித்துவைத்தார். எழுத்தாளர்கள் சிலர் இந்தியச் சூழ்நிலையைப் பின்னணியாக வைத்துக் கதை எழுதுவதை அவர் கண்டித்தார். திரு. பொன்னையா, தேசிய அடிப்படையில்தான் பல நாடுகளினதும் தலைசிறந்த எழுத்தாளர்களின் படைப்புகள் அமைந்துள்ளன எனக் கூறினார். திரு. கனகசெந்திநாதன், இங்குள்ள எழுத்தாளர்கள் 40 வருடங்களுக்கு முன்னரே தேசிய அடிப்படையில் எழுதத்தொடங்கிவிட்டார்களென்றும், குறிப்பிட்ட பிரேரணைக்கு எவ்வித கரணமும் தமக்கு விளங்கவில்லை என்றும் கூறினார். திரு. கே. டானியல் திரு. ஆர். திருச்செல்வம், திரு. க. கணேசலிங்கம், திரு. கே. பசுபதி உட்பட வேறும் பலர் விவாதத்திற் கலந்துகொண்டனர். பிரேரணை வாக்கெடுப்புக்கு விடப்படுவதை அங்குள்ளோர் அநேகமாக விரும்பவில்லை. ஆகவே, அடுத்த ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருக்கும் எழுத்தாளர் கூட்டத்தில் விவாதத்தைத் தொடர்ந்து நடாத்தச் சங்கம் தீர்மானித்தது. கூட்டத்திற்குத் திரு. சொக்கலிங்கம் தலைமை வகித்தார்.


## சூரிய சக்தியால் இயங்கும் படம் காட்டும் கருவி

'ஸ்லைட்' படங்களைக் காட்டுவதற்கான படம் காட்டும் கருவி (புரொஜெக்டர்) ஒன்றை ஆப்கானிஸ்தானில் இருக்கும் இரு அமெரிக்கர்கள் அமைத்துள்ளனர். சூரியசக்தியால் இது இயங்குவதே இதன் தனிச் சிறப்பாகும். விருத்தியடைந்து வரும் நாடுகளில் கல்விக்கு இது மிகவும் பயனளிக்கக் கூடிய கருவியெனக் கருதப்படுகிறது. மிகக் குறைந்த செலவில் அமைக்கப்பட்ட இந்த புரொஜெக்டரை யு. எஸ். சர்வதேச ஒத்துழைப்பு நிர்வாகம் (ஐஸிஏ) இயக்கிக் காட்டியது. தகரக் குவளை, ஒரு கண்ணாடி, இரண்டு மூக்குக் கண்ணாடி பில்லைகள், பெரிய ஆணிகள் ஆகியவற்றைக் கொண்டுதான் இந்த புரொஜெக்டர் அமைக்கப்பட்டது. கல்விப்போதனைக்கு உகந்த கருவி என்ற முறையிலே, மின்சாரவசதி குறைவான, ஆனால் சூரியவெளிச்சம் அதிகமுள்ள நாடுகளில் இது மிகவும் பயன்படக்கூடியது. நேரில் பார்த்துக் கற்பிக்கும் முறைக்கு இது ஒரு அரிய சாதனம். அத்துடன் இந்தக் கருவியை எப்படி அமைப்பது, எப்படி இயக்குவது போன்ற விபரங்கள்கொண்ட புத்தகம் ஒன்றையும் ஐ. ஸி. ஏ. தயாரித்துள்ளது. நோய்களைத்தடுக்கும் முறைகளை விளக்கும் படங்களும் தயாரிக்கப்பட்டு வருகின்றன. ஐ. ஸி. ஏ-யின் ஆதரவில் இந்த புரொஜெக்டரை உருவாக்கியவர்கள் ஜேம்ஸ் டட்னி என்ற ரேடியோ ஆராய்ச்சி எஞ்ஜினியரும், ரெக்ஸர் ஷார்ட் என்றகலைஞருமாவர். இவ்விருவரும் ஆப்கானிஸ்தானில் கல்விப்பணியை மேற்கொண்டிருக்கின்றனர்.

இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!

எல்பின்ஸ்டன் - ரொக்ஸி
(கொழும்பு)

நடிகர்கள் :
எஸ். எஸ். ராஜேந்திரன்
எம். என். ராஜம்
ஜீ. வரலட்சுமி
தாம்பரம் லலிதா



நடனம் :
சாயி - சுப்புலட்சுமி

பின்னணி :
எம். எல். வசந்தகுமாரி
டி. எம். சௌந்தரராஜன்
ஏ. பி. கோமளா,
சீர்காழி கோவிந்தராஜன்

மாமியார் மெச்சிய மருமகள்

எல்லோரும் பார்த்து மகிழ வேண்டிய ஓர் குடும்பச் சித்திரம்

இப்பொழுது காட்சியளிக்கிறது!

செல்லமஹால் (கொழும்பு)

பி. எஸ். சரோஜா, டி. கே. பாலச்சந்திரன், ராகினி, சந்திரபாபு, ராஜசுலோசனா, அசோகன், டி. பி. முத்துலட்சுமி
முதலியோர் நடிக்கும்

பாண்டித்தேவன்

பின்னணி:
பி. ஸ்ரீநிவாசன், ஜெயலட்சுமி, ஜமுனாராணி, ரத்னமாலா, கே. ரவி, சந்திரபாபு, பி. லீலா, டி. வி. ரத்னம்.

சினிமா உலகம்

# 12 மணி [ஹிந்தி]

## பட விமர்சனம்

இரவு 12 மணி. ஒரு ரயில்வே ஸ்டேசன். அங்கு இருக்கும் பிளாட்பாரத்தில் படத்தின் வில்லனும், கதாநாயகியும் நிற்கின்றனர். ரயில் ஒன்று மெல்ல, மெல்ல ஸ்டேசனுக்கு வந்து சேருகிறது. ஸ்டேசனில் வில்லனின் கையாள் ஒருவனும் நிற்கிறுன். ரயிலிலுள்ள பிரயாணியை இந்தக் கையாள் சுட்டுக் கொல்லுகிறுன். அதே நேரத்தில், வில்லனல் தனது கைப்பைக்குள் ரிவால்வர் திணிக்கப்பட்டுள்ளதை அறியாத கதாநாயகி, பையைத்திறந்து ரிவால்வரை எடுக்கிருள். கொலேகாரனின் ரிவால்வரிலிருந்து கிளம்பிய வெடியின் அதிர்ச்சியின் பயனுக, கதாநாயகியின் கையிலிருந்த ரிவால்வரும் வெடித்துவிடுகிறது. கொலேகாரன் தப்பி ஓடி விடுகிருன்; கதாநாயகி கூண்டில் கைதியாக அடைக்கப்படுகிருள். இச்சம்பவத்தின் பின் நாம் மீண்டும் கதாநாயகியைச் சந்திப்பது படத்தின் முடிவில் தான்.

ஒரு ரயில்வே ஸ்டேஷனில் துணிகரமாக நடாத்தப்படும் இந்தக் கொலே தான் **12 மணி** என்ற இந்திப்படத்தின் முக்கிய அம்சம். ஆனல், கொலே நடைபெறும் விதம் நம்பமுடியாததாகவிருக்கிறது. எத்தனேயோ பிரயாணிகள் நிற்கின்ற ஸ்டேசனில், ரயில்வே உத்தியோகத்தர்கள் நடமாடும் இடத்திலே, ரயிலுள் இருக்கும் பிரயாணியை வெளியிலிருந்தபடியே சுட்டுவிட்டுத் தப்பி ஒருவன் ஓட முடியுமென்பதை எப்படி நம்புவது? அது தான் போகட்டும். கதாநாயகி பையைத் திறக்கிருள், முகத்தைத் துடைப்பதற்குக் கைக்குட்டையை நாடி. ஆனல், கையில் அகப்படுவதோ ரிவால்வர். அந்த ரிவால்வர் எப்படிப் பைக்குள் வந்தது என்று சிந்திக்கவில்லேக் கதாநாயகி; தானும் கொலேகாரனுடன் சேர்ந்து துப்பாக்கியினல் சுட்டுவிடுகிருள்!

கதாநாயகனுக நடிப்பவர் குரு டற். அவருடைய நடிப்பு சாதாரணமாகவே இருக்கிறது. காதற் காட்சிகளில் அடிக்கடி அவர் நெற்றியைச் சுருக்கிப் புருவங்களே நெளிக்கிருர். அவருடைய எண்ணத்தின்படி இது காதலின் வெற்றிக்கு இன்றியமையாத தொன்ருே?

கதாநாயகி தான் வஹீதா ரெஹ்மன். இவருக்கு அளிக்கப்பட்டிருக்கும் பாகம் சிறிதாயினும், திருப்திகரமாகச் செய்துள்ளார். வாயினல் பேசுவதைவிட, அவர் தமது விழிகளால் எவ்வளவோ பேசிவிடுகிருர். அவருடைய நடிப்புக்கு இது ஒரு தனி அழகைக் கொடுத்துவிடுகிறது.

ஜொனி வோக்கர் ஹாஸ்யப் பாகத்தை ஏற்றுள்ளார். சிற்சில இடங்களில் தவிர, மற்றும்படி அவரது ஹாஸ்யம்சோபிக்கவில்லே.

வில்லனக வருபவர் தமது பாகத்தைத் திறம்படச் செய்திருக்கிருர். நவநாகரிக உடையுடன், உதடுகளில் புன் சிரிப்புத்தவழ, வார்த்தைகளில் தேனெழுகப் பேசும் இருபதாம் நூற்ருண்டு வில்லனுக்கு அவர் ஓர் எடுத்துக்காட்டாக விளங்குகிருர்.

இப்படத்தில் இரு பெரிய குறைகள் உள. ஒன்று, அளவுக்கு மிஞ்சிய மேனட்டு நடை, உடை, பாவனேகளேப் படத்தில் புகுத்தி உள்ளது. இரண்டு, தென்னிந்தியரைப் புண்படுத்தும் முறையில் சில பாத்திரங்களே அனவசியமாக உருவாக்கியிருப்பது.

பாட்டுகள் இனிமையாகவிருக்கின்றன. படப்பிடிப்பு மொத்தத்தில் நன்ருகவே இருக்கிறது. முக்கியமாக, படத்தின் இறுதிக்கட்டத்தில் வரும் காட்சி படப்பிடிப்பாளரின் திறமைக்குச் சான்ருக விளங்குகின்றது.

படத்தில் 12 மணியை எதிர்பார்க்கிருேம்; அது வரவும் தான் செய்கிறது; ஆனல், எதிர்பார்த்த அளவுக்கு அதிர்ச்சியையோ, விறுவிறுப்பையோ அது அளிக்கவில்லே.

—மின்மினி.

# கல்யாணப் பரிசு

## ரசிகர் கருத்து

( i )

**பூ**த்த புதுமலரின் எழிலும், மணமும் பொங்கும் பெருமிதமும் கொண்ட காதல் சிட்டுக்கள் இரண்டு. இன்ப வானில் சிறகடிக்கின்றன. புயலென்பது எதிரான — வைரம் வாய்ந்த பகையில் மட்டும் கிளம்புவதில்லே. ஆழ்ந்த அன்பிலும் அதன் சக்தி தொக்கி நிற்க வேண்டுமா?

"சே! திசை திரும்பும் வசந்தி, மனம் ஒடிந்த பாஸ்கர் இருவரின் வாழ்க்கையிலும் விதி அன்புருவத்திலேயா தோன்றவேண்டும்?" எதிர்ப்பை வீரத்தைக்காட்டி வெற்றிகாண முடியாத இக்கட்டு.

மனத் தராசிலே தியாகம் காதல் இரண்டும் எதிர் எதிராக நிறுத்தப்பட்டுள்ளன. நிறையில் தியாகம் வென்று விடுகிறது. வசந்தி காதலே இழந்து, தன்னேத் தியாகத்தில் வளர்த்த அக்கா கீதாவுக்காக, அவளது மானசீகக் காதலுக்காக, பாஸ்கரை இழக்கிருள்.

காதல் எனும் தென்றல் வீசும் இதயத்திலே எத்துணே சலசலப்பு. ஒரே சோகம். அதன் வலுவான பிடியில் துவளும் ஜீவன்கள். அப்பப்பா!

ஸ்ரீதரின் கதையென்ருலே அதில் ஏதோ புதுமை பூத்துக் கிடக்கும். ஆனல் நாம் காணும் பாத்திரங்கள் தமிழ் நாட்டில் உலவினலும், ஏதோ வடக்கு நோக்கிப் போய்விடுவதான பிரமை தட்டுகிறது.

தேர்ந்த நடிகர்களான சரோஜாதேவி, ஜெமினி கணேசன், விஜயகுமாரி ஆகிய மூவரினதும் உயிர்த்துவம்கொண்ட நடிப்பைப் பெற்றுத் திகழும் படம். அதில் இணேத்துள்ள பாடல்கள் நெஞ்சைத் தொடுகின்றன.

இத்தனேயும் கல்யாணப்பரிசு தரும் நெஞ்சின் அலேகள் தாம். நிற்கட்டும்! நல்ல சிருஷ்டி. காலஞ்சென்ற கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத்தின் கருத்துச் செறிந்த பாடல்கள், அதற்கேற்ற இசை அமைப்பு; தத் ரூபமான நடிப்புத் திறன் ஆகிய எல்லாம் நன்று. ஆனல் ஒளிப்பதிவு சிறக்கவில்லே.

இருந்தாலும் அந்த மானசீகக் காதலில் வெற்றிகொண்டு, மனித உணர்ச்சிகளில் இழுபட்டு நிலேகுலேயும் கீதா அனுதாபத்துக்குரிய பாத்திரம். அதைத் தாங்கும் விஜயகுமாரியின் எதிர்கால வெற்றி ரகசியமும் அங்கேதான்.

திறமையான நட்டுவாங்கமும் கருத்துச் செறிந்த உரையாடலும் நினேவில் பதிந்துவிடுகின்றன. ரசிகர்களின் உணர்வில் ஊசலாடும் அந்தக் கல்யாணப் பரிசின் முடிவிலே அந்திச் சூரியனின் முதிர்ந்த ஒளியை நாடிச் செல்லும் வேதனேயை மறந்துவிட முடியவில்லே.

— ஆர். என்.

( ii )

வசந்திக்கும் ரகுவுக்கும் திருமணம் முடிந்து ஊர்வலமாய் வரும்பொழுது கையில் கடிதத்துடன் குழந்தை ராஜா அவள் சேலேயைப் பிடிக்கிருன். வசந்தி அழுதுகொண்டே ராஜாவைத் தூக்கிக் கொண்டு சுற்றுமுற்றும் பார்க்கிருள். பின் அதன் கரத்திலிருந்த கடிதத்தை வாசித்ததும் குழந்தையுடன் வீதியை வந்து பார்க்கிருள். பாஸ்கர் நிதானமாய் போய்க் கொண்டிருக்கிருன். அதைக் கண்ட ரகு "கூப்பிடட்டுமா...?" என்கிருர். அதற்கு வசந்தி "வேண்டாம். அவரைக் கூப்பிடாதீர்கள். அவரைப் போக விடுங்கள். அவர் போகட்டும்... அவர் சரித்திரம் முடிந்து விட்டது" என்று கூறும் பொழுது எமது உள்ளம் நெகிழ்ந்து விடுகிறது. உலகத்திலே தனித்தவனுகச் செல்லும் பாஸ்கரின் நிலே நம் கண்களில் கண்ணீர் சொரிய வைக்கிறது. சோக மயமான காட்சி.

'பிரவீணன்'
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.

## " அவள் யார்? "

'அவள் யார்?' என்னும் படம் சுதர்சன் நிலேயத்தினரால் தீபாவளிப் பரிசாகத் தமிழ் நாடெங்கும் வெளியிடப்பட்டுள்ளது. இப்படத்தில் சிவாஜி கணேசன் ஒரு வழக்கறிஞராகத் தோன்றி, தமது குணசித்திர நடிப்பின் திறமையை நன்கு புலப்படுத்தியுள்ளாராம். வழக்கறிஞர் தொழிலில், கடமையின் காவலனுக விளங்கத் தன்னலியன்றளவு முயற்சி செய்யும் சிவாஜி, கடமைக்கும் கயமைக்குமிடையில் சிக்குண்டு தவிக்கும் உள்ளத்தின் போராட்டத்தை நன்கு சித்திரித்துள்ளார். பண்டரி பாயின் நடிப்பும் இப்படத்திற்கு மெருகூட்டுகின்றது. மற்றும் ரங்கராவ், சகஸ்ரநாமம், டி. கே. ராமச்சந்திரன், டி. ஆர். ராமச்சந்திரன், சௌகார் ஜானகி, மாலினி, சந்தியா, ஜி. பட்டு ஐயர், கோபால கிருஷ்ணன், பார்த்திபன் முதலியோரும் இப்படத்தில் நடிக்கின்றனர்.

## கலிபோர்னியாவில் சர்வதேச பட விழா
### வங்காளப் படமும் திரையிடப்படும்

**க**லிபோர்னியாவில் நடைபெறவிருக்கும் சர்வதேச திரைப்பட விழாவில், இந்தியப் படத் தயாரிப்பாளரான சத்யஜித் ரேயின் படமும் திரையிடப்படும். சத்யஜித் ரே ஒரு வங்காளப் படத் தயாரிப்பாளரும், இயக்குநருமாவர். அவருடைய படங்கள் இதற்கு முன்னரும் சர்வதேச விழாக்களில் காண்பிக்கப்பட்டு, அவருக்கு வெற்றியீட்டிக் கொடுத்துள்ளன. இம்முறை அவருடைய படம் காட்டப்படுவது மூன்ருவது ஆண்டாகும். "அப்புவின் உலகம்" என்னும் படம் தான் இந்த ஆண்டில், சர்வதேச விழாவில் காண்பிக்கப்படும். சத்யஜித் ரே ஏற்கனவே தயாரித்துள்ள "பதர் பாஞ்சாலி", "அபராஜிதோ" இவை இரண்டு படங்களினதும் தொடர்ச்சியே "அப்புவின் உலகம்". ரேயின் இம்மூன்று படங்களேயும் ஒரு தொடர் கதையின் மூன்று பகுதிகள் என்றே கூறலாம். இத்தொடர் சித்திரத்தின் கடைசிப் பகுதி தான் "அப்புவின் உலகம்". இளேஞரான சத்யஜித் ரேயின் படங்கள் சர்வதேச அரங்கில், இந்தியத் திரைப்படவுலகிற்குப் பெருமையையும், புகழையும் தேடித் தந்துள்ளன. "அப்புவின் உலகம்" என்ற படமும் அப்படியே புகழ் தேடித் தருமென எதிர்பார்க்கலாம்.


## " கொஞ்சும் சலங்கை "

**எம்.** வி. ராமன் பட நிலேயத்தார் தயாரிக்கும் "கொஞ்சும் சலங்கை"யில் சாவித்திரி, கமலா லட்சுமணன், ஜெமினி கணேசன், மனேகர், சாரங்கபாணி ஆகிய நடிக, நடிகையர் முக்கிய பாகங்களேற்று நடிக்கின்றனர். இப்படம் ஒரு முழு நீள 'டெக்னிகலர்' படமாகும். இப்படத்தில் தோன்றும் ஜெமினி கணேசன், நாதசுர வித்துவானகவும், வாட்போரில் திறமை மிக்க வீரனகவும் நடிப்பது படத்தின் புதுமையானவொரு அம்சமாகும். சாவித்திரி ஒரு பாடகியாகவும், கமலா லட்சுமணன் ஒரு நாட்டியக்காரியாகவும் தோன்றுகின்றனர். இப் படத்தில் சாரங்கபாணியும் முத்துலட்சுமியும் நகைச்சுவை விருந்தளிப்பார்கள். ஜீவன்கலா, குசலகுமாரி, சசி ஆகியோரின் கண்கவர் நடனங்களும் இதில் இடம் பெறுகின்றன. கவிஞர் கு. மா. பாலசுப்பிரமணியம் திரைக்கதை, வசனத்தை எழுதியுள்ளார். திரு. எம். வி. ராமன் தமது இயக்குநர் பொறுப்பை மிகவும் திறமையுடன் வகித்து, இப் படத்தைச் சிறந்த முறையில் தயாரிக்கப் பெரிதும் உழைத்து வருகிருர்.

ஆயிரக்கணக்கான ரசிகர்கள் கண்டு களிக்கின்றனர்!

முருகன் (ஜிந்துப்பிட்டி) ஓடியன் (கல்கிசை) ராணி (யாழ்ப்பாணம்) ஜோதி (திருக்கோணமலே)

6-ந் திகதி தொடக்கம் லிபர்ட்டி (பதுளே)



★ ஜெமினி கணேசன் ★ ராஜசுலோசன
★ சாவித்திரி ★ வி. ஆர். ராஜகோபால்
★ எம். என். நம்பியார் ★ எம். எஸ். எஸ். பாக்கியம்

முதலியோர் நடித்த

பாக்கிய தேவதை

(தமிழ்)

பின்னணி:
கண்டசாலா, பி. சுசீலா, ஜமுனுராணி, திருச்சி லோகநாதன்

## மக்கள் இதயம் கவர்ந்த 3-வது வாரம்!

கிங்ஸ்லி - பிளாஸா - நவா (கொழும்பு) வெலிங்டன் - மனோஹரா (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டக்களப்பு) வெம்பிளி (கண்டி) ஸ்ரீ கிருஷ்ணா (திருக்கோணமலை)

அயின் (மன்னார்) மொடர்ன் (பதுளை) விஜிதா (மஸ்கேலியா) லக்ஷ்மி (ரத்தினபுரி) தீவொளி (நுவரெலியா) சரசாவி (அக்கரைப்பத்தன) ஜெமினி (பொஹவன்தலாவ)

**தீபாவளித் திருநாளிலே** தியாகத்தின் செம்மையை, அன்பின் மகத்துவத்தை, உய்த்துணர்ந்து, உள்ளத்திலே அமைதியும் சாந்தியும் நீங்கள் பெற வேண்டுமேயானல், **"கல்யாணப் பரிசு"** அதை உங்களுக்குக்கட்டாயமாக அளிக்கும்.

★

சுயநல இருளை ஒழித்துப் பிறர் நலன் என்னும் ஒளிபரப்பும் தீபாவளி நாளிலே தியாகச் சுடர் விட்டு அன்பொளி வீசும் அமர தீபம் **கல்யாணப் பரிசு!**

★

எவளைத் தனது உயிர்க்காதலியாக நேசித்தானே, எவளைத் தன் எதிர்கால வாழ்வை இன்பச் சோலையாக்கும் துணைவியாக எண்ணி, எண்ணி மகிழ்ந்தானே, அவளையும் அவளுக்காக மணம் புரிந்த அவள் அக்காவையும் பறிகொடுத்துவிட்டு நிற்கும் தியாகி ஒருவனின் உன்னதக் கதைதான் **கல்யாணப் பரிசு !**





இப்பத்திரிகை யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் கலாநிலையப் பதிப்பகத்தில் 'ஈழநாடு' பத்திரிகையின் சொந்தக்காரருக்காக பாலசுப்பிரமணியம் சிவானந்தன் அவர்களால் அச்சிடப்பெற்று, எஸ். எம். யோசவ் வில்பிறட் அவர்களால் 1959-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 31-ந் திகதி வெளியிடப்பெற்றது.